# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2034 ஆடி 5 திங்கட்கிழமை (21-07-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:235



## பலாலி விமான ஓடு பாதையை திருத்தியமைக்க இந்திய உதவி

கொழும்பு,ஜூலை21

பலாலி விமான நிலைய ஓடு பாதையைத் திருத்தி நவீனமயப் படுத்துவதற்கு இந்திய அரசின் உதவியை இலங்கை நாடியிருக்கிறது என்று தகவல் வெளியாகியுள்ளது.

வடக்கின் ஒரேயொரு விமானத் தளமான பலாலி விமான நிலையத்தின் ஓடுபாதைகள் சேதமடைந்தும் சீரின்றியும் வசதியற்றதாகவும் இருந்து வருகிறது. அதனைத் திருத்தி அமைப்பதற்கான உதவியை இந்தியாவிடம் அரசு நாடியிருக்கிறது. புதுடில்லி அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்தவுடன் இதற்கான உதவிகள் இலங்கைக்கு வழங்கப்படும் என்று கூறப்படுகிறது.

கடந்த காலத்தில் விடுதலைப் புலிகள் நடத்திய ஷெல் தாக்குதலகளினால் பலாலி விமான நிலைய ஓடு பாதை ஆங்காங்கே சேதமடைந்து காணப்படுகிறது. அத்துடன், விமானங்கள் பாதுகாப்பாகத் தரையிறங்கக் கூடியதாக ஓடுபாதை அமைந்திருக்கவில்லை. (ஐ)



நேற்றுமுன்தினம் முல்லைத்தீவில் நடைபெற்ற "ஓயாத அலைகள் - I" வெற்றிச்சமரின் நினைவு விழாவில் விடுதலைப் புலிகளின் வடமுனைக் கட்டளைத் தளபதி கேணல் தீபன் சிறப்புரை ஆற்றுவதையும், புலிகள் படையணியின் அணிவகுப்புக் காட்சியையும் படங்களில் காணலாம். (மேலும் படங்கள் 2 ஆம் பக்கத்தில்)

(படம்: அலுவலகப் படப்பிடிப்பாளர்)

### அரசு சமர்ப்பித்துள்ள திட்ட வரைவின்படி

# தற்காலிக நிர்வாகக் கவுன்ஸிலுக்கு

# காணி, வரி, பொலிஸ் அதிகாரம் இல்லை!

## இந்த யோசனைகள் விடுதலைப் புலிகளை திருப்திப்படுத்துமா என்பது சந்தேகமே

கொழும்பு,ஜூலை21

**விடுதலைப் புலிகள் கோரிய வடக்கு - கிழக்கு இடைக்கால நிர்வாகம் தொடர்பாக 'தற்காலிக நிர்வகக் கவுன்ஸில்' (Provisional Administrative Council) என்ற பெயரில் அரசு சமர்ப்பித்திருக்கும் திட்ட வரைவில், சம்பந்தப்பட்ட கவுன்ஸிலுக்கு, காணி, பொலீஸ் நிர்வாகம், பாதுகாப்பு மற்றும் வரி அறவிடல் தொடர்பான எந்த அதிகாரமும் கிடையாது. எனினும், புனர்வாழ்வு, புனரமைப்பு, மீள்குடியேற்றம் தொடர்பான அதிகாரங்கள் இருக்கும்.**

**இத்தகைய திட்ட வரைவு புலிகளின் எதிர்பார்ப்பைப் பூர்த்திசெய்யுமா என்பது சந்தேகமே என அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்.**

'கலந்தாலோசனைக்குரிய ஆவணம்' என்ற பெயரில் அரசு சமர்ப்பித்துள்ள - நான்கு பக்கங்களைக் கொண்ட - திட்ட வரைவில் இடம்பெறும் முக்கிய அம்சங்கள் வருமாறு:-

★வடக்கு - கிழக்கு மாகாணங்களில யுத்தத்தால் சீரழிந்த கட்டுமானங்களையும், பொருளாதாரத்தையும் மீளக் கட்டியெழுப்புவது தொடர்பான விடயங்களில் - தீர்மானித்தல் மற்றும் நிறைவேற்றுகை தொடர்பான நிர்வாகம் ஆகியவற்றில் - புலிகள் குறிப்பிடத்தக்களவு பங்குபற்றக்கூடிய விதத்தில் இந்த ஏற்பாடு செய்யப்படுகின்றது.

வடக்கு - கிழக்குக்கான தற்காலிக நிர்வாகக் கட்டமைப்பு ஒன்றை உருவாக்குவதற்கான பேச்சுக்களில் முஸ

(16 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் கோருவது போன்ற நிர்வாக அலகு இலங்கையில் முன்னரும் இருந்துள்ளது!

### அது பற்றி ஆராய்கிறோம் என்கிறார் பிரதமர்

கொழும்பு,ஜூலை21

விடுதலைப் புலிகள் கோரியது போன்று சட்டத்திற்கும், அரசமைப்புக்கும் வெளியில் இணக்க சபைகள் உள்ளதா என நாம் ஆராய்ந்து பார்த்தோம். இலங்கையில் அவ்வாறான நிர்வாகக் கட்டமைப்புகள் இருந்தன என்பதற்கு எமக்கு ஆதாரங்கள் கிடைத்துள்ளன.

- இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருக்கிறார்.

பொலன்னறுவையில் நேற்று நடைபெற்ற ஐ.தே.க. மறுசீரமைப்பு கூட்டமொன்றில் பேசும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பிரதமர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

இப்போது நாம் அரசமைப்புக்கு முரணாகாத வகையில் இணக்கப்பாட்டின் அடிப்படையில் இடைக்கால நிர்வாக சபையை எவ்வாறு அமைப்பது என்பது தொடர்பான வியூகத்தையே தயாரித்துள்ளோம். இன்னும் பல படிமுறைகள் தாண்டிய பின்னரே இந்தச் சபைக்குரிய அதிகாரங்கள் பற்றிப் பேசுவோம். அதன்பின், இறுதியான இணக்கப்பாடொன்றுக்கு வருவோம்.

இங்கு இரண்டு தரப்புகள் மட்டும் சம்பந்தப்பட்டிருக்கவில்லை. நாங்கள் இப்போது பரஸ்பர கருத்துப் பரிமாற்றங்களை மேற்கொண்டு வருகின்றோம். இதில், முஸ்லிம்களின் கருத்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## தலைவர் பிரபாவுக்கு வெற்றிக் கேடயம்



முல்லைத்தீவு,ஜூலை21

முல்லைத்தீவு படைமுகாம் தாக்கி அழிக்கப்பட்ட வெற்றியைக் குறிக்கும் முகமாக முல்லை மாவட்டக் கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத்தினால் தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரனுக்கு வெற்றிக் கேடயம் ஒன்று பரிசளிக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் முல்லைத்தீவில் நடைபெற்ற வெற்றிவிழா நிகழ்வின் போது மீனவர் சங்க சமாசத் தலைவர் செ.இரத்தினம் மற்றும் செயலாளர் தணிகாசலம் ஆகியோரிடமிருந்து கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை தலைவர் பிரபாகரனின் சார்பாகக் கேடயத்தைப் பெற்றுக்கொண்டார்.

'ஓயாத அலைகள் - I' வெற்றிச் சமரை (16 ஆம் பக்கம் பார்க்க)

## இத்தாலி செல்ல காத்திருந்த 114 பேர் கண்டியில் கைது!

கொழும்பு,ஜூலை21

சட்டவிரோதமாக இத்தாலி செல்வதற்காக கண்டியில் தங்கியிருந்த 114 பேரை கண்டிப் பொலீஸார் நேற்று கைதுசெய்துள்ளனர்.

கண்டியிலுள்ள ஒரு கடைத் தொகுதியிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று கண்டி உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் குலசிறி உடுகம்பொல தெரிவித்தார்.

கைதுசெய்யப்பட்டவர்களுள் 83 இந்தியர்களும் 22 பாகிஸ்தானியர்களும் 9 பங்களாதேஷ் வாசிக

(16 ஆம் பக்கம் பார்க்க)


NSB

அவசரமாக காசு தேவைப்படுகின்றதா?

இப்போது தேசிய சேமிப்பு வங்கியின் ரன் சஹன அடகுச்சேவை



- ஒரு தங்க சவரனுக்கு கூடுதலான பணம்
- இரகசியம் பேணல் மற்றும் துரித சேவை
- தவணை அடிப்படையில் திரும்ப செலுத்தும் வசதி
- வருடாந்தம் 17% குறைந்த வட்டி
- கணனி மூலம் பரிசோதனை

NSB தேசிய சேமிப்பு வங்கியின் தங்கமான சலுகை

# முழுமையான விடுதலை என்பது ஆயுதப் போரின் மூலமே கிட்டும்!

## முல்லை முகாம் வெற்றி விழாவில் கேணல் விதுஷா

முல்லைத்தீவு,ஜுலை21

தமிழ் மக்களுக்கு முழுமையான ஒரு விடுதலை என்பது ஆயுதப் போராட்டத்தின் மூலமே கிடைக்கும். இது எமது கடந்த கால அனுபவங்களின் வாயிலாக நாம் கண்டுகொண்ட ஓர் உண்மையாகும்.

- இவ்வாறு தெரிவித்தார் தமிழீழ விடுதலைப்புலிகளின் மாலதி படையணியின் சிறப்புத் தளபதி கேணல் விதுசா.

'ஓயாத அலைகள் -I' வெற்றிச்சமரின 7ஆவது ஆண்டு நிறைவு வெற்றிவிழா நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் முல்லைத்தீவில் நடைபெற்றன. அதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அண்மையில் முல்லைத்தீவு கடற்பரப்பில் 12கடற்புலிகள் வீரச்சாவடைந்த பின்பு முல்லை மாவட்ட மக்கள் எமது தேசியத் தலைவருக்கு கடிதம் ஒன்றை அனுப்பிவைத்திருந்தார்கள்.

சமாதானத்தின் மூலம் உரிமைகள் எங்களுக்கு கிடைக்கப் போவதில்லை. எனவே, நீங்கள் யுத்தத்தைத் தொடங்குங்கள் என்று அந்தக் கடிதத்தில் மக்கள் கேட்டிருந்தார்கள். அந்தச் செய்தி எமக்கு ஓர் உற்சாகத்தைத் தந்தது.

உங்களது அத்தகைய உணர்வுகளை நாங்கள் மதிக்கின்றோம். ஆனால், அதற்கு முன்னர் எமக்கு சில பணிகள் இருக்கின்றன. மீண்டும் நாங்கள் சண்டையை ஆரம்பித்தால் எமது மக்களுக்கு பாரிய அழிவுகள் ஏற்படும் என்பது எமக்குத் தெரியும்.

அதேவேளை, பல வெற்றிகளையும் நிச்சயமாக நாங்கள் ஈட்டிக்கொள்ளலாம். எனவே, பின்னர் வருகின்ற நிகழ்வுகளை நாங்கள் முற்கூட்டியே அறிந்துகொண்டு அதற்கு இணங்க எமது செயற்பாடுகளை முன்னெடுக்கவேண்டும்.

எமது மக்கள் தற்போதைய சமாதான சூழ்நிலையில் பல அபிவிருத்தி, புனரமைப்பு வேலைகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், மீண்டும் ஒரு சண்டை தொடங்கினால் அதற்காக நாங்கள் என்ன செய்யவேண்டும் என்பதை உணர்ந்து கொண்டு எவரும் செயற்படுவதாகத் தெரியவில்லை.

வீடுகளைப் புதிதாக அமைக்கின்றீர்கள் அது எமக்கும் சந்தோசம்தான். ஆனால், அவற்றை அமைக்கும்போது சில பதுங்கு குழிகளையும் அமைத்து வைத்துக்கொள்ளமுடியும். எமது மக்கள் தொடர்ந்தும் தமது மண்ணில் சுதந்திரமாக வாழவேண்டும் என்றே விரும்புகின்றார்கள். எனவே, மக்கள் தமது பாதுகாப்புக்கான நடவடிக்கைகளை முன்னேற்பாடாக செய்து வைத்துக் கொள்ளவேண்டும்.

முல்லைத்தீவு மண் மீட்பிலே பொதுமக்களின் பங்கு அளப்பரியது. வெற்றிச் செய்தியைக் கேள்விப்பட்டவுடன பொதுமக்கள் அனைவரும் இங்கு ஓடி வந்து எமக்குப் பல உதவிகளைச் செய்தார்கள். அத்தகைய மனப்பான்மை எமது மக்களிடம்



முல்லை முகாம் வெற்றி விழாவில் தேசியக் கொடியை ஏற்றுகிறார் கேணல் சூசை.

தொடர்ந்தும் இருக்கவேண்டும். நாங்கள் இப்பொழுது பெரு வெற்றிகளைப் பெறக்கூடியளவுக்கு பலமாகவே இருக்கிறோம். இந்தப் பலம் தொடர்ந்தும் பேணப்படவேண்டும். அப்போதுதான யுத்தமாக இருந்தாலும், பேச்சு வார்த்தையாக இருந்தாலும் நாம் வெற்றிபெறமுடியும். இன்றைய காலகட்டத்தில் நாம் மிகுந்த விழிப்புடன் இருந்து எமது போராட்டத்தை வளர்க்க வேண்டும். ஒவ்வொருவரும் விடுதலைப் போராட்டத்துக்கு தொடர்ந்தும் பங்களிப்பு செய்யவேண்டும். இதுவரை ஆற்றிய உதவிகள் போதும்தானே என்று எண்ணிக்கொண்டு தமது பங்களிப்பை குறைத்துக்கொள்ளக்கூடாது.

டோக்கியோ மாநாட்டுக்கு நாங்கள் செல்லாதது குறித்து சிலர் கேள்வி எழுப்புகிறார்கள். எமது தமிழர் தாயகப் பகுதிகள் அபிவிருத்தி அடையக்கூடாது என்பதை நோக்கமாகக் கொண்டு அரசு திட்டமிட்டு செயற்பட்டு வருகிறது.

எனவே, எமக்குரிய நிதியை நாமே கையாளக்கூடிய ஓர் அதிகாரபூர்வமான அமைப்பு இல்லாமல் நாம் எப்படி டோக்கியோ மாநாட்டுக்குச் செல்வது.

எமது போராட்ட வரலாற்றில் நாங்கள் உயிர்களை விலைகளாகக் கொடுத்தே ஒவ்வொரு நகர்வுகளையும் வெற்றிகரமாக செய்துகொண்டிருக்கின்றோம். எந்தவொரு விடயத்தையும் பேரம் பேசுகின்ற ஒரு நிகழ்வாகப் பார்க்கமுடியாது. எமது மக்கள் இந்த மண்ணில் நிம்மதியாக வாழ்வதற்காக எங்களால் கேட்கப்படும் உரிமைகளை அரசு எமக்குத் தரவேண்டும். அப்படியில்லாமல் போராட்டத்தைப் பேரம் பேசும் அடிப்படையில் பார்ப்பார்களேயானால் எமது இலட்சியத்தை மீண்டும் போரின் மூலம்தான் பெற்றுக்கொள்ளமுடியும்.

தொடர்ச்சியான யுத்தத்தினால் எமது மக்கள் மிகுந்த களைப்படைந்துள்ளனர். அவர்களுக்கான ஒரு ஓய்வு காலமாகவே இந்த சமாதான காலம் அமைந்திருக்கிறது. எனவே, மீண்டும் யுத்தம் மூண்டால் அதை எதிர்கொள்ளக்கூடிய வலிமையை மக்கள் கொணடிருக்கவேண்டும். அப்போதுதான் எம்மைநோக்கி வருகின்ற எந்தச் சவாலையும நாம் முறியடிக்கமுடியும - என்று தெரிவித்தார்.

வடமுனைக்கட்டளைத் தளபதி கேணல் தீபன் உரையாற்றும்போது கூறியதாவது:-

ஒரு பெரும் ஆக்கிரமிப்புச் சின்னமாக, கூட்டுப் படைத்தளமாக இருந்து வந்தது இந்த முல்லைத்தீவு படைத்தளம். ஆரம்பத்தில் குறைந்தளவு படையினரைக்கொண்ட சிறிய முகாமாக இருந்த இந்த படைத்தளம் காலத்துக்குக்காலம் பெருப்பிக்கப்பட்டு பலப்படுததப்பட்டிருந்தது.

நாங்கள் ஓயாத அலைகளாக இப்படைத்தளத்தின் மீது பாய்ந்து இதனை மீட்கும்போது இதன் விஸ்தீரணம் ஏறத்தாள 11 கிலோ மீற்றர் சுற்றளவைக் கொண்டிருந்தது.

இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட படையினரைக் கொண்ட இந்த முகாம, பெரும் பாதுகாப்பு வேலிகளைக் கொண்டு அமைந்திருந்தது. இங்கு ஆட்லறிகள், மோட்டார்கள் கவசவாகனங்கள் என்பவற்றுடன் கடல் நடமாட்டங்களைக் கண்காணிக்கக் கூடிய 'ராடா' கருவிகளும் பொருத்தப்பட்டிருந்தன.

இவ்வளவு பலம் வாய்ந்த இந்த முகாம் எங்களால் துடைத்தெறியப்பட்டது. இந்த முகாம் தொடர்பான வேவுப் பணிகளை வேவுப்புலிகள் மிகவும் துல்லியமாக மேற்கொண்டு வந்தார்கள். அவர்கள் இங்கு படைமுகாமுக்குள் நுழைந்து இங்கிருந்த ஆட்லறிகளைத் தொட்டுப்பார்த்துவிட்டு வந்தார்கள். அவ்வளவுக்கு வேவுநடவடிக்கைகள துல்லியமானதாக இருந்தன.


வேவுக்கு வருகின்ற புலிகள் ஒவ்வொரு நாளும் திரும்பிவருகின்றபோது சில கண்ணி வெடிகளைக் கொண்டு வருவார்கள். கண்ணிவெடி வயல்கள சூழ்ந்திருந்த பிரதேசத்தின் ஊடாக அவர்கள் வேவுக்குச் செல்லும்போது தமது பாதையில் இருக்கும் கண்ணிகளை இரவு வேளைகளில் அகற்றிக கொண்டு தான் செல்வார்கள். வரும்போது அவற்றை எடுத்து வருவார்கள.

இந்த முகாமுக்கான வேவு நடவடிக்கையில் மட்டும் 5 போராளிகள் வீரச்சாவடைந்தார்கள்; 10 பேர் அங்கங்களை இழந்தார்கள். இவ்வளவு சிரமத்தின் மத்தியிலேயே இந்த முகாம மீதான தாக்குதல்கள் தொடுக்கப்பட்டன.

340 போராளிகள் தாக்குதலில் வீரச்சாவடைந்தார்கள். அவர்களின் இரத்தத்தில் ஊறியதுதான் இந்த முல்லை மண். நான் நின்று பேசிக்கொண்டிருக்கின்ற இந்த இடத்தில் படையினரின் இரண்டு பாரிய மோட்டார்கள் இருந்தன. இதற்கு 25 மீற்றர் பின்பக்கமாக இரு ஆட்லறிகள் நிறுத்தப்பட்டிருந்தன.


அவையெல்லாம் எமது கைகளில் வந்தன. முல்லைத்தீவு வீழ்ந்தது என்று அறிந்த முல்லை மக்கள் உடனடியாக இங்குவந்து எமக்குப் பல உதவிகளை வழங்கினார்கள். அவர்களின் பங்களிப்பு உன்னதமானது.

எமது பலத்தினால்தான் எமது சுதந்திரத்தையும் நிம்மதியான வாழ்வையும் ஏற்படுத்த முடியும், எனவே எமது படைப்பலத்தைத் தொடர்ந்து பேணுவதற்கு ஒவ்வொரு மக்களும் உறுதி எடுத்துக்கொள்ளவேண்டும் - என்றார். (ஐ-4)





அக வணக்கம்






வெற்றிவிழா மேடை முன்றிலில் தளபதிகள்.



மாவீரர்களுக்கு அஞ்சலி





சிறுவர்களின் அணிவகுப்பு



மாவீரர்களுக்கு அஞ்சலி

# பிரிட்டிஷ் நிபுணரின் மரணம் தற்கொலை என்று அறிவிப்பு!


## ஆனால் கொலை என்று சர்வதேச அளவில் குற்றச்சாட்டு

லண்டன்,ஜூலை21

பிரிட்டனில் கடந்த வெள்ளிக்கிழமை சடலமாக மீட்கப்பட்ட உயிரியல் ஆயுத விவகார நிபுணர் டாக்டர் டேவிட் கெலி(வயது 59) தற்கொலை செய்துகொண்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தனது கையை அறுத்து இரத்தத்தை ஓடவிட்டு அவர் தற்கொலை செய்துகொண்டுள்ளதாகவும் -

அவரது உடலின் அருகே கண்டெடுக்கப்பட்ட கத்தியும், வலியைப் போக்கும் மாத்திரைகளும் இதனை உறுதிப்படுத்துவதாகவும் - பிரிட்டிஷ் பொலீஸார் தெரிவித்தனர்.



ஆனால், கெலி, கொலை செய்யப்பட்டுள்ளதாக சர்வதேச அளவில் குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன. கெலியின் மரணத்துக்கு பிரிட்டிஷ் அரசுதான் காரணம் என்று பிரிட்டனில் வெளியாகும் பத்திரிகைகள் பலவும் குற்றஞ்சாட்டியுள்ளன. கடந்த வியாழக்கிழமை காலை நடைப்பயிற்சிக்குச் செல்வதாக மனைவியிடம் கூறிவிட்டுச் சென்ற கெலி, இரவாகியும் வீடு திரும்பாததால் பொலீஸாருக்கு தகவல் கொடுக்கப்பட்டது. பொலீஸார் அவரைத் தேடினர்.

ஒக்ஸ்போர்ட் ஷையர் என்ற இடத்தில் அடர்ந்த மரங்களுக்கு இடையே கெலி இறந்து கிடந்தமை வெள்ளிக்கிழமை கண்டுபிடிக்கப்பட்டது.

ஈராக் பேரழிவு ஆயுதங்கள் தொடர்பான பொய்யான தகவல்களை வழங்கி பிரிட்டனும் அமெரிக்காவும் ஈராக்மீதான போரைத் தொடுத்தன என்ற குற்றச்சாட்டு நிலவிவரும் வேளையில், கெலி இறந்திருப்பது அங்கு பெரும் சர்ச்சையை உருவாக்கியுள்ளது.

பேரழிவு ஆயுதங்கள் வைத்திருப்பதற்காகக் காரணம் காட்டியே, அமெரிக்காவும் பிரிட்டனும் ஈராக் மீது தாக்குதல் நடத்தின. ஆனால், போருக்குப் பிறகு நடத்தப்பட்டுவரும் சோதனைகளில் ஈராக்கில் பேரழிவு ஆயுதங்கள் எதுவும் கண்டுபிடிக்கப்படவில்லை. அமெரிக்காவும் பிரிட்டனும் தங்கள் நாட்டு புலனாய்வு அமைப்புக்களின் அறிக்கையில் கூறப்பட்டிருந்த தகவலைத் திரித்துக் கூறி, ஈராக் மீது இராணுவ நடவடிக்கை எடுத்துவிட்டதாகத் தற்போது பெரும் சர்ச்சை கிளம்பியுள்ளது.

பிரிட்டனில் இப்பிரச்சினையை பி.பி.ஸிதான் முதலில் கிளப்பியது. அது தொடர்பான தகவலை பி.பி.ஸிக்கு டேவில் கெலிதான் கூறினார் என்று தகவல் வெளியாகியிருந்தது. பிரிட்டனில் கடந்த ஒருவாரமாக இதனால் பெரும் சர்ச்சை ஏற்பட்டது. பி.பி.ஸிக்கு தகவல் கொடுத்தது தொடர்பாக பிரிட்டன் நாடாளுமன்றக் குழு கெலியிடம் விசாரணை நடத்தியது.

இந்நிலையிலேயே, கெலி மர்மமான முறையில் இறந்துள்ளார். கெலியன் மரணம் குறித்து விரிவான விசாரணைகளை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு பிரதமர் ரொனி பிளயர் பொலீஸாருக்கு உத்தரவிட்டுள்ளார். (ஒ)

# முன்னாள் சர்வாதிகாரி இடி அமீன் 'கோமா'வில்



ஆபிரிக்க நாடான உகண்டாவின் முன்னாள் சர்வாதிகாரி இடி அமீன் தற்போது 'கோமா' நிலையில் உள்ளதாகக் கூறப்படுகிறது.

1971ஆம் ஆண்டு முதல் 1979 ஆம் ஆண்டுவரை உகண்டாவில் இடி அமீன் நடத்திய ஆட்சி ஆபிரிக்க வரலாற்றில் இரத்தக்கறை படிந்த காலமாகக் கருதப்படுகிறது. 1979ஆம் ஆண்டு தன்சானியப் படைகள் உகண்டாவிற்குள் நுழைந்து இடி அமீனை ஆட்சியிலிருந்து அகற்றின. நாட்டைவிட்டுத் தப்பியோடிய இடி அமீன் இஸ்லாமிய மதத்துக்கு மாறி சவூதி அரேபியாவில் தஞ்சம் புகுந்திருந்தார்.

இந்நிலையில், உயர் இரத்த அழுத்தத்தால் பீடிக்கப்பட்ட தனது கணவர் கடந்த வெள்ளிக்கிழமை முதல் 'கோமா' நிலையில் உள்ளதாகவும் -

அவர் இறந்தால் உகண்டாவில் மாரியாதையுடன் அவரது இறுதிக் கிரியைகளை நடத்த அனுமதிக்கவேண்டுமென்றும் -

அவரது மனைவி தெரிவித்துள்ளார்.

இடி அமீனின் ஆட்சிக் காலத்தில் 90 நாள்களில் வெளிநாட்டவர்கள் அனைவரும் சொத்துகளைக் கைவிட்டு வெளியேற்றப்பட்டதும் -

கண்ணில் கண்ட அழகிய பெண்களையெல்லாம் இடி அமீன் தனது ஆசை நாயகிகளாக ஆக்கிக்கொண்டதும் -

4 லட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டதும் -

குறிப்பிடத்தக்கவை. (ஒ)

# சிந்துவெளி நாகரிகத்தை ஆரியர்களே அழித்தார்கள்!

## ஆய்வாளர் தெரிவிப்பு

சிந்து சமவெளி நாகரிகத்தை அழித்தவர்கள் பிராமண ஆரியர்களே என்று தன்பத் சிங் தாணியா என்ற ஆய்வாளர் தெரிவிக்கிறார்.

'ஹரப்பா புதிர் விடுவிக்கப்பட்டது' என்ற புத்தகத்தில் இத்தகவலை அவர் எழுதியிருக்கிறார். புத்தகத்தை அவர் டில்லியில் வெளியிட்டார்.

ஹரப்பா நாகரிகம் வளர்ந்த இடத்தில் நடத்திய அகழ்வு ஆய்வுகளின் போது கிடைத்த இலச்சினைகள், இதர தடயங்கள் ஆகியவற்றை ஆய்வு செய்தபோது இந்த உண்மை சந்தேகமறத் தெரிந்ததாக அவர் உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

3 ஆண்டுகளுக்கு முன்னர் நான் இலச்சினைகளையும் இதர தடயங்களையும் ஆராய்ச்சி செய்து சில உண்மைகளைத் தெரிவித்தேன். இதை ஏற்கமுடியாது, நடுவர் ஒருவரை நியமித்து உங்கள் கூற்றை ஆராய்கிறோம் என்று தொல்லியல் துறையினர் தெரிவித்தனர். சொன்னபடி அவர்கள் செய்யவில்லை. எனவே தான் எனது ஆய்வுகளைப் புத்தகவாயிலாக வெளியிட்டுவிட்டேன் என்கிறார் தன்பத் சிங்.

'இந்திய தொல்லியல் துறையின் தந்தை' என்று அழைக்கப்படும் மார்டிமா வீலர் இதே கருத்தை 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் தெரிவித்திருந்தார். அவரது கூற்றை அப்போது பலர் நம்பவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ)

# நடிகை மர்லின் மரணம் போன்ற மற்றொன்று

உயிரியல் ஆயுத விவகார நிபுணர் டாக்டர் டேவில் கெலியின் மரணம் பிரபல ஹொலிவூட் நடிகை மர்லின் மன்றோவின் மரணத்தைப் போன்று மர்மமானதாகவே இருந்துவிடும் என்று நம்பப்படுகிறது.

அமெரிக்காவின் அதிபராக இருந்த ஜோன் எவ்.கென்னடி உட்பட அமெரிக்க அரசியலின் உயர்மட்டப் பிரமுகர்கள் மற்றும் உயர் அதிகாரிகளுடன் பிரத்தியேகத் தொடர்புகொண்டிருந்ததாக அப்போது தகவல்கள் வெளிவந்தன. இந்நிலையில், ஒருநாள் தனது படுக்கையறையில் மர்லின் மன்றோ சடலமாகக் கிடந்தார். விசாரணைகளின் பின்னர் மாலின் மன்றோ விஷம் அருந்தித் தற்கொலை செய்துகொண்டதாக அறிவிக்கப்பட்டது. ஆனால் கென்னடி உட்பட உயர் மட்டத்தினர் குறித்த இரகசியங்களை மர்லின் மன்றோ அம்பலப்படுத்திவிடக்கூடும் என்ற அச்சம் காரணமாக அமெரிக்க மத்திய புலனாய்வுத்துறையான சி.ஐ.ஏ. திட்டமிட்டு விஷ ஊசி ஏற்றி மர்லின் மன்றோவைக் கொலைசெய்ததாக உறுதிப்படுத்தப்படாத தகவல்களும் வெளியாகின. ஆயினும், மர்லின் மன்றோவின் மரணம் முடிவு தெரியாத மர்மமாகவே இன்றும் தொடர்கிறது.

இதைப்போன்றே, தற்போது கெலியன் மரணமும், தொடரும் விசாரணைகளும் அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ஒ)

# தென்கொரிய அதிகாரிகளுடன் பிரதமர் ரொனி பிளயர் பேச்சு

சோல்,ஜூலை21

பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளயர் ஜப்பானுக்கான விஜயத்தை முடித்து நேற்று தென்கொரியாவுக்குச் சென்றார்.

தென்கொரிய விமான நிலையத்தைச் சென்றடைந்த பிரதமர் பிளயரையும், அவரது மனைவியையும், தென்கொரியாவிற்கான பிரிட்டிஷ் தூதுவர் வரவேற்றார்.

வடகொரியாவினால் ஏற்படக்கூடிய அணு ஆயுத அச்சுறுத்தல்கள் பற்றிப் பிரதமர் பிளயர் தென்கொரிய அதிகாரிகளுடன் உரையாடினார்.

வடகொரியாவின் அணு ஆயுத விடயத்தில் அப்பிராந்திய நாடுகள் பேச்சு நடத்தவேண்டும் என்ற அமெரிக்காவின் கோரிக்கையை பிளயர் ஆதரித்து தென்கொரிய அதிகாரிகளிடம் கருத்துத் தெரிவித்திருக்கிறார்.

தென்கொரிய ஜனாதிபதி றோ-மூ-ஹுயன் வடகொரியாவினால் ஏற்படக்கூடிய அச்சுறுத்தல்கள் பற்றி பிரதமர் பிளயரிடம் விளக்கமளிப்பார் என்றும், இதற்கு இராஜதந்திர ரீதியான தாவுக்கு பிளயர் உதவவேண்டும் என்று அவர் கோருவார் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கிடையே -

அணு ஆயுத எரிபொருளில் இருந்து புளுட்டோனியம் தயாரிக்கப்பட்டதற்கான ஆதாரங்களை வடகொரிய எல்லையில் உள்ள உணரிகள் முகர்ந்துள்ளன என்று அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஏற்கனவே வடகொரியா, அணு ஆயுத தொழில்நுட்பத்தை மீள இயக்கியதாகக் குற்றஞ்சாட்டிய அமெரிக்கா, தற்போது மற்றொரு மறைவான அணுவாயுத உற்பத்தி நிலையம் ஒன்றை அது இயக்கி வருவதாகக் கூறியுள்ளது.

# ஷியா முஸ்லிம்கள் திரண்டு ஈராக்கில் ஆர்ப்பாட்டம்!

## தாக்குதலில் அமெ. வீரர் இருவர் பலி!!

பக்தாத்,ஜூலை21

அமெரிக்கா அமைத்த இடைக்கால நிர்வாக ஆட்சியை எதிர்த்து 10.ஆயிரத்துக்கும் அதிகமான ஷியா முஸ்லிம்கள் நேற்றுமுன்தினம் பக்தாத்தில் மாபெரும் ஆர்ப்பாட்டத்தை நடத்தினர்.

சதாமின் ஆட்சியின் போது, அதிகார பீடங்களில் இருந்த ஷியா முஸ்லிம்கள் தற்போது அமெரிக்கா அமைத்துள்ள இடைக்கால நிர்வாக ஆட்சியில் ஓரங்கட்டப்பட்டுள்ளனர். இதனைக் கண்டிக்கும் வகையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் குரல் எழுப்பினர்.



ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடும் ஈராக்கியர்கள்

இதற்கிடையே -

இரண்டு அமெரிக்கப் படையினர் நேற்று குர்திஷ் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள வடக்கு ஈராக்கில் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர். கிரனேட் மூலமும் சிறிய துப்பாக்கி மூலமும் இந்தத் தாக்குதல் நடந்ததாக அமெரிக்கப் படையினர் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்கப் படையினர் மீது நாளாந்தம் தாக்குதல்கள் அதிகரித்து வருவதையடுத்து ஐ.நா.சபை ஈராக் விவகாரங்களில் பங்கேற்கவேண்டும் என்பதை வலியுறுத்தி பிரேரணை ஒன்றைக் கொண்டுவரும் முயற்சியில் அமெரிக்கா இறங்கியுள்ளது. ஏனைய நாடுகளும் ஈராக்கிற்கு படைகளை அனுப்ப வேண்டும் என்றும், அல்லது அந்த நாடுகள் ஈரக்கில் கூட்டுப்படைகளுக்கு ஏற்படும் செலவுகளை ஈடுசெய்ய முன்வரவேண்டும் என்றும் தனது பிரேரணையில் அமெரிக்கா கோரவுள்ளது. அமெரிக்கா மாதம் ஒன்றுக்கு 4 பில்லியன் டொலர்களை ஈராக்கில் செலவிடுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# சடலங்களைப் பயன்படுத்தி எரிபொருள் கொள்வனவு!

ஸிம்பாப்வேயில் கடந்த ஐந்து மாதங்களில் எரிபொருளின் விலை பல மடங்காக அதிகரித்திருக்கிறது. அந்த விலையிலும் கூட அதனை வாங்குவது சுலபமல்ல. நீண்ட வரிசையில் நின்று எரிபொருளைப் பெற்றுக்கொள்வதற்குப் பதிலாக சிலர் பிரேதங்களை வாடகைக்குப் பெற்று அவற்றைத் தங்கள் வாகனங்களில் கொண்டு வருகிறார்கள். பிரேதம் ஏற்றப்பட்டுள்ள வாகனம் தாமதப்படுத்தப்படுவதில்லை என்பதால் வரிசையில் மணித்தியாலக் கணக்காக காத்திருக்காமல் அவர்களால் எரிபொருள் பெற்றுச்செல்ல முடிகின்றது.

பிரேதம் ஒன்று சுடுகாட்டுக்குக் கொண்டுசெல்லப்படுவதற்குப் பதிலாக பிரேதசாலைக்கு மீண்டும் கொண்டு செல்லப்படுவது அவதானிக்கப்பட்டதை அடுத்தே பிரேதத்தை வாடகைக்குப் பெறும் மோசடி அம்பலத்துக்கு வந்தது.

இச்சம்பவம் தொடர்பாக பிரேதசாலை ஊழியர்களும் பிரேதத்தை வாடகைக்குப் பெற்றுக்கொண்டவரும் கைதுசெய்யப்பட்டிருக்கிறார்கள். பிரேதத்தை வாடகைக்கு விடுவது தொடர்பாக கடுமையான நடவடிக்கை எடுக்கப்போவதாக அரசு எச்சரித்திருக்கிறது.

பண்டமாற்று முறையில் லிபியாவிடம் இருந்து ஸிம்பாப்வே எரிபொருள் பெற்று வந்தது. அந்த ஏற்பாடு கைவிடப்பட்டதை அடுத்தே எரிபொருளுக்கு பெருந்தட்டுப்பாடு ஸிம்பாப்வேயில் ஏற்பட்டிருக்கிறது.

# லைபீரிய கிளர்ச்சியாளர்களுக்கு அமெரிக்க தூதுவர் எச்சரிக்கை!

லைபீரிய தலைநகர் மொன்றோவியாவுக்குள் ஊடுருவுவதற்காக, கிளர்ச்சியாளர்கள் மேற்கொண்டு வரும் சண்டையை நிறுத்துமாறு அங்குள்ள அமெரிக்கத் தூதர் எச்சரிக்கையுடன் கூடிய வேண்டுகோளை விடுத்துள்ளார்.

அறிக்கை ஒன்றின் மூலம் இந்த வேண்டுகோளை விடுத்துள்ள அவர், சமாதானப் பேச்சுக்களில் கவனம் செலுத்த முன்வருமாறு கிளர்ச்சியாளர்களுக்கு அழைப்பும் விடுத்துள்ளார்.

அந்த அறிக்கையில், தலைநகர் மொன்றோவியாவை போர் நெருங்கிவிட்டது. கிளர்ச்சியாளர்கள் நடந்துகொள்ளும் விதத்தை அமெரிக்கா உள்ளிட்ட பலநாடுகள் உன்னிப்பாகக் கவனித்து வருகின்றன கிளர்ச்சியாளர்களின் தாக்குதலில் நூற்றுக்கணக்கானோர் கொல்லப்பட்டுள்ளனர். இதனால், பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த கிளர்ச்சியாளர்கள் முன்வரவேண்டும் - என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை - கிளர்ச்சியாளர்களை ஒடுக்கும்வரை தான் பதவி விலகப் போவதில்லை என்று ஜனாதிபதி ரெய்லர் அறிவித்துள்ளார்.

பன்னாட்டு அமைதிப்படை போதிய எண்ணிக்கையில் லைபீரியாவுக்குள் பிரசன்னமாகும் வரை தான் பதவியில் இருந்து விலகப் போவதில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை வானொலியில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஆனால் மேற்கு ஆபிரிக்க அமைதிப் படையொன்று முதலில் அங்கு சென்றாலன்றி அமெரிக்கா தனது படைகளை அனுப்புவது பற்றி முடிவு செய்யப்போவதில்லை என்று ஐ.நாவின் ராஜதந்திரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கிளர்ச்சிப்படைகள் பிரயத்தனத்தின்பின் ஓர் ஆற்றை கடந்து தலைநகர் மென்றோவியாவினுள் பிரவேசித்துள்ளதாக சனியன்று அரசு தெரிவித்தது.

(ஒ)

# யாழ்.கல்லூரியின் பதினாறாவது அதிபராக திருநிலைப்படுத்தப்படும் திரு.நோயல் அரசரட்ணம் விமலேந்திரன் அவர்களின் பணியேற்பு வாழ்த்து மடல்

### MESSAGE BY MR. A. GUNATHASAN,
(Chairman, Board of Directors of Jaffna College)

It gives me great pleasure as Chairman of the Board of Directors of Jaffna College to felicitate Noel Arasaratnam Vimalendran on his assuming the high position of Principal of Jaffna College. The Board of Directors have unanimously decided to appoint Vimalendran, considering his academic achievements, knowledge, experience and ability. The Board has confidence that he will be able to steer the College to a position of primacy that it enjoyed in the past. We are aware that the College has suffered through the turbulent period and the traumatic effects of the civil strife that have plagued the country over the last two decades. We are now privileged to enjoy the process of peace that has been brought about by the present Government, which has entered into negotiations to solve the burning problem. The College has embarked on a programme of resuscitation to rebuild its potential to provide education of the highest standard to the students. It is our sincere wish and hope that God Almighty will bless the new principal and the College.

### CONGRATULATIONS MR.NOEL VIMALENDRAN
(DR.(MISS) C.V.SELLIAH, Principal, Uduvil Girls' College)

Uduvil sends greetings and good wishes to you on this great day when you take the helm to steer the esteemed Jaffna College

We are confident that you will be an inspirational force to uplift and sustain the lofty ideals which our predecessors have set before us.

May Jaffna College grow from strength to strength and keep open and enlarge the outlets for creative talents of staff and students to serve the College community and the nation at large.

### MESSAGE BY MR.S.THANAPALAN
(Principal of St. John's College, Jaffna)

Jaffna College is one of the pioneer Educational Institutions established in this country by the American Missionaries. The school continues to shine as a beacon of light in the field of Education.

Great men who adorned the chair at the helm have steered the ship, upholding the ideals of Education and Christian life.

Mr.Noel Vimalendran who has stepped into the shoes due to the sudden demise of Rev.Paul, is a person who has come up the ladder in his career at Jaffna College.

His experience as a student, teacher, vice principal and acting principal at Jaffna College, added to his extensive travels abroad will no doubt help him to take up the Post of Principal as "a duck to water".

*May the good lord guide him to lead Jaffna College from strength to strength.*

### FELICITATIONS FROM THE RECTOR, ST.PATRICK'S COLLEGE, JAFFNA
(Revd. Dr. Justin B Gnanapragasam, Rector-St.Patrick's College, Jaffna)

I am, indeed, very pleased to send my congratulations and best wishes to Mr.Noel Wimalendran on his assuming of duty as Principal of Jaffna College, Vaddukodai.

I have known Mr.Noel Wimalendran for quite some years and I have, no doubt, that he will, with his administrative capabilities and academic qualifications, will lead Jaffna College to greater heights. Though he is known as a strict disciplinarian, he has a kind heart for the poor and the weaker students. His persevering and affable charter will enable him to form his students to be fine gentlemen and gentlewomen. He, being an ecumenist, will be understanding of men of other Christian denominations and faiths as well.

The longtime friendship and cordiality that existed between St.Patrick's College and Jaffna College will surely, I hope, grow still more under his Captainship of Jaffna College. I join the Staff, students and old Boys of St.Patrick's College in wishing Mr.Noel Wimalendran a long and fruitful ministry to Jaffna College.

*May God's choicest blessings be with him always*

### யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி
(க.இராசதுரை, அதிபர், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி)

யாழ்ப்பாணத்தின் கல்விப் பாரம்பரியத்தில் யாழ்ப்பாணக் கல்லூரியின் இடம் மிகமுக்கியமானது. கிறிஸ்தவப் பாரம்பரியத்தையும் – யாழ்ப்பாணத்தின் கல்விப் பாரம்பரியத்தையும் இணைக்கின்ற ஒரு ஆழமான பாலமாக இது இருந்துவந்துள்ளது. தென்னிந்தியத் திருச்சபையின் கல்விச் சேவையின் விழுதுகளில் அடிமரமாக நின்று ஆழ வேரூன்றி குடாநாட்டில் மட்டுமன்றி நாட்டின் பல்வேறு பாகத்திலும் தனது கிளைகளைப் பரப்பி, கல்வி நிழல் மட்டுமன்றி ஆன்மீக நிழலையும் கொடுத்து வருகின்றது.

இந்தப் பெரும் நிறுவனத்தினை வழிநடத்திச் சென்ற பல பேராசான்களின் வழியில் திரு. நோயல் விமலேந்திரன் அவர்களும் இன்று அதிபராகத் தனது பொறுப்பை ஏற்பதை எமது கல்லூரிச் சமூகம் சார்பாக வாழ்த்துவதில் மிக மகிழ்ச்சியடைகின்றேன்.

அவரது சேவைக்காலத்தில் இப்புகழ்பூத்த நிறுவனத்தின் பெருமை மேலும் உயர்வு பெற வாழ்த்துகின்றேன்.

### MESSAGE BY MR.G.RAJANAYAGAM
(General Manager, JDCSI)

We congratulate Mr.Noel A.Vimalendran on his appointment as principal of Jaffna College. He is the 16[th] Principal to continue the services and the Missionary work envisaged by Dr.Daniel Poor the first Principal of Jaffna College.

Noel with his God given talent and with the sprit of service will guide this institution in the vision and courage.

Jaffna College will prosper in the field of educaiton, sports leadership and servitude in the years to come.

We also wish to congratulate Mrs. Anoja Vimalendran for giving him moral support to achieve this status.

May God Bless both of them.

### MESSAGE BY REV.G.NADARAJAH
(Director C.I.S.R.S)

It is with great pleasure that we congratulate Mr.Noel Vimalendran on his appointment as Principal of Jaffna College. He is the 7[th] National Principal of Jaffna College.

Jaffna College has gone through very difficult situation during the last twenty years because of ethnic conflict. In 1995, when everybody left Jaffna he stayed back at Vaddukoddai with his wife and Children inorder to safeguard the properties of Jaffna College.

He was Middle school supervisor and appointed as the Vice-Principal on Feb. 22[nd] 2000. He was also the Warden of Bunker Hall.

We Extend our Congratulations and May God spare him for many more years of useful service.

### MESSAGE BY THE BISHOP THE RT. REV. DR.S.JEBANESAN

Jaffna College is now 180 years old. Noel Arasaratnam Vimalendran, who will be installed as Principal at this historic occasion will be the 16th Principal of the college. In 1823 the American Congregationalist Missionaries established this Institution at Vaddukoddai believing firmly in the Jeffersonian concept that education is the only avenue to all kinds of progress. During the past 180 years Jaffna College has contributed must for the educational advancement, cultural development and economic growth of the people of Sri Lanka and of Jaffna in particular. No doubt we have experienced joy, success, and achievements and also sorrow, failure and anguish. The past 20 years had been a turbulent period in the North in which Jaffna changed hands five times.

Today the situation has changed very much. A solution to the ethnic problem appears to be insight. Jaffna College is slowly regaining its status in the educational system of Sri Lanka.

Mr.N.A.Vimalendran who is installed as Principal today is an old boy of Jaffna College and has had his educaiton in the Universities of Sri lanka. London and Switzerland. He had worked under four Principals and ---------- line & dependable and efficient administrator He has the capacity to command the respect of the community and has close links with the church.

His wife is the grand daughter of Mr.S.T.Jeevaratnam who taught Chemistry at Jaffna College for three generations of students. The Alumni of Jaffna College, now living in various parts of the world have pledged their support to the new Principal and are expecting much growth during his Principalship.

May God bless Mr.Vimalendran as he takes charge this noble and hallowed institution which we all love.

"We Love her Name, we'll guard her fame, While life and memory last:
Our loyalty shall be the same, Where'er our lot be cast"



### எங்கள் அதிபர்

நோயல் அரசரட்ணம் விமலேந்திரன் பேராதனைப் பல்கலைக் கழக விஞ்ஞான மாணிப்பட்டதாரியாவார். அத்துடன், லண்டன் பல்கலைக்கழக கணனிக் கல்வியியல் முதுமாணிப் பட்டதாரியுமாவார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பட்டப்பின் தகைமைக் கல்வியியலிலும், சுவிற்சர்லாந்துப் பல்கலைக்கழக நற்செய்திக் கல்வித்துறையிலும் பட்டப்பின்படிப்பு டிப்ளோமாப் பட்டங்களையும் பெற்றுக் கொண்டவராவார். ஆற்றுப்படுத்தற் துறையில் முறையான பயிற்சியினைப் பெற்றுக் கொண்டு ஓர் உளவளத்துணையாளராகவும் செயலாற்றி வருகின்றார். இவர் 1973 ஆம் ஆண்டு யாழ்ப்பாணக்கல்லூரியில் உதவி ஆசிரியராக இணைந்து கொண்டார். 1994இல் இடைநிலைப்பிரிவு மேற்பார்வையாளராகவும், 2000ஆம் ஆண்டினில் கல்லூரி உப அதிபராகவும் நியமிக்கப்பட்டார். ஜூன் மாதம் 14ஆம் நாள் 2003ஆம் ஆண்டுமுதல் கல்லூரியின் அதிபராக் பதவி உயர்த்தப்பட்டு இன்று பதவி நிலைப்படுத்தப்படுகின்றார்.

இந்தியா, சிங்கப்பூர், ஐக்கிய இராச்சியம், கனடா, ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் பல நாடுகளுக்கும் விஜயம் செய்து கல்விசார் அனுபவங்களையும், அறிவையும் பெற்றுக் கொண்ட இவர், கல்விப் புலத்திற்கு வெளியே தென் – இந்தியத் திருச்சபை யாழ்ப்பாண அத்தியட்சாதீனத்தின் பொருளாளராக 1986 – 1992 காலப் பகுதியிலும், அத்தியட்சாதீன செயலாளராக 1996/1997 காலப்பகுதியிலும் அரும்பணியாற்றியுள்ளார். ஆதீன மருத்துவ சபையின் தலைவராகவும், பேராயர் சபாபதி குலேந்திரன் ஞாபகார்த்த நிதியப் பொருளாளராகவும் தொடர்ந்தும் நற்பணியாற்றி வருகின்றார். யாழ்ப்பாண அத்தியட்சாதீனத்தின் பிரதிநிதியாக தென் – இந்தியாவில் நடைபெறும் தென் – இந்தியத் திருச்சபை அத்தியட்சாதீனக் கூட்டங்களில் கலந்து சிறப்பித்துள்ளார்.

யாழ்ப்பாணக் கல்லூரி ஆளுநர் சபையினர் ஏகமனதாக இவரைக் கல்லூரி அதிபராக நியமித்துள்ளனர். இவரின் பல்துறை அறிவு, அனுபவம், ஆற்றல் என்பன கல்லூரியைத் திறம்பட வழிநடத்தும் எனத் திடமாக நம்புகிறோம்.

எல்லாம் வல்ல இறைவனின் இறையருள் தொடர்ந்து கிடைத்திட இறைவனை இறைஞ்சுகின்றோம்.

### MESSAGE BY REV.N.J.GNANAPONRAJAH
(President, Jaffna Christian Union)

**Smiling Face,**
**Humble Look,**
**Eloquent in speech,**
**Patient Hearing,**
**Leadership minded,**
**Honest Thought**
**Simple Truth**
**As his utmost skill** -That is Mr.Noel.A.Vimalendran

It gives me great pleasure to pen down few line about the Seventh National Principal of Jaffna College Mr.Noel. A.Vimalendran.

He is an active Layman in bringing unity among the various denominations. I am happy to put in record the last election of the Jaffna Christian Union, which was held on 30[th] June 2003. Mr. Noel.A.Vimalendran was elected as Treasurer of Jaffna Christian Union.

In Conclusion we as a whole body of Jaffna Christian Union convey our sincere congratulations and assure him our unstinted cooperation in his arduous work in performing his best to his Alma-Mater.

### MESSAGE FROM MR. THAVAYOGARAJAH
(President Colombo Alumni)

It Gives me great pleasure as well as an enormous Feeling of satisfaction to felicitate Noel Arasaratnam Vimalendran on his appointment as Principal of Jaffna College. Our College is one of the foremost institutions rated as second to none in the Island. Jaffna College is the oldest in Asia that gave an English Education to the people not only of the north but also of students from all parts of Island imparting knowledge in a wide range of subjects. From the College have emerged men and women of the finest calibre to serve nationally and internationally. The Colombo Alumni is a vibrant Association that dedicates itself in maintaining and promoting the best interests of the alma Mater. We wish the new Principal the blessings of God Almighty to help him perform his great and responsible tasks.

### MESSAGE BY MR.M.SITHAMPARANATNAN
(Hony. Secretary, J.C.A. Assn., Jaffna College, Vadukoddai.)

Mr.N.A.Vimalendran a fitting and flamboyant personality, has been chosen as Principal to run the oldest institution in the island.

He started his career as a teacher, in this renowned institution and has 28 years of dedicated service, to his credit. Through out his teaching career he has proved his mettle as a devoted teacher, and a vice principal. By his devotion to duty, perseverance and implicit faith in God, he has now been chosen to carry the mantle of Jaffna College.

We members of the Jaffna College Alumni Association feel proud in welcoming our new Principal, in the direction of better future.

May God's Blessings be upon him.

### எங்கள் முதல்வர் வாழ்க பல்லாண்டு

"அன்பின் ஊற்றில் ஆணை தந்து
இதமான பணியில் மேன்மை பெற்று
ஈடில்லா பேறுகளைப் பெற வைத்து
உத்தமராய் வாழ ஊக்குவித்து
எக்கணமும் ஏற்றமே குறியாக – இனி
ஐயிரண்டு வருடங்கள் சென்றாலும்
ஒவ்வொன்றும் புகழாண்டாய் புதுமை பெற்று
ஓயாத பெருமையுடன் எங்கள் கல்லூரி வாழ
பல்லாண்டு பல்லாண்டு
வாழ்ந்தெமக்கு பணி செய்வீர்"

–வட்ட மேசை அங்கத்தவர்கள்
யாழ்ப்பாணக் கல்லூரி.

### MESSAGE BY MR.N.R.G.HOOLE
(Director, Jaffna College Institute of Technology, Vadukoddai.)

I congratulate Mr.N.A.Vimalendran on behalf of Jaffna College Institute of Technology for being appointed as Principal of Jaffna College.

He deserves being elevated to this highest position as head of one of the oldest mission institutes in Asia because of his vast experience in teaching and administration for over quarter century. The task he faces in this fast changing 21[st] Century is great therefore let us give the God chosen man encouragement to build the school further.

Finally I wish and pray for the guidance of our God Jesus Christ, the light of life to steer the ship of Jaffna College in the coming years.

### MESSAGE BY MR.T.KUGATHASAN
(Principal, Jaffna College Agriculture Institute, Marathanarmadam, Chunnakam)

It gives me great pleasure to congratulate Mr.N.A.Vimalendran on his appointment as Principal of jaffna College. He is Scholar and a Good administrator. He had his early education at Driberg College Chavakachcheri and Jaffna College Vaddukoddai. Having Obtained his B.Sc. Degree, he got the Diploma in Education. As he was found to be brilliant in his studies. He was sent to London for Post Graduate Studies where he had obtained his M.A.Degree in Computer Science. He is also qualified in Ecumenicial Studies in Swiss. Nearly 30 years or more he has been associated with Jaffna College first as a student, then as a undergraduate Teacher, Hostel Warden, Vice Principal and finally as Principal.

He continues to be the Chairman of the Jaffna College Institute of agriculture Council. He is the Chairman of The Medical Board and has held various post in the Jaffna Diocese of Church of South India.

May the almighty bless Mr.N.A.Vimalendran and family and preserve them with good health and wisdom.

### பணி சிறக்க வாழ்த்துகிறோம்
(விரிவுரையாளர்கள், மாணவர்கள், யாழ்ப்பாணக் கல்லூரி பட்டதாரிப் பிரிவு, யாழ்ப்பாணம்.).

யாழ்ப்பாணச் சமூகத்தைக் கல்வி ஒளியின் பால் ஈர்த்த பழம் பெருமை வாய்ந்த யாழ்ப்பாணக் கல்லூரியின் பதினாறாவது அதிபராகப் பதவி ஏற்றுள்ள திரு. நோயல் அரசரட்ணம் விமலேந்திரன் அவர்கள் கல்விசார் புலமையும், ஆளுமையும், ஆற்றலும், வசீகரமும் கொண்ட ஒருவர். அவலங்கள் நிறைந்திருந்த இந்தப் பூமியில் தோன்றிய அமைதி நிலையைப் பயன்படுத்தி வடபுல மாணவர்களுக்கு சர்வதேசத் தரத்திலான கல்வி வாய்ப்பை உருவாக்கிக் கொடுக்க வேண்டும் என்பதில் துடிப்பும் ஆர்வமும் கொண்டவர். கல்லூரியின் கல்விச் செயற்பாடுகளை விஸ்தரித்து இன்றைய சமூகத்தின் தேவையை ஈடு செய்வதில் அவர் கொண்டிருக்கும் அவா நிறைவேற இறைவனை வேண்டுவதோடு, அவரின் பணி சிறக்கப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

### WE ARE VERY HAPPY TO WISH MR.N.A.VIMALENDRAN WHO ASSUMED DUTY AS A NEW PRINCIPAL OF JAFFNA COLLEGE.

REV.A.JEYAKUMARAN, (Diocesan Secretary, J.D.C.S.I)

He is continuously attached to this College for more than 30 years. All the experiences he gained from this College will make him as a Good Leader. Jaffna College having a great tradition of producing good citizen. We hope and wish during his period he will built up the same calibre.

God all mighty will give him all the strength and blessing to carry out his duty. We wish him all Success.

உதயன்

# ஒரே சமயத்தில் இரு தோணிகளில் கால்!

இலங்கையில் கடந்துபோன வாரத்தில் இடம் பெற்ற முக்கிய இரண்டு நிகழ்வுகள் குறித்து இப் போது செய்திகள் வெளியாகத் தொடங்கியுள்ளன.

ஒன்று - வடக்கு - கிழக்கு இடைக்கால நிர்வா கம் தொடர்பான அரசின் திட்ட வரைவு புலிகளின் தரப்புக்கு கையளிக்கப்பட்டது தொடர்பானது.

மற்றது - இலங்கைப் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன, கடற்படைத்தளபதி வைஸ் அட் மிரல் தயா சந்தகிரி ஆகியோரது உத்தியோக பூர்வ இஸ்ரேல் சுற்றுலா சம்பந்தமானது.

இந்த இரு தகவல்களுமே இலங்கை அரசுத் தரப்பு ஒரே சமயத்தில் இரு தோணிகளில் கால்வைத் துள்ளது என்பதைப் புலப்படுத்தப் போதுமானவை.

பாதுகாப்பு அமைச்சர், கடற்படைத்தளபதி ஆகி யோரின் இஸ்ரேலிய சுற்றுலாவுக்கு பாதுகாப்பு அமைச்சு என்ன சாக்குப் போக்குக் காரணங்களைக் கூறினாலும், அது சுமார் அறுநூறு கோடி ரூபா பெறு மதியான ஆயுதக் கொள்வனவுக்குரிய சுற்றுப் பய ணமே என்பது ஓரளவுக்கு தெளிவாகிவிட்டது.

அரசு - புலிகள் யுத்தம் தொடர்ந்த 2001ஆம் ஆண்டு வரை பெருந்தொகை நிதியை - பல்லாயிரக் கணக்கான கோடி ரூபாவை - வேறு வழியின்றி யுத்தத்துக்குச் செலவிட்டு வந்தது இலங்கை அரசு. எனினும், யுத்தம் நின்ற பின்னரும் -2002 மற்றும் 2003ஆம் ஆண்டுகளில் கூட பாதுகாப்புச் செலவீனம் குறைக்கப்படவில்லை.

ஒருபுறம் பேச்சு விவகாரம் தொடர்ந்தாலும் மறு புறத்தில் யுத்தத்துக்கும் அரசு தயாராகியே வருகின்றது என்பது சமாதான முயற்சிகள் ஆரம்பமான காலத்தில் இருந்தே வெளிப்படையாகப் புலப்பட்டு வந்தது. பாதுகாப்பு அமைச்சர் மற்றும் கடற்படைத் தளபதி ஆகியோரின் ஆயுதக் கொள்வனவுக்கான இஸ்ரேல் விஜயம் இதை மேலும் ஊர்ஜிதப்படுத்தியிருக்கின்றது அவ்வளவே.

தமது அரசு ஆட்சிக்கு வந்தால் புலிகளுடன் சமாதானப் பேச்சை ஆரம்பிக்கும் எனவும், அவ் வேளையில் வடக்கு - கிழக்குக்கான இடைக்கால நிர்வாகத்தை குறைந்தது இரண்டு ஆண்டுகளுக் கேனும் புலிகளுக்குக் கையளிக்கும் எனவும் கடந்த பொதுத் தேர்தலுக்கு முன்னரே ரணில் விக்கிரம சிங்க தமது தூதுவர் மூலம் புலிகளுக்கு உறுதி யளித்திருந்தார்.

அந்த உறுதிமொழியின் அடிப்படையிலேயே சமா தான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு, மேற்கொள் ளப்பட்டு வருகின்றன. ஆனால், உறுதியளித்தபடி இடைக்கால நிர்வாகம் இன்னும் புலிகளுக்கு வழங் கப்படவேயில்லை.

அதற்குப் பதிலாக வடக்கு - கிழக்கு புனர்வாழ் வுக்கான கூட்டுச் செயலணியை உருவாக்கித் தரு வதாக முதலில் கூறினார்கள். பின்னர் அது வடக்கு - கிழக்கின் அவசர மனிதாபிமானத் தேவைகளுக் கான உபகுழு (சிரான்) என்ற பெயரில் காலத்தை இழுத்தடித்தது. அதன்மூலம் எதுவுமே செயற்படுத் தப்படாமல் போனதால் பின்பு வடக்கு - கிழக்கு அபிவிருத்திக் கவுன்ஸில் என்றார்கள். அதுவும் பின்பு உயர்சபை (Apex Body) என்ற பெயர் மாற்றத்தோடு வந்து அடிபட்டுப்போக, இப்போது மாகாண நிர்வாகத்துக்கான தற்காலிக கவுன்ஸில் என்ற பெயரோடு புதிய திட்ட வரைவை புலிகளிடம் அரசு சமர்ப்பித்திருக்கின்றது.

இத்திட்ட வரைவை தமது ஆலோசகர்களோடு நன்கு பரிசீலித்த பின்னர் தமது தரப்புக் கருத்துக் களை அரசுத் தரப்புக்குத் தெரிவிப்பதாக புலிகள் கூறியிருக்கின்றனர்.

என்றாலும், இந்தத் திட்ட வரைவு தொடர்பாக இப்போது வெளியாகியிருக்கும் தகவல்களைப் பார்த் தால் இந்த வரைவு புலிகளின் எதிர்பார்ப்பைக் கிட்ட வும் நெருங்கவில்லை என்றே படுகின்றது.

முக்கிய விடயங்களில் உத்தேச நிர்வாக சபைக்கு அதிகாரங்கள் எதுவும் இல்லை. வேறு விடயங்க ளில் அதிகாரங்கள் வழங்கப்படுவதாக்க் கூறப்பட் டாலும் அவற்றைக் கட்டுப்படுத்தும் அல்லது பிடுங் கும் வேறு பொறிகள் அந்த வரைவுக்குள்ளேயே பொருத்தப்பட்டுள்ளன.

இவற்றைப் புலிகள் ஏற்பார்களா என்பது கேள் விக்குறியே.

அதேவேளை, ஒருபுறம் இடைக்கால நிர்வாகம் என்ற விவகாரத்துக்கு ஒரு திட்ட வரைவை சமர்ப் பித்துக்கொண்டு, மறுபுறம் யுத்த தயாரிப்புக்கான ஆயுதக் கொள்வனவிலும் அரசு முனைப்பாக நட வடிக்கைகளை முன்னெடுக்கின்றது.

திட்ட வரைவு தொடர்பான புலிகளின் முடிவில், இதுவும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடியது. விடயத்தைப் புலிகள் எப்படிக் கையாள்கின்றார்கள் என்பது விரை வில் தெரியவந்துவிடும்.

# வலி.வடக்கு அரச திணைக்களங்களை சொந்த இடங்களில் இயக்க ஏற்பாடு

## பொது அமைப்புக்கள் ஒன்றுகூடி ஆராய்வு

வலி.வடக்கு,ஜூலை21

வலி.வடக்குப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து தற்போது வேறு இடங்களில் தற்காலிகமாக இயங்கும் நிறுவனங்கள் மற்றும் அரச திணைக்களங்களை மீண்டும் சொந்த இடங்களில் இயங்கவைப்பதற்கான முன்னேற்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள் ளப்படவுள்ளன.

பொது அமைப்புக்கள் ஒன்றுகூடி இதை ஆராய்ந்து வருவ தாகவும் கூறப்படுகிறது.

இது குறித்து மேலும் தெரிவிக்கப்படுவதாவது:-

வலி.வடக்கில் இருந்து இடம்பெயர்ந்த மக்களில் ஒரு பகுதியினர் தத்தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர அனு மதிக்கப்பட்டுள்ளனர். ஆனால், வலி.வடக்கில் இருந்து இடம் பெயர்ந்த பல நிறுவனங்கள் மற்றும் திணைக்களங்கள் சொந்த இடங்களுக்குத் திரும்பி சேவையை மீண்டும் ஆரம்பிக்கவில்லை. அவை தொடர்ந்தும் இடம்பெயர்ந்து இயங்கிய இடங்களிலேயே செயற்பட்டு வருகின்றன.

இதனால் வலி.வடக்கின் சில பகுதிகளில் மீளக்குடியமர்ந்த மக்கள் தமது தேவைகளை நிறைவுசெய்வதில் பல்வேறு சிரமங் களை எதிர்நோக்குவதாகக் கூறப்பட்டது.

மக்களின் மீள்குடியமர்வை ஊக்குவிக்கவும், வலி.வடக்கு பகுதிக்கென நிறுவப்பட்ட நிறுவனங்கள், திணைக்களங்களின் சேவையை வலி.வடக்குப் பகுதியில் பெறுவதற்காகவும் இந்த அமைப்புகளை மீண்டும் வலி.வடக்குப் பகுதியில் இயங்கச் செய் யும் தொடர்ச்சியான நடவடிக்கைகள் முன்னெடுக்கவுள்ளன என்று கூறப்பட்டது. (எ-86).

# நாட்டு நடப்பு

## காதலன் தீட்டிய கடிதம்

*கயல் விழியாளே!*
முல்லை உன் பல்வரிசை என்றால்
முகிழ்ந்ததும் முல்லை வாடும்
குமிழ் உனது மூக்கே என்னில்
கூர்மையும் நேர்மையில்லை
தமிழதன் சுவை நீ என்றாலோ
தனித் தமிழ் இப்போ தெங்கே
மயிலதன் சாயல் என்றால்
பெண் மயிலுக்குத் தோகை ஏது
அன்னமுன் நடையே என்றால்
ஆர் அதை நேரில் கண்டார்
குலமகள் நடந்து செல்ல
நிலமகள் மகிழ்வளன்றோ
கலைமகள் நீயே என்றால்
கலைகளோ அறுபத்திநாலே யென்றார்
கமழ் மணம் கேசம் என்றால்
கன்னியின் தாயே காண்பாள்
உன் பெரும் அழகைச் சொல்ல
உண்மையில் வார்த்தையில்லை.

*அன்புக் காதலன்*
*முல்லை வளவன்.*
- விகடகவி.

# யாழ். நகரை அண்டிய பகுதிகளில் தவறான நடத்தைகள் அதிகரிப்பு!

## மாணவ, மாணவியரே அதிகம் ஈடுபடுவதாகத் தகவல்

யாழ்ப்பாணம்,ஜூலை21

யாழ்.நகரப் பகுதியிலும் அதனை அண்டிய ஏனைய பகுதி களிலும் அண்மைக்காலமாக பாலியல் துஷ்பிரயோகங்கள் மற் றும் விபசார நடவடிக்கைகள் அதிகரித்து வருவதாக யாழ். பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக பொலீஸார் கூறியதாவது:-

15 இற்கும் 30 இற்கும் இடைப்பட்ட வயதினரே இத்தகைய செயல்களில் பெரும்பாலும் ஈடுபட்டுவருகின்றனர்.

வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களைச் சேர்ந்த பெண்கள் தமது குடும்பங்களில் நிலவும் வறுமையைப் போக்கு வதற்காகவே விபசாரத் தொழிலில் ஈடுபட்டு வருவதாக விசார ணைகள் மூலம் தெரியவந்தது.

இதேவேளை, சட்டமுறைப்படி திருமணம் செய்யாது பிள் ளைகள் பெறுதல், பலதார மணம்புரிதல், விவாகரத்துச் செய் தல் மற்றும் சிறுவயதிலேயே திருமணம் செய்தல் போன்ற வையும் தற்போது அதிகரித்து உள்ளன. இது தொடர்பாக பல முறைப்பாடுகள் யாழ்.பொலீஸ் நிலையத்தில் பதிவு செய் யப்பட்டுள்ளன.

அண்மையில் யாழ். பொலீஸாரினால் யாழ். கோட்டை, பழைய புகையிரத நிலையப் பகுதி போன்ற இடங்களில் திடீர் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. அப்போது விபசாரத் திலும், தவறான நடத்தையிலும் ஈடுபட்டிருந்த பலர் சிக்கி னார்கள் அவர்கள் எதிர்கால நலன்கருதி எச்சரிக்கை செய் யப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

இதேவேளை, அரியாலை மற்றும் யாழ். செயலகப் பிரதேசங் களில் ஆள் நடமாட்டம் குறைந்த பகுதிகளில் உள்ள பற்றைகள் மற்றும் உடைந்து கைவிடப்பட்ட வீடுகளில் பகல் நேரங்களில் பாடசாலை மாணவ, மாணவிகள் பலர் தவறான நடத்தைகளில் ஈடுபட்டுவருவதாக அப்பகுதி பொதுமக்கள் கூறுகின்றனர்.

நேற்றைய தினம் ஞாயிற்றுக்கிழமை ஜே/92 கிராம அலு வலர் பிரிவில் பகல்வேளை நான்கு பாடசாலை மாணவர்களும் மாணவி ஒருத்தியும் ஆள்கள் நடமாட்டம் குறைந்த பகுதியில் உள்ள பற்றைக்குள் நிற்கும்போது அப்பகுதியைச் சேர்ந்தவர் கள் அவதானித்ததால் தப்பிச் சென்றுவிட்டனர்.

இவ்வாறான பகுதிகளில் வரும் மாணவர்கள் வேறு இடங் களில் இருந்தே வருவதாகவும் தெரியவருகின்றது.

இத்தகைய சம்பவங்களைத் தட்டிக்கேட்கவோ அன்றி தடுக்கவோ பொது மக்கள் பயப்படுகின்ற நிலையும் ஏற்பட் டுள்ளது. இதற்கு உதாரணமாக அண்மையில் கூட பெண் ணுடன் சேஷ்டை புரிந்த இளைஞர் கும்பலை தட்டிக் கேட்கச் சென்ற குடும்பஸ்தர் கத்திக்குத்துக்கு இலக்காகி உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-6-5-86)

# வெள்ள பாதிப்பு நிவாரணம்

# அரச ஊழியர்கள் ஒருமாதச் சம்பளத்தை வட்டியில்லா கடனாகப் பெற வாய்ப்பு

## சுற்றறிக்கை வெளியிடப்பட்டது

அச்சுவேலி,ஜூலை21

வெள்ளத்தினால் ஏற்பட்ட பாதிப்புக்களுக்கான நிவாரணமாக அரச ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு ஒருமாதச் சம்பளம் வட்டியில்லாத கடனாக வழங்கப்படவுள்ளது.

கடந்த டிசெம்பர் மாதமும், கடந்த மே மாதமும் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினால் பாதிக்கப்பட்ட அரசாங்க ஊழியர்கள், ஆசிரியர்கள் சம்பள முற்பணக் கடனுக்கான விண்ணப்பத்தைச் சமர்ப்பித்து தமது திணைக்களங்கள் ஊடாக கடனைப் பெற்றுக் கொள்ளமுடியும்.

இது தொடர்பான சுற்றறிக்கை சகல திணைக்களத் தலை வர்களுக்கும் வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் அரசாங்க நிர்வாக முகாமைத்துவ மறுசீரமைப்பு அமைச்சின் தாபனப் பணிப்பாளர் நாயகத்தினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

வட்டியில்லாத ஒருமாத சம் பள முற்பணக்கடன் தொகை 10மாதங்களில் சமமான தொகை யாக சம்பளத்தில் இருந்து மீள அறவிட்டுக்கொள்ளப்படும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-11)

**நாளை**

ஆடி 06
செவ்வாய்க்கிழமை
(22.07.2003)
திதி : நவமி
வைகறை 5.36 வரை.
நட்சத்திரம் : அச்சுவினி
முற்பகல் 9.12
சுபநேரம் : 10.31 - 12.01
ராகுகாலம் : 3.01- 04.31
(பழைய நேரப்படி)

**உதய வாக்கு**

அழுகிய புண்ணையும் ஆற்றி விடமுடியும். ஆனால், கெட்ட பெயர் மனிதனைக் கொல் லாது விடுவதில்லை.

# ஆசிரியரின் வக்கிரப் போக்கினால் 15வயது மாணவன் ஆஸ்பத்திரியில்!

## சாவகச்சேரிப் பகுதியில் சம்பவம்

தென்மராட்சி,ஜூலை21

ரியூசனுக்குச் சென்ற மாணவனை ஆசிரியர் ஒருவர் ஓரினச் சேர்க்கைக்கு பலாத்காரமாக உட்படுத்தியதாகக் கூறப்படுகிறது.

சாவகச்சேரி - கச்சாய் வீதியில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றதாகக் கூறப்படும் இச்சம்பவம் தொடர்பாக தென்ம ராட்சிப் பிரதேச விடுதலைப் புலிகளின் அலுவலகத்தில் முறை யிடப்பட்டுள்ளது.

இக்கொடூரச் சம்பவத்துக்குக் காரணமானவர் என்று கூறப் படும் நபர் பாடசாலைப் பணியிலிருந்து விலகி 'ரியூசன்' வகுப் புகளை நடத்தி வந்தவர் என்றும் -

இவருக்கு வயது வந்த இரு பெண்கள் உட்பட ஆறு பிள்ளைகள் உள்ளனர் என்றும் கூறப்படுகிறது. (ஒ-117)

# யாழ்.-முகமாலை இடையிலான

# பஸ்ஸில் ரகளை புரிந்தோர் பொலீஸாரிடம் ஒப்படைப்பு!

யாழ்ப்பாணம்,ஜூலை21

பஸ்ஸில் ரகளை புரிந்த நால்வர் பயணிகளால் மடக்கிப் பிடிக்கப்பட்டு பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

நேற்றுமுன்தினம் மாலை முகமாலையில் இருந்து யாழ். நோக்கி வந்த வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்குச் சொந்த மான பஸ்ஸில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கிருஸ்ணராசா கொன்ரன் (வயது 25), எம்.குலசிங்கம் (வயது 30), எஸ்.டொனால் (வயது 19), எஸ்.தினேஸ் (வயது 25) ஆகியோரே பஸ்ஸில் ரகளை புரிந்த குற்றச்சாட்டின் பேரில் பயணிகளால் மடக்கிப் பிடிக்கப்பட்டவர்களாவர்.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரிவிக்கப்படுவதாவது:-

நேற்றுமுன்தினம் மாலை முகமாலையில் இருந்து யாழ். நோக்கி வந்துகொண்டிருந்த வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்ஸை நாவற்குழிப் பகுதியில் இடை மறித்த மேற்படி நால்வரும் அதில் ஏறியுள்ளனர்.

நிறை போதையில் ஏறிய இந்த நான்கு நபர்களும் பஸ்ஸின் மிதிபலகையில் நின்றவாறு பிரயாணம் செய்ததுடன், பஸ்ஸில் தட்டி பலத்த சத்தத்துடன் ஆடிப்பாடி கலாட்டா செய்தவாறு பயணம் செய்துள்ளனர்.

இதனைப் பொறுக்கமுடியாத பயணிகளும், பஸ்சாரதி மற றும் நடத்துநர் ஆகியோர் அவர்களை தட்டிக் கேட்டபோது அவர் கள் மல்லுக்கட்டினர்.

இதனால், ஆத்திரமடைந்த பயணிகள் அந்த நால்வரையும் மடக்கிப் பிடித்து யாழ்.பொலீஸாரிடம் ஒப்படைத்தனர் - என்று கூறப்பட்டது. (எ-5-9)

# அரும்புகள்

## சிறுவர் நிதியம்

இருதயம் மற்றும் பிற நோய்களினால் பீடிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்குப் பண வசதியற்ற ஏழைச் சிறுவர்களுக்கு உதவும் நிதியம்
- அரும்புகள் சிறுவர் நிதியம்.

# அங்குரார்ப்பண விழா

காலம்: நாளை (22.07.2003) செவ்வாய்க்கிழமை, மாலை 4.00 மணி
இடம்: தாதியர் பயிற்சிப் பாடசாலை, போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

**நிகழ்ச்சி நிரல்**
- மௌன வணக்கம்
- மங்கள விளக்கேற்றல்
- வரவேற்புரை
- அறிமுக உரை
- ஆசியுரை
- பிரதம விருந்தினர் உரை
- கருத்துரை
- கலை நிகழ்ச்சி
- நன்றியுரை

பிரதம விருந்தினர்:
சிவநெறித் தவமகன்,
செஞ்சொற் செல்வன்
திரு.ஆறு.திருமுருகன்

கௌரவ விருந்தினர்:
சிவஸ்ரீ சதாசிவ சுப்பிரமணியக் குருக்கள்
அருட்தந்தை S.டேமியன்
மௌலவி ஏ.ஜி.எம்.இர்பான்
(புதிய பள்ளிவாசல்)

**அரும்புகளுக்கு அடித்தளமிடும் பெருந்தகைகள்:**

திரு.சி.இளம்பரிதி
(அரசியற்துறைப் பொறுப்பாளர்,
தமிழீழ விடுதலைப் புலிகள், யாழ். மாவட்டம்)
திரு.பொ.கஜேந்திரகுமார்
(நாடாளுமன்ற உறுப்பினர்)
திரு.து.வைத்திலிங்கம்
(மேலதிக செயலாளர்,
இந்து சமய விவகாரங்கள் அமைச்சு)
திரு.பே.நாகரட்ணம்
(உரிமையாளர்: இ.ச.பேரம்பலம் அன் சன்ஸ்)
திரு.S.V.சிறிதரன்
(உரிமையாளர்: சிறி அமலா ஜுவலர்ஸ்,
கொனிகா கலர் லாப்)
திரு.கு.கங்கைவேணியன்
(உரிமையாளர்: வேணி களஞ்சியம், யாழ்ப்பாணம்)

அனைவரும் வருக!
நிதியுதவி புரிக!!

மருத்துவ மாணவர் ஒன்றியம்
யாழ். பல்கலைக்கழகம்.

ஊடக அனுசரணை: உதயன்.

(சி-29061) (24-13-18)



விலை 16/=

# சுடர் ஒளி

## ஜூலை 27 - ஓகஸ்ட் 02




(சி-29057) (24-13-18)

- நெருக்கடிகளின் மத்தியில் நகரும் கூட்டணி முயற்சி
- தமிழர் வரலாற்றிலே மறக்கமுடியாத ஜூலை
- இன்னொரு இந்தியத் தலையீடு (வடபுலம்) வடக்கில் எழுகின்ற சந்தேகம்
- இழுபடுகின்ற தண்டனைகளும் எழுந்து நிற்கின்ற தீர்ப்புகளும்
- மனிதன் கண்டுபிடிப்புகள் விடுக்கும் சவால்
- கேள்விச் செவியன் ஊரைக் கெடுத்தான் உளவுக்காரன் உலகை அழித்தான்

மேலும் பல
அம்சங்களுடன்.........

# அருகி வரும் வாசிப்புப் பழக்கம் யாழ். கல்வி வளர்ச்சிக்கு சவால்!


அன்று மண்ணெண்ணெய் குப்பி விளக்கின் மங்கலான ஒளியில் குந்தியிருந்து படிக்கும்போது எழுச்சியுடன் காணப்பட்ட யாழ். கல்வித்துறையானது இன்று சுழலும் மின்விசிறிக்கு அருகில் பிரகாசமான மின் ஒளியில் படிக்கும்போது வீழ்ச்சியடைந்து விட்டது என்று கூறப்படுகின்றது.

கடந்தகால யுத்த அனர்த்தங்களின்போது அன்புக்குரிய உறவுகளையும், பாடுபட்டுத் தேடிய உடைமைகளையும் அநியாயமான முறையில் இழந்து துயருற்றுள்ள எமது யாழ். சமூகம் கல்வியை இழக்கவில்லையே என்ற மனத்திருப்தியுடன்தான் இதுவரை வாழ்ந்து வந்திருக்கின்றது.

எத்தனையோ இழப்புக்களுக்கு மத்தியிலும் பேணிக்காக்கப்பட்ட "யாழ். நங்கையின் கற்பு" என்று கூறப்படுகின்ற எமது கல்விப்பாரம்பரியமானது இன்று வீழ்ச்சியடைந்து செல்வதற்குரிய காரணங்களை அறிவதற்கு எமது யாழ். கல்விச்சமூகம் ஆவலுடன் செயற்பட்டுக்கொண்டு இருக்கும் காலம் இது.

எழுச்சியுற்ற எமது யாழ். கல்வித்

சு. சிவநேசராசன்
ஆசிரியர்,
யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி



துறையானது வீழ்ச்சியுறுவதற்குப் பல காரணங்கள் கூறப்படுகின்ற போதிலும் இன்றைய மாணவர்களின் வாசிப்புப் பழக்கம் குறைந்து வரும் நிலையும் கல்வித்துறை வீழ்ச்சிக்குப் பெரும் பங்கையாற்றி வருகின்றது என்பது யாரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாத உண்மை ஆகும்.

**போட்டிப் பரீட்சைகள்**

தற்போது பல்கலைக்கழக அனுமதி, வேலைவாய்ப்புக்கள் போன்றவற்றுக்கான தெரிவுகள் போட்டிப் பரீட்சைப் பெறுபேற்றின் அடிப்படையிலேயே தீர்மானிக்கப்படுகின்றன. இங்கு கேட்கப்படும் வினாக்களுக்குக்கான விடைகள் மிகவும் சுருக்கமானதாகவும் விளக்கமானதாகவும் இருக்கவேண்டும். என்றே எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆனால், ஆரம்ப வகுப்பிலிருந்து தாய்மொழி மூலக் கல்வி வழங்கப்படுகின்ற போதிலும் எமது மாணவர்கள் வினாக்களை முழுமையாக விளங்கிக் கொள்ளும் தன்மை குறைந்தவர்களாகவே காணப்படுகின்றனர் என்பது விடைத்தாள்களை மதிப்பீடு செய்யும்போது அறியமுடிகின்றது.

உதாரணமாக பசு மாட்டைப் பற்றி எழுதும்படி கேட்கப்படும் வினாவிற்கு தென்னைமரத்தைப் பற்றி பக்கம் பக்கமாக எழுதிவிட்டு இறுதியில் "இந்தத் தென்னை மரத்தில் அந்தப் பசு மாடு கட்டப்பட்டு இருக்கும்" என்று விடையை முடிக்கும் தன்மையே தற்போது கூடுதலாகக் காணப்படுகின்றது.

அதாவது, மூன்று சொற்களில் எழுதவேண்டிய விடையை முந்நூறு வாக்கியங்களில் எழுதியும் எதிர்பார்க்கப்படும் விடையை தேடிக்கண்டு பிடிக்க முடியாத நிலையே பெரும்பாலும் காணப்படுகின்றது. இதற்குக் காரணம் என்ன?

**கிரகித்தல்**

குறிப்பிட்ட ஒரு மொழிமூலம் எழுதப்படுபவற்றையோ பேசப்படுபவற்றையோ மனிதன் ஒருவன் சுருக்கமாகவும் தெளிவாகவும் விளங்கிக் கொள்ளும் ஆற்றல் கிரகித்தல் எனப்படுகின்றது. பரீட்சைகளில் மாணவர்கள் கேட்கப்படும் வினாக்களுக்கு பொருத்தமான விடைகளை எழுதுவதற்கு மாணவர்களிடம் கிரகித்தல் திறன் இருப்பது மிகவும் அவசியமாகும்.

பொதுப்போட்டிப் பரீட்சைகளில் பெறுபேறுகள் வீழ்ச்சியடைவதற்கு இன்றைய மாணவர்களின் கிரகித்தல் திறன் குறைந்து வருகின்றமையும் ஒரு காரணம் ஆகும்.

தொலைக்காட்சி பார்ப்பதனாலோ அல்லது வானொலி கேட்பதனாலோ மட்டும் கிரகித்தல் திறன் வளரும் என்று கூறமுடியாது.

"சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப் பழக்கம்" என்பது போல மாணவர்களின் கிரகித்தல் திறனை வாசிப்புப் பழக்கத்தின் மூலமே வளர்த்தெடுக்க முடியும்.

அத்துடன் வீட்டில் பெற்றோர்களுடன் அன்பாகக் கதைப்பதற்குக்கூட நேரமின்றி இன்றைய மாணவ சமூகம் பாடசாலைகள், தனியார் கல்வி நிறுவனங்கள் என்று மாறி மாறி அலைந்து திரிவதனாலும் கிரகித்தல் திறனை வளர்க்க முடியாதுள்ளது.

அதாவது, இருபத்துநான்கு மணித்தியாலங்களைக் கொண்ட ஒரு நாளில் ஏறக்குறைய பதினைந்து மணித்தியாலங்களைக் கல்விக்காக செலவிடுகின்ற இன்றைய மாணவ சமூகம் ஆகக்குறைந்தது பதினைந்து நிமிடங்களையாவது பொறுமையுடன் நூல்களை வாசிப்பதற்குச் செலவிடுகின்றதா என்பது கேள்விக்குறியே.

ஏனெனில், புத்தகங்களை ஆறுதலாக அமர்ந்திருந்து பொறுமையுடன் வாசிப்பதற்கு இன்றைய மாணவர்களுக்கு போதிய நேரம் இருப்பதில்லை என்று கூறப்படுகின்றது.

காரணம் தொலைக்காட்சி, வானொலி போன்ற இலத்திரனியல் ஊடகங்களும் தனியார் கல்வி நிறுவனங்களும் இன்றைய மாணவர்களின் ஓய்வுநேரத்தின் பெரும் பகுதியை விழுங்கி விடுகின்றன.

**தேடல்திறன்**

"சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளை" என்பது போல ஆசிரியர் கூறியவற்றை மாணவர்கள் மனனம் செய்து அப்படியே பரீட்சைகளில் ஒப்புவிக்க வேண்டும் என்ற நிலை தற்காலக் கல்வி முறையில் ஏற்றுக் கொள்ளப்படுவது இல்லை. இதனால் தான் ஆசிரியர்கள் மாணவர்களுக்குக் கற்பிக்கக் கூடாது. மாணவர்கள் கற்பதற்கு ஆசிரியர்கள் வழி காட்ட வேண்டும் என்று கூறப்படுகின்றது.

அதாவது, ஆசிரியர்களின் வழி காட்டலுடன் மாணவர்கள் தாமாகவே அறிவியலை கண்டறிவதற்கே கூடிய முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது. ஆனால், தேடல்திறன் ஆனது ஒரு மாணவனிடம் திடீரென உருவாகும் என்று நாம் எதிர்பார்க்க முடியாது. உடற்பயிற்சி, நடனப் பயிற்சி, நாடகப் பயிற்சி என்பது போல் தேடல் திறன் ஆனது வாசிப்புப் பயிற்சி மூலமே வளர்த்தெடுக்கப்பட முடியும்.

இதனைக் கருத்திற் கொண்டே சான்றோர்கள் "வாசிப்பதனால் மனிதன் பூரணமடைகிறான்", "புத்தகங்களே சிறந்த ஆசிரியர்கள்" போன்ற கருத்துக்களைக் கூறியுள்ளனர்.

**சமூக நற்பழக்கவழக்கங்கள்**

"பறவையைக் கண்டான் விமானம் படைத்தான்"

"எதிரொலி கேட்டான் வானொலி படைத்தான்"

"எதனைக் கண்டான் பகைமையை வளர்த்தான்" என்ற பாடலில் குறிப்பிடுவது போன்று இப்பரந்த உலகமானது இன்றைய தகவல் தொழில்நுட்ப யுகத்திலே ஒரு கிராமம போன்று சுருங்கிவிட்ட போதிலும் சமூக நற்பழக்கவழக்கங்கள் குறைந்து கொண்டுவருகின்றன என்பது நாம் விரும்பியோ, விரும்பாமலோ ஏற்றுக்கொள்ள வேண்டிய உண்மை ஆகும்.

இதனால் சமூகத்தின் மூத்த பிரஜைகளுக்கும், இளைய பிரஜைகளுக்கும் நீண்டதோர் இடைவெளி காணப்படுகின்றமையை பல்வேறு சந்தர்ப்பங்களில் உணரக்கூடியதாக இருக்கின்றது. முதியோர் தின விழாக்கள், சிறுவர் உரிமை இயக்கங்கள் இதனை உறுதிப்படுத்துகின்றன.

இதற்குப் பிரதான காரணம் என்ன?

மாணவர்களின் வாசிப்புப் பழக்கம் குறைந்து கொண்டுவருவதன் காரணமாக புத்தக வடிவில் காணப்படுகின்ற சமூகப் பெரியோர்களின் அறிவுரைகளும் வழிகாட்டல்களும் இன்றைய மாணவ சமூகத்தைப் போய்ச் சேரவில்லை என்பதே ஆகும்.

அத்துடன், காலத்துக்கு காலம் ஈழத்து எழுத்தாளர்களினால் எழுதப்பட்ட சிறுகதைகள், நாவல்கள் மூலம் குடாநாட்டுப் பண்பாட்டு, கலாசாரம் என்பன ஆவணப்படுத்தப்பட்ட போதிலும் இவை இன்றைய மாணவ சமூகத்தைப் போய்ச்சேராததும் சமூக நற்பழக்கவழக்கங்கள் குறைந்து கொண்டு வருகின்றமைக்குப் பிரதான காரணம் ஆகும்.

உதாரணமாக, இன்று வீட்டைச் சுற்றிக் காட்டப்பட்ட சுற்றுமதில் கலாசாரத்தில் நாம் வாழுகின்ற போதிலும் அன்றைய கிடுகுவேலிக் கலாசாரத்தில் ஈழத்தமிழர்களின் பண்பாடுகள் எவ்வாறு பேணிக்காக்கப்பட்டன என்பதை பிரபல நாவலாசிரியர் செங்கை ஆழியானின் "கிடுகு வேலி" நாவல் படம்பிடித்துக் காட்டுகின்றது.

அத்துடன், இன்று படுகொலைகளாக மாறியுள்ள பகிடிவதைகள் உயர்கல்வி நிறுவனங்களில் அன்று எவ்வாறு நகைச்சுவை உணர்வுடன் செய்யப்பட்டன என்பதை செங்கை ஆழியானின் "கங்கைக் கரையோரம்" நாவல் எமக்கு உணர்த்து கின்றது.

ஆகவே, இதுபோன்ற எத்தனையோ ஈழத்துத் தமிழ் எழுத்தாளர்களினால் எழுதப்பட்ட சிறுகதைகள், நாவல்கள் வடிவில் ஆவணப்படுத்தப்பட்ட யாழ்.மண்ணின் பண்பாடு கலாசார இயல்புகள் வாசிப்புப் பழக்கத்தின் மூலம் இன்றைய மாணவ சமூகத்தைச் சென்றடைய வேண்டியது காலத்தின் தேவை ஆகும்.

**பாடசாலை நூலகங்கள்**

புதிய கல்விச் சீர்திருத்தத்தின் படி மாணவர்களின் வாசிப்புப் பழக்கத்தை மேம்படுத்த வேண்டியதன் முக்கியத்துவமானது நன்கு உணரப்பட்டு பாடசாலை நூலகங்கள் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றன.

அத்துடன் ஒவ்வொரு பாடசாலைச் சமூகமும் நூலக வாரத்தைப் பிரகடனப்படுத்தி பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் போன்றோரின் உதவியுடன் நூலக வசதிகள் தற்காலத்தில் மேம்படுத்தப்பட்டு வருகின்றன.

ஆகவே, இன்றைய மாணவ சமூகம் தினசரிப் பத்திரிகைகளைப் பார்ப்பதற்கு மட்டும் பாடசாலை நூலகத்தைப் பயன்படுத்தாது பல்வேறுபட்ட நூல்களையும் வாசித்து வாசிப்புப் பழக்கத்தை மேம்படுத்துவது மிகவும் அவசியம் ஆகும்.

## மட்டக்களப்பில் கெடுபிடிகள்: படையினரைக் கண்டித்து மீனவர் சமாசம் அறிக்கை

மட்டக்களப்பு,ஜுலை21

மட்டக்களப்பில் படையினரின் கெடுபிடிகளைக் கண்டித்து மட்டக்களப்பு மாவட்ட மீனவக் கூட்டுறவுச் சங்கச் சமாசம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

புலிகளுக்கும் அரசிற்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகத்தினர் சுயமாக தொழில்களில் ஈடுபட்டு வருகின்றனர். இவ்வேளையில் தற்போது மீண்டும் படையினர் மட்டக்களப்பில் தமது கெடுபிடி நடவடிக்கைகளை அதிகரித்துள்ளனர்.

படையினரின் இவ்வாறான கெடுபிடிகளால் பேச்சுவார்த்தை முறிவடைந்து மீண்டும் ஒரு போர் ஏற்படக் கூடுமோ என்ற ஐயம் எழுந்துள்ளது.

எனவே, இவ்வாறான செயற்பாடுகளில் படையினர் தொடர்ந்து ஈடுபடுவார்களேயானால் போர் என்பது தவிர்க்க முடியாத ஒன்றாகி விடும் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஒ-6)

## கல்விச்சாலைக் காட்சிகள்



மக்கள் வங்கியின் 'சிறுவர் சேமிப்புப் பிரிவு' ஒன்று அண்மையில் சுண்டுக்குழி மகளிர் கல்லூரியில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. மக்கள் வங்கியின் பிரதான வீதிக் கிளை முகாமையாளர் எஸ். தங்கசிவத்தினால் திறந்துவைக்கப்பட்ட இப்பிரிவில் நூற்றுக் கணக்கான கல்லூரி மாணவிகள் 'மாணவர் மலர்ச்சி' கணக்குகளை ஆரம்பித்தனர். இதன்போது எடுக்கப்பட்ட படம் இது. (எ-9)



மட்டுவில் கமலாசனி வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நிகழ்வில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் போட்டியில் வெற்றியீட்டிய மாணவனொருவருக்கு பரிசில் வழங்கும்போது எடுக்கப்பட்ட படம். *(படம்:- சாவகச்சேரி செய்தியாளர்)*



இணுவில் மத்திய கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா அண்மையில் கல்லூரி கலையரங்கில் நடைபெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். தேசிய கல்வியியல் கல்லூரி பீடாதிபதி கலாநிதி தி.கமலநாதன் உரையாற்றுவதைப் படத்தில் காணலாம்.

அருகில் பழைய மாணவர் கா.சந்திரகாசன், கல்லூரி அதிபர் துரை எங்கரசு ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர் (எ-4)



மண்கும்பான் அ.த.க. பாடசாலையும் செட்டிபுலம் அ.த.க. பாடசாலையும் இணைந்து நடத்திய இல்ல மெய்வன்மைப் போட்டிகள் அண்மையில் நடைபெற்றன. இந்தப் போட்டிகளில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வேலணை கோட்டக் கல்விப் பணிப்பாளர் சோ.தில்லைநாதன் உரை நிகழ்த்துவதைப் படத்தில் காணலாம். அருகில் அதிபர்களான கு.குமரேஸ்வரநாதன், எவ்.ஆர்.சேவியர் ஆகியோரும் காணப்படுகின்றனர். (எ-88)

# மீண்டும் யுத்தமொன்று உருவாகுமானால் பிறநாடெதுவும் அரசுக்கு உதவி வழங்காது

**மீண்டும் யுத்தமொன்று உருவாகுமானால் பிறநாடெதுவும் அரசுக்கு உதவ முன்வரப்போவதில்லை. முற்றுமுழுதாக ஸ்ரீலங்கா அரச படைகளே போருக்கு முகம்கொடுத்தாக வேண்டியிருக்கும் என்கிறார் கட்டுரையாளர் சுனந்த தேசப்பிரிய. லங்காதீப ஞாயிறு இதழில் வெளியான அவரது கட்டுரையின் தமிழ் வடிவம் இது.**

ஜப்பானில் இடம்பெற்ற ஸ்ரீலங்காவுக்கு உதவும் நாடுகளின் மாநாட்டை நீண்ட சொண்டுடன் காட்சி தரும் புறாவொன்றாக உருவகித்து கேலிச்சித்திரக்காரர் ஒருவரால் வரையப்பட்ட சித்திரம் பத்திரிகையொன்றில் வெளியாகியிருந்தது. உண்மையில் அது புறாவாக அல்லாது புறா போன்று உருவமைக்கப்பட்ட சிறைக்கூடமாகவே இருந்தது. எந்தவகையிலும் 'விடுதலைப் புலிகள் அமைப்பை வழிக்குக் கொண்டுவர முடியவில்லையே என பச்சாதாபப்படுவதை விளக்குவதே அக்கேலிச்சித்திரக்காரரின் நோக்கமாக அமைந்தது. அவ்விதம் உருவாக்கப்பட்ட புறாக்கூண்டை மிக அருகிலிருந்து பிரபாகரன் அவதானிப்பதாக சித்திரிக்கப்பட்டிருந்தது.

ஜப்பானில் இடம்பெற்ற மாநாடு மூலம் விடுதலைப் புலிகள் அமைப்பைக் கட்டுப்பாட்டினுள் கொண்டுவருவதற்கான அருமையான சந்தர்ப்பமாகுமென்ற வகையில் பல அரசியல்வாதிகளும், விமர்சகர்களும் எண்ணியிருந்தனர். சில சமயம் விடுதலைப் புலிகள் அமைப்புக் கூட அம்மாநாடு



குறித்து அவ்வித கருத்துக் கொண்டிருக்கலாம். விடுதலைப் புலிகள் அமைப்பு சமாதானப் பேச்சுகளை இடைநிறுத்த முடிவு செய்தமையை, அது தற்காலிகமானதொரு முடிவு என்றே அரசு எண்ணியது. ஓரிரு வாரங்களில் விடுதலைப் புலிகள் அமைப்பு மீண்டும் சமாதானப் பேச்சுகளில் கலந்துகொள்ளுமென அரசு பெரிதும் நம்பிக்கை கொண்டிருந்தது.

தம்மைக் கட்டுப்படுத்துவதற்கான திட்டங்கள் வகுக்கப்படுவதாக விடுதலைப் புலிகள் அமைப்பு சந்தேகம் கொண்டால், அவர்கள் எந்தவொரு சூழ்நிலையிலும் மீண்டும் பேச்சுகளில் கலந்துகொள்ள முன்வர மாட்டார்களென்பதை விடுதலைப் புலிகள் அமைப்பையும் பிரபாகரனையும் பற்றி நன்கறிந்த எவருக்கும் ஊகிப்பது சிரமமானதல்ல. அவ்வாறு அவர்களைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கான தேசிய, சர்வதேச, யுத்த மற்றும் சமாதானநிலை அணுகுமுறை ஏதாவது மேற்கொள்ளப்படினும், அதுபற்றி உடனடியாகத் தெரியவரும் அளவுக்கு இவ்விடயம் அரசியல் முக்கியத்துவம் கொண்டதென்பதை நாம் உணர்ந்துகொள்ளல் வேண்டும்.

சமாதானத்துக்கான பயணம் என்பது கட்டுப்படுத்துவது என்றல்லாமல் மதிநுட்பத்துடனும் நியாயமான முறையிலும் பிரச்சினைக்குத் தீர்வு காணவிழையும் ஒரு பயணமாகும். விடுதலைப் புலிகள் அமைப்பைக் கட்டுப்படுத்தும் நோக்கிலான தென்பகுதியில் வெளியிடப்படும் சகல அபிப்பிராயங்களும் விடுதலைப் புலிகள் அமைப்பு சமாதானப் பேச்சு முயற்சிகளிலிருந்து மேலும் தூர விலகிச் செல்லவே வழி வகுப்பனவாக அமையும். பிரபாகரன் என்பவர் மற்றவர்களால் கட்டுப்படுத்தப்படும் நிலைக்கு முகம் கொடுப்பதைவிட மரணத்தைத் தேர்ந்தெடுக்கக் கூடிய நிர்வாக நிலை கொண்ட யுத்தத் தலைவரென்பதைப் புரிந்து கொள்வதற்கு விசேட புத்திக்கூர்மை எதுவும் அவசியமல்ல.

விடுதலைப் புலிகளினதும், பிரபாகரனினதும் இதுவரையிலான பயணம் தமிழ்மக்களுக்கான தனியானதோர் இராச்சியம் என்ற இலக்கை நோக்கியே அமைந்தது. அதேவேளை, ஸ்ரீலங்கா அரசுகள் சிறுபான்மைத் தமிழ்மக்களுக்கு பலவித சலுகைகளை வழங்குவதன் மூலம், பெரும்பான்மைச் சிங்கள நிர்வாகத்தை நிலை நிறுத்தும் நோக்கிலேயே இயங்கி வந்தன. நாடு சுதந்திரம் பெற்ற நாள் முதல் இற்றைவரையிலும், அதிகாரத்திலிருந்த அரசுகளின் நடவடிக்கைகள் இந்த அடிப்படையையே ஆதாரமாகக் கொண்டிருந்தன.

இவ்வித நோக்கங்களைக் கொண்ட இருதரப்பாரின் கொள்கைகளிலும் மாற்றம் ஏற்படவேண்டியது அவசியமாகும். சமாதான நடவடிக்கைகள் இரு தரப்பினரின் ஒன்றிணைந்த கருத்துப் பரிமாற்றங்கள் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டிய விடயமாகும். இவையாவற்றையும் விட மிக முக்கியமானதாக அமைவது ஸ்ரீலங்கா அரசு பெரும்பான்மைவாதப் போக்கைக் கைவிட்டு சமஷ்டி அமைப்பு நிர்வாக முறை மூலம் புதியதொரு ஜனநாயகப் பாதையைக் காட்ட முயல்வதாகும்.

இவ்வித முற்போக்கான மாற்றமொன்றின் மூலமாகவன்றி, ஸ்ரீலங்காவில் சமாதானத்தை உருவாக்குவதற்கு வேறு மாற்று மார்க்கம் எதுவுமில்லை. தமது புதிய பாதையில் தற்போது விடுதலைப் புலிகள் அமைப்பும், அரசும் பிரவேசிக்க ஆரம்பித்துள்ளனர்.

ஜப்பானில் இடம்பெற்ற உதவி வழங்கும் மாநாட்டில் விடுதலைப் புலிகள் அமைப்பு கலந்துகொண்டிருந்தால் அதற்குச் சர்வதேச சமூகத்திடம் பெரிய அளவிலான அந்தஸ்தைப் பெற்றுக்கொள்ள முடிந்திருக்கும். இந்நாட்டின் தமிழ்ப் பொதுமக்களது சிரமங்களையும் அவர்கள் எதிர்நோக்கும் கஷ்டங்களையும் அம்மாநாட்டில் வெளிப்படுத்தச் சந்தர்ப்பம் வாய்த்திருக்கும். சமாதான நடவடிக்கைகளில் அவர்கள் எதிர்நோக்கும் குறைபாடுகளை வெளிப்படுத்த வாய்ப்புக் கிட்டியிருக்கும். விடுதலைப் புலிகள் அமைப்பின் தீவிர எதிர்பார்ப்பாளர்கள் கூட, இவ்விதச் சந்தர்ப்பத்தை உரிய வகையில் விடுதலைப் புலிகள் அமைப்பு பயன்படுத்திக்கொள்ளத் தவறமாட்டார்களெனவே நம்பியிருந்தனர்.

ஆனால், சர்வதேச சமூகத்தின் சகல நெருக்குதல்கள் மத்தியிலும் பிரபாகரன் தனது பிரதிநிதிகள் குழுவை இம்மாநாட்டுக்கு அனுப்பிவைக்கவில்லை. அதேசமயம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பல தடவைகள் மாற்றங்கள் செய்து சமர்ப்பித்த இடைக்கால நிர்வாக அமைப்பு முறைத் திட்டம் தொடர்பாக பேச்சு மேற்கொள்வதற்கும் ஒப்புக்கொள்ள மறுத்தார். தற்போது இணக்கம் காணப்பட்ட உதவி நிதி ஒப்பந்தங்களாலோ அல்லது றிச்சர்ட் ஆர்மிடேஜினுடைய வேண்டுகோள் மூலமோ புலிகளை மீண்டும் பேச்சு மேசைக்கு கொண்டுவர முடியாதென்பது தெளிவாகியுள்ளது. இடைக்கால நிர்வாக சபை வழங்கப்பட்டால் மட்டுமே விடுதலைப் புலிகள் அமைப்பை மீண்டும் சமாதானப் பேச்சுகளில் கலந்துகொள்ளச் செய்ய முடியும் என்பது தெரியவருகின்றது.

இந்த நிலையில், விடுதலைப் புலிகள் அமைப்புக்குத் தற்போது இரண்டு விடயங்களே தெரிவில் உள்ளன. ஒன்றில் விடுதலைப் புலிகள் அமைப்பு இடைக்கால நிர்வாக அதிகாரத்தைப் பெற்றுக்கொண்டு பேச்சுக்களை மேற்கொள்ளவேண்டும்; அல்லது இடைக்கால நிர்வாகத்தைப் பெறுவதற்காகக் கடுமையாக வற்புறுத்தக் கூடிய பலத்தை உருவாக்கிக்கொள்வதனூடாக மீண்டும் பேச்சுக்களில் கலந்துகொள்ளவேண்டும். அவ்விதம் ஸ்ரீலங்கா அரசை வற்புறுத்துவதற்கான ஒரேவழி, தமது உயர் போரிடும் பலத்தை வெளிப்படுத்துவதேயாகும் என்பது அவர்களது அனுபவபூர்வமான உண்மையாகும்.

இடைக்கால நிர்வாக அதிகாரம் இன்றி மீண்டும் பேச்சுக்களில் கலந்துகொள்வதை தமது தோல்வியென விடுதலைப் புலிகள் அமைப்புக் கருதுகிறது. கோடிக்கணக்கான பணத்துக்காகவோ, சர்வதேச சமூகத்தின் வற்புறுத்தல்களுக்காகவோ அத்தோல்வியை ஏற்றுக்கொள்ளப் பிரபாகரன் தயாராயில்லை.

ஸ்ரீலங்கா அரசு இடைக்கால நிர்வாகம் என்ற தனது துரும்பை இன்னும் கைவிடவில்லை. கூடிய அதிகாரங்கள் கொண்ட இடைக்கால நிர்வாகத்தை விடுதலைப் புலிகளுக்கு வழங்குவது தனது தோல்வியென்ற வகையில் ஸ்ரீலங்கா அரசு கருதவில்லை. ஆயினும், தற்போது சர்வதேச சமூகத்தின் முன் பிரதமர் சமர்ப்பித்துள்ள இடைக்கால நிர்வாக அமைப்பு விதிகளை அதே விதத்தில் எவ்வித மாற்றங்களுமின்றி ஏற்றுக்கொள்ளவைப்பது இலேசானதல்ல என்பது வெளிப்படையாகும்.

## வீயெஸ்ரீ

இச்சிக்கல்களிலிருந்து விடுபட வேண்டுமாயின் ஒன்றில் பயங்கர நிலையை தேர்ந்தெடுப்பது போன்று மீண்டும் யுத்தப்பாதையில் பயணிக்க வேண்டும். அல்லது மீண்டும் புதிய, பெரிய மாற்றங்களுடன் விரிவான சமாதானப் பேச்சுகளில் ஈடுபடல் வேண்டும். விடுதலைப் புலிகள் அமைப்பைப் பொறுத்தவரையில் மீண்டும் பேச்சுக்களில் ஈடுபடுவதில்லையெனத் தீர்மானிப்பதாயின் மீண்டும் யுத்தமொன்றில் ஈடுபடுவதைத் தவிர வேறு மார்க்கம் எதுவுமில்லை. அவ்விதம் யுத்தநிலை உருவானால் அது பெரிய அளவிலான யுத்தமாக அமைய இடமில்லை என்பதுடன் தற்போது விட்டுவிட்டு இடம்பெறும் மோதல் சம்பவங்களில் அதிகரிப்பு ஏற்படுவதாக மட்டுமே முடியும். அவ்வாறல்லாதுவிடின், யாழ்ப்பாணத்தின் உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பாக முன்னெடுக்கப்படும் பொதுமக்களது சாத்வீக எதிர்ப்பு நடவடிக்கைகளாகவும் அமையக்கூடும்.

மற்றொரு புறத்தில் ஜப்பானில் இடம்பெற்ற பேச்சுகளில் விடுதலைப் புலிகள் அமைப்பு கலந்துகொள்ள வேண்டுமென வற்புறுத்தி வந்த அமெரிக்கா, மீண்டும் யுத்தம் உருவானால் அந்த யுத்தத்தில் தொடர்பு கொள்ளுமென்ற மாயையை நாம் கொண்டிருக்கக்கூடாது. இந்தியா கூட அந்த யுத்தத்தில் மத்தியஸ்த நடவடிக்கையைக்கூட மேற்கொள்ள முன்வரப்போவதில்லை. மீண்டும் யுத்தமொன்று உருவாகுமானால் அதனை இந்நாட்டு இராணுவத்தினரே எதிர்கொள்ள வேண்டியேற்படுமென்பதை நாம் உணர்ந்து கொள்ளவேண்டும். ஜப்பான் மாநாட்டில் உறுதி செய்யப்பட்ட உதவி நிதியிலிருந்து எதனையும் யுத்தத்துக்காகச் செலவிட முடியாதென்பதை நாம் மறந்து விடக்கூடாது. இந்நாட்டில் சமாதானச் சூழ்நிலை நிலவினால் மட்டுமே அந்நிதி எமக்குக் கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு.

அரசின் சமாதான முயற்சிகளுக்கான பெறுமதியான பரிசில் போன்ற சர்வதேச சமூகத்தின் உதவியைத் திடீரென யுத்தத்துக்கான உதவியாக மாற்றிக்கொள்ளக்கூடிய எவ்வித வாய்ப்பும் கிட்டாது. அமெரிக்கப் பிரதி இராஜாங்க அமைச்சர் றிச்சர்ட் ஆர்மிடேஜின் வசனத்தில் கூறிக்கொள்வதானால் "ஸ்ரீலங்காவுக்குச் சமாதானம் தேவைதானா என இறுதி முடிவு செய்வது ஸ்ரீலங்காவின் பொது மக்களைச் சார்ந்த விடயமே" எனக் கூறிக்கொள்ளமுடியும்.

இச்சிக்கலிருந்து எம்மால் விடுபட முடியுமா? அதிகாரம் கொண்ட இடைக்கால நிர்வாக அமைப்பொன்றினை வடக்கு - கிழக்குப் பகுதிகளுக்கு வழங்கக்கூடியதான அரசமைப்பொன்று இன்று நாட்டுக்கு அவசியமாகும். அதன் மூலமே தமிழ் மக்களிடமும் விடுதலைப் புலிகள் அமைப்பினதும் நம்பிக்கையைக் கட்டி வளர்க்கக் கூடியதாக அமையும். தற்போதைய சூழ்நிலையில் இவ்வாறானதொரு நிலையைத் தோற்றுவிக்க வேண்டுமானால் அது ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகிய இருதரப்பினரிடையே சகவாழ்வு மிக்க புரிந்துணர்வுடன் கூடிய நிர்வாக இணைப்பின் மூலமே உருவாக்கிக் கொள்ள



இயலும். ஐ.தே.கட்சி இவ்விடயத்தில் தனித்து எவ்வித நடவடிக்கையையும் மேற்கொள்ள இயலாத நிலையிலுள்ளது. பொ.ஐ.முன்னணிகூட அமைதியான, சமாதான ஸ்ரீலங்காவைக் காண விரும்பினால் இச்சந்தர்ப்பத்தில் சக வாழ்வு அரசநிர்வாகம் அத்தியாவசியமாகிறது. அப்படியல்லாது பொ.ஐ.முன்னணிக்கு யுத்தத்தையே முன்னிலைப்படுத்தும் அவசியம் இருக்குமாயின் அது ஜே.வி.பியுடன் கூட்டுச் சேர்ந்துகொள்ள முடியும். சமாதானம் அவசியமாயின் சக வாழ்வு அரசியல் நிர்வாகம் நோக்கிச் செயற்பட்டாக வேண்டும்.

ஸ்ரீலங்காவின் பிரதான அரசியற் கட்சிகள் இரண்டும் ஒன்றிணைந்து புரிந்துணர்வுடன் செயற்பட்டால், இந்நாட்டுத் தமிழ்மக்களின் உரிமைகளை உறுதிசெய்யக்கூடிய சமஷ்டி ஆட்சி முறையிலமைந்த அரச நடைமுறையைக் கட்சிபேதமின்றி ஒப்புக்கொண்டால், அதன்மூலம் சமாதான நடவடிக்கைகளுக்குப் புத்துயிரளிக்க முடியும். அதுவுமின்றி சர்வதேச சமூகத்தின் ஆதரவையும் பெற்றுக் கொள்ள இயலும். தமிழ், சிங்கள மற்றும் முஸ்லிம் பொதுமக்கள் மத்தியில் நியாயமான, சிறப்புமிக்க அமைதி நிறைந்த ஸ்ரீலங்கா என்ற உணர்வை உருவாக்கி, அவர்களிடையே எதிர்பார்ப்பை உருவாக்க முடியும்.

சமாதானப் பேச்சுகள் மீண்டும் முன்னெடுக்கப்பட வேண்டுமாயின், இவ்விதமான சமநிலையும், புரிந்துணர்வுடன் கூடிய அரசியல் நிர்வாக மாற்றமும் இன்று அத்தியாவசியமாகிறது. விடுதலைப் புலிகள் அமைப்பைக் கட்டுப்படுத்த முயல்வதை விடுத்து, தொடர்புகளைப் பேணும் விதத்திலான அரச நிர்வாக முறைக்கு அவர்களை இணங்கச் செய்யவைப்பது அவ்வித அமைப்பின் குறிக்கோளாக அமைதல் வேண்டும். சகவாழ்வு நோக்கிலான அரச நிர்வாகம் இன்று அவசியமாவதற்கான காரணம் தமிழ்பொதுமக்கள் மத்தியில் மீண்டும் யுத்தத்துக்கான மனநிலை ஏற்படுவதை மாற்றுவதற்காகவன்றி, ஒன்றுபட்ட தேசத்திலிருந்து அழிவுதரும் யுத்தத்தை முற்றாகப் போக்கிக் கொள்வதற்காகவேயென நாம் உணர்ந்துகொள்ள வேண்டும். ★

# மட்டக்களப்பு சிறைச்சாலை பாதுகாப்பு 'திடீர்' அதிகரிப்பு

மட்டக்களப்பு,ஜுலை21

மட்டக்களப்பு சிறைச்சாலையின் பாதுகாப்பு கடந்த சில தினங்களாக பலப்படுத்தப்பட்டுள்ளது.

ஆயுதம் தாங்கிய பொலீஸார் காவற்கடமையில் ஈடுபட்டு வருகின்றனர். சிறைச்சாலையைச் சூழவுள்ள பகுதியில் இராணுவ காவல் அணியினர் ரோந்து நடவடிக்கைகளை அதிகரித்துள்ளனர்.

வாகரையில் கைது செய்யப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுப்பினர் இருவரும் கல்லடி பொலீஸ் சோதனைச் சாவடியில் வைத்து கைது செய்யப்பட்ட விடுதலைப் புலிகள் எட்டு பேரும் இச்சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாலேயே பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை - குறிப்பிட்ட விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்களுக்கு எதிராக ஆயுதக் கட்டளைச் சட்டத்தின் கீழ் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருப்பதால் மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கே இவர்களைப் பிணையில் விடுவதற்கான அதிகாரம் உண்டு எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-ரி)

# மாடு பிடிக்கும் அனுமதியை துஷ்பிரயோகம் செய்த நபர்

## கைது செய்ய நீதிமன்றம் உத்தரவு

வவுனியா,ஜுலை21

மாடு பிடிக்க நீதிமன்றம் வழங்கிய அனுமதியை துஷ்பிரயோகம் செய்ததாகக் கூறப்படும் ஒருவரை கைது செய்ய வவுனியா மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

வவுனியா குறுக்கல் புதுக்குளத்தைச் சேர்ந்த சின்னச்சாமி பழனிசாமி என்பவரையே கைது செய்யுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

தனது சொந்த கிராமத்துக்குச் சென்று தனது வளர்ப்பு மாடுகளை மீட்டுவர பொலீஸார் அனுமதி தர மறுத்ததாகக் குற்றஞ்சாட்டி மேற்படி நபர் கடந்தவருடம் செப்ரெம்பர் மாதம் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல்செய்தார்.

அதனை விசாரித்த நீதிமன்றம் கைவிடப்பட்டிருந்த அவரது மாடுகளை பிடிப்பதற்கு அவருக்கு அனுமதி வழங்குமாறு உத்தரவிட்டிருந்தது.

அந்தத் தீர்ப்பைப் பயன்படுத்தி அந்த நபர் பிறரின் மாடுகளையும் பிடித்து விற்று வந்ததாக வவுனியா அரச அதிபருக்கு முறைப்பாடுகள் கிடைத்தன. மேல் நீதிமன்றத்தின் கவனத்துக்கு இந்த விடயத்தை அரச அதிபர் கொண்டுசென்றார்.

இதனையடுத்தே அந்நபரை கைது செய்யுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது.

(ஓ-164)




புதிய உயர் கல்லூரியின் வெளிவாரிப் பட்டப்படிப்புகள் மாணவர் ஒன்றியத்தினால் புதிய நூல் நிலையத் திறப்பு விழாவும், 'கலா தரிசனம்' நூல் வெளியீட்டு விழாவும் அண்மையில் நடத்தப்பட்டன.

புதிய நூல் நிலையத்தை யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தரும், நல்லை ஆதீன முதல்வரும் திறந்துவைப்பதை முதலாவது படத்திலும் -

யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர், கல்லூரி இயக்குநர் சண்முகநாதனால் கௌரவிக்கப்படுவதை இரண்டாவது படத்திலும் காணலாம். (ஐ)

### லயன்ஸ் கழகங்களின் ஏற்பாட்டில்

# மலேரியாவை முற்றாக ஒழிக்க யாழ்ப்பாணத்தில் விசேட திட்டம்

## இன்றுமுதல் நடைமுறைக்கு வருகிறது

யாழ்ப்பாணம்,ஜூலை21

யாழ்ப்பாணத்தில் உள்ள லயன்ஸ் கழகங்கள் இணைந்து யாழ். மாவட்டத்தில் மலேரியா ஒழிப்புத்திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தவுள்ளன.

உலக நாடுகளின் நிதியுதவியுடன் நடைமுறைப்படுத்தப்படும் ஐந்தாண்டுத் திட்டம் இதுவாகும். இலங்கையில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட 12 லயன் மாவட்டங்களில் 306-பி மாவட்டங்களான யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் என்பனவும் அடங்கும்.

இத்திட்டம் தொடர்பாக வத்தளை மற்றும் சுன்னாகம் லயன்ஸ் கழகங்களின் பிரதிநிதிகள் யாழ். குமாரசாமி வீதியிலுள்ள டாக்டர் லயன் யோகேஸ்வரனின் இல்லத்தில் பத்திரிகையாளர் சந்திப்பொன்றில் விளக்கமளித்தனர். லயன்ஸ் கழகத்தின் மாவட்டம் 306 - பி ஆளுநர் றொகான் பெரேரா, உதவிமாவட்ட ஆளுநர் எஸ்.சிவானந்தன், பிராந்தியம் 5இன் தலைவர் றொகான் நாணயக்கார, பிராந்தியம் 9இன் தலைவர் டாக்டர் யோகேஸ்வரன், பிராந்தியம் 8இன் தலைவர் டாக்டர் செல்வி தமைலர் கனகரட்ணம் ஆகியோரும் அப்பத்திரிகையாளர் மாநாட்டில் கலந்துகொண்டிருந்தனர்.

வத்தளை லயன்ஸ் கழக லக்ஸ்மன், சுன்னாகம் லயன்ஸ் கழக திருநாவுக்கரசு ஆகியோர் இத்திட்ட இணைப்பாளர்களாக பணிபுரிவர். பிரதான இணைப்பாளர்களாக லயன் டாக்டர் மகஷிநாணயக்கார பணியாற்றுவார். செய்தியாளர் மாநாட்டில் தெரிவிக்கப்பட்டதாவது:-

மலேரியா ஒழிப்புத்திட்டத்தின் கீழ் பிரதானமாக சில நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

வறுமைக்கோட்டுக்கு உட்பட்டோருக்கு 'பெமித்ரின்' மருந்து தோய்க்கப்பட்ட நுளம்பு வலைகள் இலவசமாக வழங்கப்படவுள்ளன. நடுத்தர மற்றும் குடும்பங்களுக்கும் மலிவான விலையில் அவற்றை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

பிரசார நடவடிக்கைகளின் மூலம் மக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும். கருத்தரங்கு, துண்டுப் பிரசுர வெளியீடுகள், வானொலி மற்றும் தொலைக்காட்சி மூலமான பிரசாரங்கள் என்றவாறு அவை அமையும்.

நீர்நிலைகளில் நுளம்புப் பெருக்கத்தை கட்டுப்படுத்தும் வகையில் இறக்குமதி செய்யப்பட்ட திலாப்பியா மற்றும் கப்பி மீனினங்கள் பயன்படுத்தப்படவுள்ளன. இவற்றை பராமரிப்பதற்கேற்ற வகையில் அளவெட்டி மற்றும் கோண்டாவில் பகுதிகளில் இரு விசேட தாங்கிகள் அமைக்கப்படவுள்ளன.

மேலும், உள்ளூர் மூலிகைப் பொருள்கள் மற்றும் எண்ணெய்களைப் பயன்படுத்தி நுளம்புகளை ஒழிப்பது தொடர்பாகவும் விரிவாக ஆராயப்படும்.

கர்ப்பம் தரித்த பெண்கள் மற்றும் சிறுவர்களின் இரத்தப் பரிசோதனைகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

இன்று திங்கட்கிழமை முதல் இத்திட்டம் நடைமுறைக்குக் கொண்டுவரப்படவுள்ளது. முதற்கட்டமாக சுமார் ஆயிரம் நுளம்பு வலைகள் யாழ். மாவட்டத்திலுள்ள லயன் கழகங்களூடாக விநியோகிக்கப்படவுள்ளன. இவ்வருட இறுதிக்குள் 20ஆயிரம் வலைகள் வரை யாழ். மாவட்டத்துக்குள் விநியோகிக்கப்படும். படிப்படியாக மலேரியாவை கட்டுப்படுத்தி பூரணமாக அதனை இல்லாதொழிப்பதே இத்திட்டத்தின் இலக்காகும்.

இது தொடர்பாக ஒவ்வொரு மாதமும் பயிற்சிப்பட்டறைகள் இடம்பெற ஏற்பாடாகியுள்ளன. சுகாதார திணைக்களம் கிளினிக்குகள், வைத்தியசாலைகள் மற்றும் சமூக அமைப்புகள் அனைத்தினதும் ஆதரவுடன் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும். இத்திட்டத்தின் பூரணவெற்றி எட்டப்படுவதானது, சகல மக்களின் ஒத்துழைப்பிலேயே உள்ளது.

தற்போது மலேரியா நோய், பெருமளவில் கட்டுப்பாட்டில் கொண்டு வரப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், அதன் பெருக்கம் சடுதியாக ஏற்பட வாய்ப்புண்டு. மலேரியாவை முற்றாக ஒழிப்பதும், அது தொடர்பான விழிப்புணர்வை மக்களிடம் தொடர்ந்து பேணுவதுமே இத்திட்டத்தின் நோக்கமாகும் - இவ்வாறு அங்கு தெரிவிக்கப்பட்டது. (எ-9)

## முன்பள்ளி ஆசிரியரின் வேதனம் குறித்து அரசும் சமூக அமைப்புகளும் அலட்சியம்

### பிரதேச சபை செயலாளர் வேதனை

சொற்ப வேதனத்துடன் கடமையாற்றும் முன்பள்ளி ஆசிரியர்களது வருமானம் குறித்து சமூக நிறுவனங்களோ அல்லது அரசோ கவனத்தில் கொள்ளாதமை மிகுந்த வேதனைக்குரியது.

- இவ்வாறு தெரிவித்தார் ஊர்காவற்றுறை பிரதேச சபையின் செயலாளர் குகனேசலிங்கம். அண்மையில் யாழ்ற்றன் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற காரைநகர் பிரதேச முன்பள்ளி நிலையங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டியில் தலைமை வகித்து உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:-

ஒவ்வொரு குழந்தைக்கும் சிரமத்தைப் பாராது எழுத்தறிவு ஊட்டி அவர்களை எதிர்காலத்தில் நல்லகுடிமக்களாக உருவாக்குவதற்கான அடித்தளத்தை உருவாக்கிக் கொடுப்பவர்கள் முன்பள்ளி ஆசிரியர்கள். அவர்களுக்கு பயிற்சிகளை தொடர்ந்து வழங்கிவரும் நிறுவனங்கள் அவர்களது வேதனம் குறித்து பாராமுகமாக இருந்து வருகின்றன. இது வேதனைக்குரியதாகும்.

பொதுமக்கள் மத்தியில் ஒரு விழிப்புணர்வையும், அவர்கள் ஒவ்வொருவரது சமூகப் பங்களிப்புக் குறித்த அவசியத்தையும் எடுத்து விளக்கிவருகின்றோம். அத்துடன், சமூகத்திலுள்ள மேற்படி பிரச்சினைகளை இனம்கண்டு அவற்றை தீர்ப்பதற்கான நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறோம் - என்றார்.

தீவக கல்வி வலய சிறுவர் கல்விக்கான உதவிக்கல்விப் பணிப்பாளர் சி.தவராசா தனதுரையில் தெரிவித்ததாவது:-

முன்பள்ளி ஆசிரியர்களுக்கு பல இடங்களில் வழங்கப்படும் வேதனங்கள் உரிய முறையில் அவர்களைச் சென்றடைவதில்லை. அவர்களுக்கு வழங்கப்படும் வேதனம் அவர்களுடைய ஆடைகளை சுத்தம் செய்வதற்குரிய சவர்க்காரத்திற்குக்கூட போதுமானதல்ல. இந்நிலை மாற்றப்பட வேண்டும் - என்றார்.

காரைநகரைச் சேர்ந்த 15 முன்பள்ளி நிலையங்கள் கலந்துகொண்ட இந்நிகழ்வில் காரைநகர் துணை அரசியற்துறை பொறுப்பாளர் பாலன், உட்பட பலர் கலந்துகொண்டனர். (ஒ-16)

### மாவட்ட புனர்வாழ்வு ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜூலை21

யாழ்.மாவட்ட புனர்வாழ்வு ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் எதிர்வரும் 27ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு யாழ்.செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் கலந்து கொள்வதற்கென பிரதமரின் அலுவலக அதிகாரி எஸ்.சிவநாதன் யாழ்.வரவுள்ளார்.

யாழ்.அரச அதிபர் செ.பத்மநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் யாழ்.குடாநாட்டில் கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட புனர்வாழ்வு நடவடிக்கைகள் தொடர்பாக ஆராயப்படுவதுடன், எதிர்காலத்தில் இங்கு மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்வுப் பணிகள் தொடர்பாக கலந்துரையாடப்படவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-8)

### எரிகாயங்களுடன் யுவதி ஆஸ்பத்திரியில்!

யாழ்ப்பாணம்,ஜூலை21

மண்ணெண்ணெயை அடுப்பினுள் ஊற்றி தீமூட்டிய போது உடலில் தீப்பற்றிக் கொண்டதாகத் தெரிவித்து யுவதி ஒருவர் எரிகாயங்களுடன் யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்றுமுன்தினம் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நாரந்தனை வடமேற்கைச் சேர்ந்த மகேந்திரன் கவிதா (வயது22) என்ற யுவதியே இவ்வாறு எரிகாயங்களுக்கு உள்ளானவர் ஆவார். (ஒ-ரி)

# அடுத்த வரவு செலவுத் திட்டத்தில் அரசு சிக்கலை எதிர்கொள்ளும்!

### திறைசேரி செயலாளர் தெரிவிப்பு

கொழும்பு,ஜூலை21

'வற்'வரி மூலம் எதிர்பார்க்கப்பட்ட 2ஆயிரம் கோடி ரூபா அளவிலான நிதியைப் பெற்றுக்கொள்ள இயலாமையினால் அரசு அடுத்த வரவு செலவுத் திட்டத்தின் போது பாரிய சிக்கலை எதிர்நோக்கியுள்ளது.

பற்றாக்குறையான மேற்படி நிதியைப் பெற்றுக்கொள்ள வரி உயர்வு செய்யப்படமாட்டாது எனவும் -

சில்லறை வியாபாரிகள் மீது 'வற்'வரி திணிக்கப்படமாட்டாது என்றும் - திறைசேரியின் செயலாளர் சரித்த ரத்வத்தை தெரிவித்தார்.

வரி உயர்வைத் தவிர்த்து வேறு வழிமுறைகள் மூலம் இப்பற்றாக் குறையை நிரப்ப நடவடிக்கைகள் அரசினால் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் -

இதன்மூலம் நிதிச்சிக்கல் தீர்க்கப்படுமென தான் நம்புவதாகவும் - மேலும் தெரிவித்துள்ளார். (ஒ-ரி)

# இடைக்கால நிர்வாக அமைப்பு புலிகளுக்கு அதிகாரம் வழங்கிவிடும்

### 'சிஹல உறுமய' குற்றச்சாட்டு

கொழும்பு,ஜூலை21

அரசு முன்வைத்துள்ள இடைக்கால நிர்வாக சபை குறித்து திட்ட வரைபு விடுதலைப் புலிகளுக்கு பல்வேறு அதிகாரங்களை வழங்க வழி செய்கிறது.

சிஹல உறுமயவின் தேசிய அமைப்பாளர் சம்பிக்க ரணவக்க இவ்வாறு கூறியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இடைக்கால நிர்வாக சபை தொடர்பான திட்டவரைபில் நிலப் பரப்பு, பொலீஸ் மற்றும் நிர்வாகம் ஆகியவற்றில் விடுதலைப் புலிகளுக்கு அதிக அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

ஆயுதம் தாங்கிய குழுவொன்றிற்கு இவ்வாறான அதிகாரங்களை வழங்குவது நாட்டை அழிவுப் பாதைக்கு கொண்டு செல்லும்.

இத்திட்டவரைபு நடைமுறைப் படுத்தப்படுமேயானால் புலிகள் தங்களைப் பலப்படுத்திக்கொண்டுவிடுவார்கள்.

இதனைத் தடுக்க புலிகளுக்கு எதிரான தமிழ்க்கட்சிகள் மற்றும் முஸ்லிம் கட்சிகளை ஒன்று திரட்டி போராடவேண்டும் என்றார் அவர். (ஒ-6)

### அளவெட்டி வடக்குப் பகுதியில்

# தனிமையில் வாழ்ந்த நபர் வீட்டில் சடலமாக மீட்பு!

குடும்பத்தைப் பிரிந்து தனிமையில் வாழ்ந்து வந்தவர் நேற்றுக் காலை இரத்தம் கக்கிய நிலையில் வீட்டு வாசலில் இறந்து கிடக்கக் காணப்பட்டார்.

அளவெட்டி வடக்கு அமெரிக்கன் மிஷன் தமிழ் கலவன் பாடசாலைக்கு அருகில் உள்ள வீட்டில் தனிமையில் வாழ்ந்து வந்தவரும் இரண்டு பிள்ளைகளின் தந்தையுமான க.சின்னராசா என்பவரே இறந்து கிடந்தவர் ஆவார்.

இவர் இருந்த வீட்டுமுற்றம், கதவு, வீட்டின் உட்புறம் ஆகிய இடங்களில் இரத்தக்கறைகள் காணப்பட்டன. இறந்தவர் மாங்காய் வியாபாரம் செய்து வருபவர். இவர் கடந்த ஒரு மாதத்திற்கு முன்னர்தான் மகரகம புற்றுநோய் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று திரும்பியிருந்தார்.

சுன்னாகம் பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ஒ-86)

### மாகாண மட்டத்திலான

# எழுத்தாக்கப் போட்டி முடிவுகள் வெளியாகின

யாழ்ப்பாணம்,ஜூலை21

வடக்கு-கிழக்கு மாகாணப் பாடசாலை மாணவர்களுக்கிடையிலான தமிழ்மொழித்தினப் போட்டிகளில் எழுத்தாக்கப் போட்டிகளின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

எழுத்தாக்கப்போட்டியின் சகல போட்டிகளிலும் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் பெயர், விவரங்கள் வருமாறு:-

**★ ஆக்கம் எழுத்து (பிரிவு-1)**

முதலாமிடம் - ம.பிரசாந்தினி (திரு.புனித பிரான்ஸிஸ் சவேரியார் ம.வி.), இரண்டாமிடம் - வ.ஹேரசிகா (யாழ்.புனித ஜோன்பொஸ்கோ வித்தியாலயம்), மூன்றாமிடம் - உ.வெ.பாத்திமா ரிஸ்னா(கல்.இமாம் நூஹி வித்தியாலயம்.

**★ கட்டுரை வரைதல் (பிரிவு-2)**

முதலாமிடம் - ஆரணி ரஞ்சன் (திரு.புனித மரியாள் கல்லூரி), இரண்டாமிடம் - நவரெட்ணராசா பவித்திரா(கிளி.புனித திரேசா கல்லூரி), மூன்றாமிடம் - தி.காண்டீபன் (மண்டூர் விக்னேஸ்வரா வித்தியாலயம்)

**★ கட்டுரை வரைதல் (பிரிவு-3)**

முதலாமிடம் - ஜே.சுமியா(கல்.அல்மனார் மத்திய கல்லூரி) இரண்டாமிடம் - கி.சிவப்பிரகாந்த் (திரு.கோணேஸ்வரா இந்துக் கல்லூரி), மூன்றாமிடம் - உதயகுமார் அனுஷாந் (மட்டு.புனித மிக்கேல் கல்லூரி)

**★ கட்டுரை வரைதல் (பிரிவு-4)**

முதலாமிடம் - சி.இலக்கியா(உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), இரண்டாமிடம் - எமில்டா ஜோஜினி (மன்.கருங்கண்டல் றோ.க.ம.வி.), மூன்றாமிடம் - ச.அருட்செல்வம்(மட்டு.அரசடித்தீவு விக்கினேஸ்வரா வித்தியாலயம்)

**★ தமிழ்மொழிக் கட்டுரை வரைதல் (பிரிவு-5)**

முதலாமிடம் - தி.காயத்திரி(தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி), இரண்டாமிடம் - விஜயகுமார் அருணா (வட்டக்கச்சி மகா வித்தியாலயம்), மூன்றாமிடம் - சி.சஜந்தினி (அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரி)

**★ குறுநாடக ஆக்கம்**

முதலாமிடம் - வி.விக்னேஸ்வரன் (வவு.புதுக்குளம்மகா வித்தியாலயம்), இரண்டாமிடம் - எம்.எம்.நிஸ்ளா(கல்.அல்மனார் மத்திய கல்லூரி), மூன்றாமிடம் - வேலும் மயிலும் கஜேந்திரன் (மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை)

**★ கவிதை ஆக்கம் (பிரிவு-4)**

முதலாமிடம் - ரா.ப.அருஸ் (கிண்ணியா மத்திய கல்லூரி) இரண்டாமிடம் - நா.அரங்கா(சங்கானை சிவப்பிரகாச வித்தியாலயம்), மூன்றாமிடம் - றொ.றொ.பின்சா(மடு ஆண்டான்குளம் றோ.க.த.பாடசாலை)

**★ கவிதை ஆக்கம் (பிரிவு-5)**

முதலாமிடம் - இ.சுதர்சனா(வவு.சைவப்பிரகாச மகளிர் கல்லூரி), இரண்டாமிடம் - இ.மோகனாம்பிகை (பூநகரி மகா வித்தியாலயம்), மூன்றாமிடம் - ப.சைந்தினி(சாவகச்சேரி இந்துக் கல்லூரி)

**★ சிறுகதை ஆக்கம் (பிரிவு-4)**

முதலாமிடம் - ப.நிருத்திகா(கிளி.நொச்சி மகா வித்தியாலயம்), இரண்டாமிடம் - ந.கண்ணதாஸ்(வேலணை சைவப்பிரகாச வித்தியாலயம்), மூன்றாமிடம் - ச.திவ்யா(திரு.புனித மரியாள் கல்லூரி).

**★ சிறுகதை ஆக்கம் (பிரிவு-5)**

முதலாமிடம் - இரிஷிகாந்த் (திரு.கோணேஸ்வரா இந்துக் கல்லூரி), இரண்டாமிடம் - லோகராஜா கோபிநாத்(மட்டு. புனித மிக்கேல் கல்லூரி), மூன்றாமிடம் - எம்.தஸ்லிம்(சம்மாந்துறை முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயம்) (எ-10)

# PRIMA

கோழித்தீன், மாட்டுத்தீன், பொதிசெய்யப்பட்ட கோழிஇறைச்சிகள், கோழி இறைச்சிப்பாகங்கள், பிறிமா நூடில்ஸ் வகைகள், எண்ணெய் வகைகள் மற்றும் பிறிமா தயாரிப்புக்களைப் பெற்றுக்கொள்ளலாம். குறைந்த விலையில் கூடிய கழிவுகள் தரப்படும்.

யாழ். நகரின் ஏக விநியோகஸ்தர்கள்:

**பிறிமா (Prima) நிறுவனம்,**

(20491) 144, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (26-24-16-18)

## விற்பனையாளர் தேவை

மானிப்பாயில் இயங்கும் பார்மஸிக்கு மருந்து விற்பனையில் அனுபவமுள்ள பெண் விற்பனையாளர் தேவை.

**சிறிஅம்பாள் பார்மஸி அன்ட் குறோசறி**

இல.102/2, பிரதான வீதி,
மானிப்பாய்.

(24-16-18) தொலைபேசி இல.: 021-222 2889 (சி-29060)(26)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்ப்பாணக் கல்லூரியின் புதிய அதிபராகப் பதவி உயர்வுபெற்று இன்று கல்லூரிச் சமூகத்தின் பாராட்டைப் பெறுகின்றவரான

**உயர்திரு. நோயல் விமலேந்திரன்**

அவர்களை நாமும் உளமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

P.குகறாஜன்,
கோகுலன் கிறீம் ஹவுஸ்,
சங்கரத்தை.

V. பரமேஸ்வரன்
பங்குரு லேன்,
வட்டுக்கோட்டை.

(சி-20494) (25-24-16-18)

## DISSERTATION BINDING

பல்கலைக்கழக மாணவர்களின் ஆய்வுக் கட்டுரைகள் பல்கலைக்கழக நடைமுறைகளுக்கு அமைவாகக் கட்டிக்கொடுக்கப்படும். இரு பிரதிகள் கட்டுவதற்கான கட்டணம் ரூ. 350/-

**BHARATHI PATHIPPAKAM**
OFF-SET PRINTERS
430, K.K.S. ROAD, JAFFNA.
TELEPHONE: 222 3081

(சி-28995) (24-16-18)

## T.V. விற்பனைக்கு

K.V. 20.20, K.V. 20.62, K.V. 20.68, K.V. 20.60, K.V. 20.24 T.Vக்கள் உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு:

**அருளம்பலம்**

கூழாவடி லேன்,
மானிப்பாய்
(தபாலகம் அருகில்,
ஆனைக்கோட்டை).

(24-16-18) (20511)

## தேவை

தையல் வேலை செய்வதற்கு ஆள் தேவை.

தொடர்பு:

**சிவன் தையலகம்**
பிரதேச செயலகம் முன்பாக,
தெல்லிப்பளை.

(20488) (26-24-16-18)

## இணைய தளம்

உங்கள் கதைகள், கவிதைகள், கட்டுரைகளை இணையத்தில் பாதுகாத்துக் கொள்ள YARL.com (தமிழ் வெப் தளம்).

தொடர்புகளுக்கு:
YARL.com, HAUKETOVEI SC, LEIL 51
1266, OSLO,
NORWAY

(24-16-18) (20486)

## தவறிவிட்டது

**அன்ரன் றெஜிஸ்** என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல.840024016V) 18.07.2003 வெள்ளிக்கிழமை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 59, குருசோ வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைக்கவும். (தயவுசெய்து தபால் மூலமாவது அனுப்பிவைக்கவும்)

(20496) (26-24-16-18)

## தவறிவிட்டது

கொழும்பில் இருந்து வந்த வானில் அச்சுவேலிக்கும் திருநெல்வேலிக்கும் இடையில் குழந்தை யேசுவின் கிரீடமும் மற்றும் சில ஆவணமும் அடங்கிய கைப்பை தவறிவிட்டது. தயவுசெய்து கண்டெடுத்தவர்கள்:

**T. ஞானசேகரம்**
உயரப்புலம், ஆனைக்கோட்டை
எனும் முகவரியில்
ஒப்படைத்துதவவும்.
சன்மானம் வழங்கப்படும்.
T.P. 3339, 3602.

(20513) (26-24-16-18)

## வேலையாள் தேவை

மில்வேலையில் அனுபவம் உள்ளவர்கள், பழக விரும்புபவர்கள், உதவியாளர்கள் தேவை.

தொடர்பு: (24-18-16) (26)

**பிருந்தா மில்ஸ்**
23, றக்கா வீதி, யாழ்ப்பாணம். (20512)

## அனுமதியின்றி மணல் ஏற்றிய 'டிராக்டர்' பொலிஸாரிடம் சிக்கியது

தென்மராட்சி,ஜூலை21

அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றிவந்த உழவுஇயந்திரம் கொடிகாமம் பொலீஸாரால் கைப்பற்றப்பட்டது.

உழவுஇயந்திரத்தின் சாரதியை கடந்த வியாழனன்று சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர் செய்தனர்.

உழவு இயந்திரத்தின் சாரதிக்கு 5 ஆயிரம் ரூபா அபராதம் விதித்த நீதிவான், அபராதத் தொகையை செலுத்தத்தவறின் இரண்டு மாத சாதாரண சிறைத்தண்டனை அனுபவிக்குமாறும் மணலை மீசாலை காயத்திரி பீடத்திற்கு வழங்குமாறும் உத்தரவிட்டார். (எ-117)

## விவசாயக்குழுக் கூட்டம்

வலி.மேற்கு,ஜூலை21

வலிகாமம் மேற்குப் பிரதேச விவசாயக்குழுக் கூட்டம் நாளை செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு வலிகாமம் மேற்குப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் உதவிப் பிரதேச செயலர் க.தர்மராஜா தலைமையில் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்திற்கு துறைசார் திணைக்களங்களின் தலைவர்கள் சமூகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். (ஒ-150)

## விற்பனையாளர் தேவை

*சாவகச்சேரியில் இயங்கும் பார்மஸிக்கு மருந்து விற்பனையில் அனுபவமுள்ள ஆண்கள் தேவை.*

**அம்பாள் பார்மஸி அன்ட் குறோசறி**

இல.1, நவீன சந்தை, சாவகச்சேரி. தொலைபேசி இல.: 070 - 213313

(சி-29059) (26-24-16-18)

## செல்வி சோபிகா தவராஜாவை மனதாரப் பாராட்டி வாழ்த்துகிறோம்



கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி மாணவி செல்வி த. சோபிகா இந்து கலாசார அமைச்சினால் நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் அகில இலங்கை ரீதியில் 2ஆவது தடவையாக ரூபா 10ஆயிரமும் சான்றிதழும் பெறுவதையிட்டு மனதார வாழ்த்துகிறோம்.

திருமதி செ. செல்வராணி,
திரு. செ. ரமேஷ் J.P.

புலவர் வீதி, நவாலி வடக்கு.
(26-24-16-18) (சி-29053)

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியை திருமதி தவமணிதேவி சாம்பசிவம் அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி கமலேஸ்வரி சுப்பிரமணியம்**

அவர்கள் 17.07.2003 அன்று இயற்கை எய்திவிட்டார். அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம். அவரின் மறைவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆசிரியர் கழகம்,
யா/மானிப்பாய் இந்துக்கல்லூரி,
மானிப்பாய்.

(20518) (26-24-16-18)

## முப்பத்தோராம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்
12 - 05 - 1928



மறைவு
22 - 06 - 2003

# அமரர் சிவகுரு கதிர்வேலு

(கோவிலாக்கண்டி, கைதடி)

**திதி: 22.07.2003**

பாசத்தின் சுமையோடு பறந்து சென்ற அப்பாவே!
இரு விழி சிந்திய நீர்த்துளிகள் இன்னும் காயவில்லை.
அன்பின் அணிகலனாய் பாசத்தின் உறைவிடமாய்
குடும்பத்தின் குலவிளக்காய் வாழ்ந்த அப்பாவே!
எம்மைப் பரிதவிக்கவிட்டு எங்கு சென்றீர்கள்?
உறவுகள் மட்டுமல்ல தேசமே தேடுகிறது.
மாண்டவர்கள் மீண்டதில்லை என்ற உண்மை
உணர்ந்த பின்னும் ஏங்குகின்றோம் உங்கள் பிரிவால்
மனங்களில் மறையாத மாவிளக்கே.

*உங்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.*

அன்னாரின் இல்லத்தில் நாளை (22.07.2003) செவ்வாய்க்கிழமை நடைபெறும் வீட்டுக்கிருத்தியம், ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும்: மனைவி - பகவதி,
பிள்ளைகளான - புனிதராணி, புஸ்பராசா (ஜேர்மனி),
புஸ்பராணி (சுவிஸ்), புஸ்பகரன் (பிரான்ஸ்),
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

தற்காலிக முகவரி:
*நாவலடி, கோப்பாய் மத்தி,*
*கோப்பாய்.*

(சி-29062) (24-16-18)

## SHARP ஜப்பானியத் தொழில்நுட்பம் இப்பொழுது யாழ்ப்பாணத்தில்

be sharp



- உத்தரவாதத்துடன் கூடிய பணத்திற்கேற்ற பெறுமதி.
- யாழ் நகரிலேயே அனைத்துச் சாதனங்களுக்குமான உதிரிப்பாகங்களை (Spare Parts) பெற்றுக்கொள்ளலாம்.
- நிபுணத்துவம் மிக்கவர்களால் விற்பனைக்குப் பிந்திய சேவைகளை யாழ் நகரிலேயே பெற்றுக்கொள்ளலாம்.

Browns Electronics Live it up

Browns Group of Companies

இல.89, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 021-2225150

# கண்ணீர் அஞ்சலி

கலாசூரி **என்.கே.பத்மநாதன்** அவர்கள்

வழக்கம்பரை முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் வருடந்தோறும் நாதஸ்வர இசையை வழங்கி எம்மை எல்லாம் மகிழ்வித்த நாள்களை நாம் எவ்வாறு மறப்போம்.

*அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போம்.*

சிவஸ்ரீ சு.சுந்தரராசக் குருக்கள்
வழக்கம்பரை, சுழிபுரம்.

(C29054)(27-16-18)

# இந்திய ஜோதிடர் யாழ். விஜயம்

ஸ்ரீ சோட்டா நிக்கரை பகவதி அம்மன் அருள்பெற்று ஸ்ரீ வெட்டுடைய காளி அம்மன் வாக்குப்பெற்ற இந்தியப் பரம்பரை ஜோதிடர் யாழ் வருகை தந்துள்ளார். கைரேகை, ஜாதகம், எண்கணிதம், மகப்பேறு, குடும்பப் பிரச்சினையா? கல்வி, வெளிநாடு செல்லத்தடையா? தொழிற்பிரச்சினையா? காதல் பிரச்சினையா? திருமணப் பிரச்சினையா? தீராத நோயா? எந்தவிதமான பிரச்சினைகளுக்கும் தக்க பரிகாரம் மூலம் தீர்வு காணலாம்.

ஒரு முறை விஜயம் செய்து பாருங்கள்

(27-16-18) **மணிசாமி P.T.R ஈஸ்வரி அம்மா** (20484)

யாழ். உல்லாசப் பயணிகள் விடுதி. (பழைய லிங்கம் கூல்பார் அருகில்)

இல. 54. மணிக்கூட்டு வீதி. யாழ்ப்பாணம் (வெலிங்டன் சந்தி அருகில். பெருமாள் கோயிலடி.)

பார்வையிடும் நேரம் : காலை 9.00 மணிமுதல் மாலை 4.00 மணிவரை.

# வைத்தியம்

செங்கண்மாரி, அல்சர்,
ஆஸ்துமா, வாதநோய்கள்,
வலிப்பு நோய், பீனிசம்,
தலையிடி,
தலைகால் அவியல்,
சருமநோய்கள்,
மாதவிடாய்க்குத்து,
இரத்தப்போக்கு,
வெள்ளைக்கசிவு,
கருவழிதல்,
மகப்பேறின்மை,
குழந்தை வைத்தியம்,
வீரியக்குறைவு,
மூலவியாதிகள்,
மூத்திரரோகங்களில்
பிரபலமானவர்.
சகல வியாதிகளையும்
குணப்படுத்துபவர்:

வேலணை வைத்திய கலாநிதி
**சி.இராசரத்தினம்**
121, 2ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி எண் : 2459 (19873)

(27-16-18)

# பிரார்த்திக்கின்றோம்

நாதஸ்வர சக்கரவர்த்தி கலாசூரி

**அமரர் என்.கே.பத்மநாதன்**

அவர்களின் மறைவு இசை உலகிற்கும் அவர் குடும்பத்திற்கும் ஈடுசெய்ய முடியாத இழப்பாகும். துயருற்றிருப்பவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாகச் செலுத்தி அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

*இல.24 1/3, இனிசியம் றோட்,*
*தெகிவளை.*

திரு.அ.நமசிவாயம்
(புல்லாங்குழல் மாஸ்டர்)
குடும்பத்தினர்.

(20497)(27-16-18)

# மீண்டும் யாழ்நகரிலே..!

இசையமைப்பாளர்கள்
ஸ்ரீகுகன் சிவராமின் இசையில்
ஜெயா சுகுமார், நிரோஜனுடன்
முன்னணிப் பாடகர்கள் ஒருங்கே சங்கமிக்கும்

யாழ்.

# "ஸப்தஸ்வரா"

**இசைக்குழு**

*தொடர்பு:*
*சிவராமன்*
*(முத்திரைச்சந்தி கமநலத்திணைக்களம் அருகில்)*
*11/11, செம்மணி வீதி,*
*நல்லூர், யாழ்பபாணம்.*

(20504)(27-16-18)

★ தொடர்புகளை முன்கூட்டியே பதிவு செய்யவும்.

சிவமயம்



## காரைநகர் திண்ணபுரம் சிவன் கோயில்
## ஈழத்துச் சிதம்பர தேவஸ்தானம்
# வருடாந்த தேவி மஹோற்சவம் - 2003

**மஹோற்சவ கிரியை விவரம்**

**23.07.2003 சுபானு வருடம் ஆடி மாதம் 7ஆம் நாள் புதன்கிழமை**
காலை 10.00 மணிக்கு கொடியேற்றம் அதனைத் தொடர்ந்து அம்பாள் இடபவாகனத்தில் திருவீதி உலா வருதல்.

**26.07.2003 ஆடி மாதம் 10 ஆம் நாள் சனிக்கிழமை**
மாலை 6.00 மணிக்கு கைலாயவாகனத்தில் சுவாமி திருவீதி உலா வருதல்

**31.07.2003 ஆடி மாதம் 15ஆம் நாள் வியாழக்கிழமை**
தேர்த்திருவிழா காலை 7.00 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் 8.30 மணிக்கு அம்பாள் தேரிலே எழுந்தருளும் காட்சியும் இடம்பெறும்.

**01.08.2003 ஆடி மாதம் 16ஆம் திகதி வெள்ளிக்கிழமை**
காலை 7.00 மணிக்கு பூரகர்மம் (ருது சாந்தி) அம்பாளுக்கு நடைபெறும். 9.00 மணிக்கு வசந்தமண்டபப் பூசை தீர்த்தோற்சவமும் மாலை 7.00 மணிக்கு கொடியிறக்கமும் நடைபெறும்.

தினமும் காலை 8.00 மணிக்கு பகல் உற்சவமும் மாலை 4.00 மணிக்கு இரவு உற்சவமும் ஆரம்பமாகும்.
திருவிழா நடைபெறும் பத்து தினங்களும் அன்னதான மடத்தில் மாகேஸ்வர பூசை இடம்பெறும்.

★ **இதில் குறிப்பிட்டுள்ள நேரங்கள் அனைத்தும் பழைய நேரம் என்பதை கவனத்தில் கொள்ளவும்.**

*குறிப்பு:* (புதிய நேரங்களில்) தினசரி காலை8.15 மணிக்கு யாழ். பேருந்து நிலையத்திலிருந்தும் பிறபகல் 2.00 மணிக்கு ஆலயத்திலிருந்தும் கொடியேற்றம், ஆடி அமாவாசை, ரதோற்சவத்திற்கும் தீர்த்தோற்சவத்திற்கும் வழமையான சேவையுடன் மேலதிக சேவையும் நடைபெறும்.

ஆலயத்திற்கு வரும் அடியார்கள் பூ, மாலைகள், பால், இளநீர், தயிர் மற்றும் அபிஷேகப் பொருள்களைக் கொண்டுவரவும்.

ஆலய தர்மகர்த்தாக்கள்,
ஆ.அம்பலவிமுருகன்,
மு.சுந்தரலிங்கம்.

**காரைநகர்.** (சி-29050) (24-13-17)

# இதய அஞ்சலி



தமிழ் இசை உலகத்திற்கும் தமிழ் மண்ணுக்கும் பெருமையும் கீர்த்தியும் தேடித்தந்த இசை சக்கரவர்த்தியான

**N.K. பத்மநாதன்**

தன் கடைசி மூச்சு உள்ளவரை இசை தந்த இசை பேர் அரசனுக்கு எங்களின் ஆலயத்தின் சார்பாக இதய அஞ்சலியைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் மறைவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தேவஸ்தானம்,
அருள்மிகு கணபதீஸ்வரம்.
சிவன் கோயில்.

ஊர்காவற்றுறை. (20495)(26-27-16-18))

# கண்ணீர் அஞ்சலி



யாழ். அத்தியடிப் பிள்ளையார் கோயில்
முன்னாள் தலைவர்

**பொ.சோமசுந்தரம் அவர்கள்**

14.07.2003இல் இயற்கையெய்திவிட்டார்.
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல பிள்ளையாரைப் பிரார்த்திக்கிறோம்.
அவரின் மறைவால் துயருறும் குடும்பத்தினருக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

து.கனகசபை
தலைவர். (20479)(27-16-18)

கோயில் நிர்வாகமும்
அத்தியடி வாழ் மக்களும்.

பாலர் பாடசாலை ஆசிரியர்களும். சிறார்களுக்கான ஆங்கில ஆசிரியர்களும்

# தேவை

வடமராட்சிப் பிரதேசத்தில் வெகு விரைவில் ஆரம்பமாகவிருக்கும் பிரித்தானிய வர்த்தகக் கல்லூரிக்கு (ஆங்கிலப் பாடசாலை) பாலர் பாடசாலை ஆசிரியர்களும், சிறார்களுக்கான ஆங்கில ஆசிரியர்களும் மற்றும் பயிற்சி ஆசிரியர்களும், பகுதிநேர ஆசிரியர்களும் உடனடியாகத் தேவை.

உடனே விண்ணப்பிக்கவும்.

**BRITISH BUSINESS SCHOOL,**
**140,TEMPLE ROAD,JAFFNA**
**☎ 021 2225796**

(20498)(27-16-18)




## மகளிருக்கான 3 நாள்
# அழகுக்கலை வகுப்புக்கள்

**25, 26, 27 July - 2003**
**(காலை10 - பிற்பகல் 2வரை)**

*முதலாம் நாள் அமர்வில்:-*
**அழகுக் கலையும் சருமப் பராமரிப்பும்**
(கரும்புள்ளி, கருவளையம், பருக்கள், தோற் சுருக்கம் அகற்றுதலும், தலைமுடி பராமரிப்பும்)

*2ஆம் நாள் அமர்வில்:-*
**Facial** (8வகை பேசியல் முறைகளின் செய்முறை)

*3ஆம் நாள் அமர்வில்:-*
**மணப்பெண் அலங்கரிப்பு**
ஐபுறோ ஷேப்பிங்

**இந்தியன் இன்ஸ்ரியூட் பியூட்டி தெரபி**
சென்னை, இந்திரா நிறுவனத்தில் பயிற்சி பெற்ற
**செல்வி S. மதிவேணி** அவர்கள் பயிற்சி வழங்குவார்.

விரும்பிய அமர்வுகளில் கலந்துகொள்ள
அமர்வு ஒன்றின் கட்டணம் ரூபா 350 மட்டுமே!

**தூரிகை நுண்கலை வளாகம்,**
செங்குந்தா வீதி, கல்வியங்காடு.

(C29055)(27-16-18)

## பேரினவாதக் கட்சிகளை ஒன்றிணைத்து

# சுயநிர்ணய உரிமையுடன்கூடிய வாழ்வை பிரபாகரனாலேயே பெற்றுத்தர முடியும்!

## சமாதானக் கருத்தரங்கில் மாவட்ட நீதிபதி விக்னராஜா தெரிவிப்பு



வலி.வடக்கு,ஜூலை21

தென் இலங்கையின் இரு பெரும் சிங்கள பேரினவாதக் கட்சிகளையும் ஒன்றிணைத்து, தமிழ்மக்களின் சுயநிர்ணய உரிமையை சமஷ்டி அமைப்பின்கீழ் பெற்றுக்கொள்ளும் ஆற்றல், திறமை, வல்லமை தேசியத் தலைவர் பிரபாகரனுக்கு மட்டுமே உண்டு.

மேற்கண்டவாறு தெரிவித்தார் யாழ். மாவட்ட நீதிபதி ஆர்.ரி.விக்னராஜா.

சுதந்திரமானதும், நீதியானதுமான தேர்தல்களுக்கான மக்கள் செயற்பாட்டு நிறுவனம் ஏற்பாடு செய்த சமாதான செயல்முறை பற்றிய கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

சபா.நிமானுஷன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் நீதிவான் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையினுடைய பூகோள அமைப்பின் அடிப்படையில் தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழும் வடக்கு - கிழக்கில் தனியாட்சி அமையுமாக இருந்தாலும்கூட ஒற்றையாட்சி முறையின்கீழ் செயற்படமுடியாது.

குறிப்பாக, வடக்கு - கிழக்கில் வாழும் மக்கள் தமிழ்மொழியைப் பேசுபவர்களாகக் காணப்பட்டாலும்கூட, சமய ரீதியாகப் பல சமயத்தைச் சேர்ந்தவர்களும் வாழ்கின்றார்கள். 1949ஆம் ஆண்டு சமஷ்டி கட்சியாகத் தமிழரசுக் கட்சி உருவாக்கப்பட்டது.

1972ஆம் ஆண்டு தமிழர் விடுதலைக் கூட்டணி உருவாக்கப்பட்டபோதும்கூட வட்டுக்கோட்டைத் தீர்மானத்தில் தெளிவாகப் பின்வரும் விடயம் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அமையப்போகும் ஆட்சியில் முஸ்லிம் மக்களுடைய விவகாரம், பிரச்சினைகள் கருத்திற்கொள்ளப்பட்டு அவர்களுக்கும் பாதகம் ஏற்படா வண்ணம் சரியான முறையில் ஆட்சி அமையவேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

சமஷ்டி சம்பந்தமாக இன்று நாடுகளுக்கு நாடு வேறுபட்ட தன்மைகளைக்கொண்ட சமஷ்டி அமைப்புகள் காணப்படுகின்றன. உலகில் காணப்படும் நாடுகள் ஒவ்வொன்றிலும் அரசு என்பது காணப்படுகின்றது.

அரசு என்று குறிப்பிடும்போது அதனுடைய முதன்மைச் சட்டமாக அரசியலமைப்பு சட்டம் காணப்படுகின்றது. இரண்டுவகையான ஆட்சி முறை ஜனநாயக, சர்வாதிகார, சோசலிச நாடுகளிலும் காணப்படுகின்றன. இரண்டு வகையான ஆட்சி முறைக்குப் பெரிய பிரித்தானியாவை எடுத்துக்கொள்ளமுடியும்.

ஐக்கிய அமெரிக்கா, ஜேர்மனி, இங்கிலாந்து, சுவிட்சர்லாந்து, பெல்ஜியம் ஆகிய நாடுகளிலெல்லாம் சமஷ்டி ஆட்சி முறை காணப்படுகின்றது. ஆனாலும்கூட நாட்டுக்கு நாடு வேறுபட்டவையாகவே அவை காணப்படுகின்றன.

இதன் அடிப்படையில்தான் அரசினாலும், புலிகளினாலும் வெளிநாடுகளினுடைய சமஷ்டி அமைப்பு சம்பந்தமாக ஆராயவும் தெரிந்துகொள்வதற்குமாக பல குழுக்கள் இத்தகைய அரசியல் அமைப்பைக் கொண்ட நாடுகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

என்னைப் பொறுத்தவரையில் தமிழ் மக்களுடைய இனப்பிரச்சினையின் அடிப்படையில் இரண்டு தீர்வுகள் ஏற்படமுடியும். இன்று நடைபெறும் சமாதானப் பேச்சானது வலுப்பெற்று சமாதான அடிப்படையில் இணைப்பாட்சி ஏற்படமுடியும்.

மறுபக்கம் பிரச்சினையின் மத்தியில் இந்நாடு விடுபட்டுத் தனிநாடு உருவாக்கப்படலாம். ஆனால், பூகோள அமைப்பின் பிரகாரம் இது கூட ஒற்றையாட்சி அமைப்பின்கீழ் இயங்கக் கூடியதாக இருக்கமுடியாது.

சமஷ்டி அமைப்பின் நான்கு முக்கிய விடயங்களைக் கருத்திற் கொள்ளவேண்டும். மத்திய மாநில பிராந்திய அரசுகளுக்கு இடையேயான அதிகாரப் பகிர்வு, பங்கீடு, சமஷ்டி ஆட்சி, ஒற்றை ஆட்சிமுறையிலும் பார்க்க அரசியல் அமைப்பு சட்டத்தை முக்கியப்படுத்திப் பேணப்படுகின்றது.

மத்திய மாநில அரசுகளுக்கு இடையே எழக்கூடிய முரண்பாடுகள் பிரச்சினைகளுக்கு மத்திய மாநில அரசுகளின் சட்டங்கள், அரசியல் அமைப்பு உகந்த முறையில் இருக்கின்றனவா என்பதைத் தீர்மானிக்க அரசியல் அமைப்பு நீதிமன்றங்கள் இருக்கின்றன.

சமஷ்டி அரசியல் அமைப்பில் அரசியல் அமைப்பைத் திருத்துவது சம்பந்தமான விடயங்கள் உள்ளன.

ஐக்கிய அமெரிக்காவின் அரசியல் அதிகார பரவலாக்கத்தை எடுத்துக்கொண்டால், அங்கு மத்திய அரசின் அதிகாரப் பரவலாக்கல் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. அத்துடன், மத்திய அரசிலும் பார்க்க மாநில அரசுகள் பூரண சுதந்திரமான அரசுகளாகச் செயற்படவேண்டும் எனவும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

இந்திய அரசின் சமஷ்டி அரசியல் அமைப்பை எடுத்துக்கொண்டால் இங்கு மத்திய அரசின் அதிகாரம் மாநில அரசுகளின் அதிகாரத்திலும் பார்க்கக்கூடுதலாகக் காணப்படுகின்றது. மாநில அரசுகளின் அதிகாரம் வரையறை செய்யப்பட்டு மட்டுப்படுத்தப்பட்டதாகவும் காணப்படுகின்றது.

ஐக்கிய அமெரிக்காவினதும் இந்திய அரசியல் அமைப்பினையும் ஒப்பீட்டு ரீதியாக நோக்கினால் ஐக்கிய அமெரிக்கா நாட்டின் அரசியல் அமைப்பில் சில வித்தியாசங்கள், மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதை அவதானிக்கமுடியும். அரசியல் அமைப்பின்படி ஐக்கிய அமெரிக்க நாட்டில் மாநில அரசுகளுக்கு அதிகாரம் வரையறை இன்றி இருந்தபோதிலும் மத்திய அரசின் அதிகாரம் மட்டுப்படுத்தப்பட்டும் இருக்கின்றது.

அரசியல் அமைப்பு தலைமை நீதிமன்றம் அரசியல் அமைப்பு சம்பந்தமாகக் கொடுத்த வியாக்கியானத்தின் அடிப்படையில் ஐக்கிய அமெரிக்காவில் மத்திய அரசாங்கத்திற்கு கூடிய அதிகாரங்கள் கொண்ட ஒரு அமைப்பாக செயற்படக்கூடியதாக காணப்படுகின்றது.

இந்திய அரசியல் அமைப்பை எடுத்துக்கொண்டால், மாநிலத்திலும் பார்க்கக்கூடிய அதிகாரம் மத்திய அரசிடம் காணப்படுகின்றது. கூடிய சிறப்பம்சங்களையும் இது உள்ளடக்கியுள்ளது.

அரசியல் அமைப்பு ஒன்றை எதிர்காலத்தில் உருவாக்குவதாக இருந்தால் நேரு அரசியல் அமைப்பை உருவாக்க எத்தகைய மனநிலையில் விட்டுக்கொடுப்புகளுக்கு தயாராகவும் ஏற்கனவே எதனையும் தீர்மானிக்காமலும், தேசத்தின் நலனை மட்டும் கருத்திற்கொண்டும் அன்றைய நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்தவர்களை அரசியல் அமைப்பை வரைவதற்கு அழைத்து இருந்தார்.

எமக்கு 1948ஆம் ஆண்டு அரசியல் யாப்பு பிரித்தானியர்களினாலும் 1972ஆம் ஆண்டு குடியரசு அரசியல் யாப்பு மண்ணின் மைந்தர்களினாலும் 1978ஆம் ஆண்டு யாப்பு தமிழன் ஒருவன் எதிர்க்கட்சித் தலைவராக வரக்கூடாது என்ற அடிப்படையில் 19ஆவது அரசியல் அமைப்பு திருத்தம் நீதிமன்றினால் தடைசெய்யப்பட்டு நிறுத்தப்பட்டுள்ளது.

இவ்யாப்புகள் அமைக்கப்படும் போதே முன்னேற்பாடான திட்டங்களின் அடிப்படையிலேயே உருவாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடப்படவேண்டியதாகும்.

இன்று சமாதானத்துடன்கூடிய ஒரு சூழ்நிலையில் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான முன்முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. இச்சூழ்நிலையில் இலங்கையர் என்று கூறிக்கொள்ளும் நாம் ஒவ்வொருதரும் பங்களிக்கவேண்டியது அத்தியாவசியமாகும்.

சமாதானத்தில் அக்கறை கொண்டவர்கள் என்றவகையில் சமஷ்டி அமைப்பின் அடிப்படையில் தீர்வு ஒன்று எட்டப்படுவதற்கான நடவடிக்கைக்கு எம்மாலான முழுமையான பங்களிப்பை ஆற்றவேண்டியது எங்கள் ஒவ்வொருவரினதும் கடமையாகும்.

இலங்கை அரசியல் அமைப்பில் முதலாவது சலனம் இந்திய தமிழர்களின் பிரஜாவுரிமை பறிக்கப்பட்ட போது ஏற்பட்டது. அதனைத் தொடர்ந்து 1956ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட தனிச்சிங்கள சட்டத்தின் மூலம் ஏற்பட்டது.

தனிச்சிங்களச் சட்டம் இலங்கையில் கொண்டுவரப்பட்டபோது சிங்களம் படிக்கமாட்டேன் என்று மறுத்து இது செல்லுபடியற்றது எனக் கோரிய மறத்தமிழன் கோடீஸ்வரன்.

இவர் மாவட்ட நீதிமன்றத்தின் முன் தனிச்சிங்களச் சட்டத்தை எதிர்த்து வழக்குத் தாக்கல் செய்த போது அன்று மாவட்ட நீதிபதி தனிச்சிங்களச் சட்டம் செல்லுபடியற்றது எனத் தீர்ப்பளித்தார்.

ஆனால், இம்மனு மேன்முறையீட்டின் அடிப்படையில் உயர்நீதிமன்றத்திற்குச் சென்றது. ஆனால், அரசியல் அமைப்புப் பற்றியோ தனிச்சிங்களம் பற்றிய சட்டத்தையோ நீதிமன்றம் கருத்திற்கொள்ளாது அரச ஊழியராக இருக்கும் ஒருவர் அரசுக்கு கட்டுப்படவேண்டும் என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

மீண்டும் அன்று அதி உச்ச மேன்முறையீட்டு நீதிமன்றமாக இருந்த பிரிவுக் கவுன்ஸிலுக்கு (கோமறைக் கழகம்) முறையீடு செய்யப்பட்டது. கோமறைக்கழகம் பாரபட்சமான முறையில் தனிச்சிங்கள சட்டம் பற்றி எதுவும் கூறாது அரச ஊழியர்கள் அரசினால் கொண்டுவரும் சட்டங்களுக்குக் கட்டுப்படவேண்டும் என்று தீர்ப்பளித்தது.

நீதிபதியாக இருப்பவர்களுக்கு பயமோ அன்றி பாரபட்சமோ இருக்கக்கூடாது. இவைகளைக் கடந்து நீதியின்பால் நின்று தீர்ப்புகளை வழங்கவேண்டும்.

சட்ட வரம்பின்படி மறத்தமிழன் கோடீஸ்வரன் மாவட்ட நீதிமன்றில் தாக்கல் செய்த வழக்கிற்கு மாவட்ட நீதிமன்றினால் வழங்கப்பட்ட தீர்ப்பானது சட்டவரம்பின்படி அப்படியே இன்றும் இருந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

இன்றைய காலமாற்றத்திற்கு ஒரு காரணியாக தனிச்சிங்களச் சட்டமும் அமைந்துள்ளது. ஆனால், அச்சட்டத்திற்கு எதிராகப் பல்வேறு அழுத்தங்களும் தமிழ்மொழிப் பயன்பாடு சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்டன. ஆனால், செயற்படுத்தமுடியாத நிலைமை காணப்பட்டது.

1965ஆம் ஆண்டு தேசிய அரசாங்கம் அமைக்கப்பட்டபோது தமிழ் மொழி பயன்பாட்டுச் சட்டம் கொண்டுவரப்பட்டது. அச்சட்டத்தையும் அமுல்படுத்துவதில் பல பின்னடைவுகளை சந்தித்துள்ளமை குறிப்பிடவேண்டியதாகும்.

1987ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின்கீழ் மாகாண அரசியல் அமைப்புச்சட்டம் கொண்டுவரப்பட்டது. அதில் தமிழும் சிங்களமும் உத்தியோக மொழியாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. வடக்கு - கிழக்கில் நிர்வாக மொழி தமிழ் எனவும் குறிப்பிடப்பட்டது.

ஆனால், இதன் அமுலாக்கம் சீரான முறையில் நடைமுறைப்படுத்தப்படாமையால் இனப்பிரச்சினை இன்றும் நீடித்துக் கொண்டே செல்லுகின்ற நிலைமை காணப்படுகின்றது.

அரசியல் அமைப்பில் ஒரு கையால் உரிமையைக் கொடுத்து மறுகையால் பறிக்கக்கூடிய முறையில் அரசமைப்புச் சட்டம் இருக்குமாக இருந்தால் அதில் எந்தவகையான பயன்பாடும் இருக்கப் போவதில்லை.

1972ஆம் ஆண்டு அரசியல் அமைப்பு தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டதற்கு அமைவாக விட்டுக்கொடுப்புகள், புரிந்துணர்வுகள், தேசியம் என்பவற்றைக் கருத்திற்கொள்ளாமல் நாடாளுமன்ற கதிரைகளை மட்டும் இலக்காக வைத்து உருவாக்கப்பட்டது.

1978ஆம் ஆண்டு அரசியல் அமைப்புகூட தனியொருவருடைய கையில் அதிகாரங்கள் சென்றடையவேண்டும் என்ற அடிப்படையில் ஏனைய காரணிகளைக் கருத்தில் கொள்ளாது எதிர்காலத்தில் சிறியதொரு கட்சி எதிர்க்கட்சியாக வரக்கூடாது என்பதையும் இலக்காகக் கொண்டு உருவாக்கப்பட்டது.

ஆனால், 1977ஆம் ஆண்டு சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த தமிழர் ஒருவர் எதிர்க்கட்சித் தலைவராக வந்ததன் மூலம் சர்வதேச மட்டத்திலும் தமிழ் மக்களுடைய பிரச்சினையை எடுத்துக் கூறக்கூடிய வாய்ப்புக்களும் வசதிகளும் காணப்பட்டன. ஆனால், இவ் நிலைமையை சிங்கள அரசுகளோ அன்றி சிங்களத் தலைமைகளோ ஏற்றுக்கொள்ளவோ அன்றி அங்கீகரிக்கவோ தயாராக இருக்கவில்லை.

இதன் அடிப்படையிலேயே 1978 ஆம் ஆண்டு அரசியல் அமைப்பு விகிதாசாரப் பிரதிநிதித்துவத்தை மையப்படுத்தியும் அதிகாரம் ஒருவருடைய கையில்சென்று குவியக் கூடிய முறையிலும் மீண்டும் மண்ணின் மைந்தர்களினால் உருவாக்கப்பட்டது.

இலங்கையில் இனப்பிரச்சினை முழுமையாக தீர்க்கப்படவேண்டுமாக இருந்தால் தென்னிலங்கையில் உள்ள இரு பெரும்பான்மைக் கட்சிகளும் ஒன்றிணைக்கப்பட வேண்டும். கட்சி, இன, மொழி, மத வேறுபாடுகளைக் கடந்து ஒற்றுமைப்பட்டு இப்பிரச்சினையைத் தீர்த்துக்கொள்ளமுடியும்.

தமிழ் முஸ்லிம் மக்களுடனும் இணைந்து சமஷ்டி அரசியல் அமைப்பை நடைமுறைக்கு கொண்டுவரவேண்டியது அத்தியாவசியமாகும்.

இதனை ஏன் கூறுகின்றேன் என்றால், இன்று இனப்பிரச்சினை சமஷ்டி அடிப்படையில் தீர்க்கப்படவேண்டும் எனப் பலரும் வலியுறுத்தி வருவதன் அடிப்படையிலேயே இதனைக் கூறுகிறேன்.

கடந்த 11.03.2003 அன்று தமிழீழ நீதிமன்ற வளாகம் கிளிநொச்சியில் திறக்கப்பட்ட அன்றைய நாளை சரித்திரப் பிரசித்திபெற்ற தினமாகக் கருதுகின்றேன். அன்று நீதிமன்றத்தைத் திறந்து வைத்து உரையாற்றிய கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தமது உரையில்,

கலாநிதி நீலன் திருச்செல்வம் தமிழ் மக்களின் இனப்பிரச்சினை சம்பந்தமாக வரைந்த அரசியல் யாப்பு சிறந்தது, வரவேற்கக் கூடியது, தமிழ் மக்களுக்கு பயன் உடையது எனக் குறிப்பிட்டதுடன் அதில் சில விடயங்களை ஜனாதிபதி சந்திரிகா நீக்கி விட்டார் எனவும் தெரிவித்தார்.

அன்ரன் பாலசிங்கம் ஏற்றுக்கொள்ளக்கூடியது, வரவேற்கத்தக்கது என்பதற்கு மூன்று விடயங்களைக் குறிப்பிடலாம். பிரித்தானிய அரசியல் அமைப்பாக இருந்தாலும் சரி, 1972 ஆம் ஆண்டு, 1978 ஆம் ஆண்டு அரசியல் அமைப்புகளாக இருந்தாலும் சரி ஒற்றையாட்சி அமைப்பின் அடிப்படையிலேயே அவை வரையப்பட்டு இருந்தன.

ஆனால், கலாநிதி நீலன் வரைந்த அரசமைப்பானது மத்தியில் மத்திய அரசாங்கமும் பிராந்தியங்களும் இணைந்த அரசும் சேர்ந்து சுதந்திரம், தன்னாதிக்கம் உடைய அரசே இருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். இங்கு ஒற்றையாட்சி அமைப்பு முறை தூக்கி எறியப்பட்டது.

மற்றையது வடக்கு - கிழக்கு மாகாணம் ஒரே மாநிலம் என்பதை காட்டியுள்ளதுடன், தமிழர் கோரிக்கையும் ஆகும். இதனை சிறிய மாற்றத்துடன் இனவுணர்வுகளை அடக்கக்கூடிய முறையில் வடமாகாணமும் கிழக்கு மாகாணத்தில் தமிழர்கள் செறிந்து வாழும் பகுதியும் இணைக்கப்பட்டு தனிப் பிராந்தியமாக அமையவேண்டும் எனக் கூறியுள்ளார்.

காணிப்பங்கீடு வழங்கலிலும் கூட அப்பிராந்தியத்தையும் அப்பகுதியையும் சேர்ந்த மக்களுக்கே முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் எனவும் கூறியுள்ளார். நீதிபதியாக இருக்கும் நான் கூறுவதை நடுநிலைமையில் நின்று கூறவேண்டும். அவ்வாறு செய்யாதுவிட்டால் நான் நடுநிலைமை தவறியவன் ஆகிவிடுவேன்.

அந்த அரசியல் அமைப்பு நீலன் திருச்செல்வத்தினால் வரையப்பட்டபோது ஜி.எல்.பீரிஸும் ஜனாதிபதி சந்திரிகாவும் அதில் அடங்கி இருந்தனர். பின்னர் அன்றைய ஆட்சியாளர்களும் எதிர்க்கட்சியினரும் இரு குழுக்களாகப் பிரிந்து ஆராய்ந்து அதில் உள்ளதில் 80 வீதத்தை ஏற்றும் 20 வீதத்தை நீக்கியும்விட்டனர். அன்று எதிர்க்கட்சித் தலைவராக இருந்தவர் இன்றைய பிரதம மந்திரியே ஆவார்.

தென் ஆபிரிக்க நாட்டின் சுதந்திரத்திற்காக பாடுபட்ட நெல்சன் மண்டேலா உதட்டளவில் பேசாது உள்ளத்தில் இருந்து சுதந்திரத்திற்கான பேச்சுகளில் ஈடுபட்டார். இதேநேரம் கொள்கைகளைப் பாதிக்காத வகையில் விட்டுக்கொடுப்புகளையும் செய்தார். இதன் அடிப்படையில் இன்று சமாதானம் அங்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

இன்று ஜனாதிபதியாக நெல்சன் மண்டேலா இல்லாத போதிலும் கூட அவருக்கான மதிப்பும் மரியாதையும் மக்களிடம் இருப்பதுடன் சர்வதேச நாடுகளிடமும் இருந்து கொண்டே இருக்கின்றது. அன்று நீலன் திருச்செல்வத்தின் வரைபில் குறிப்பிட்ட விடயங்களின் அடிப்படையிலே புலிகளுடன் பேசமுடியும் என்று ஜனாதிபதி சந்திரிகா கூறியே அதன் நகலைத் திணைக்களங்களுக்கு அனுப்பி வைத்தார்.

இன்று தமிழர்கள் மத்தியில் எவ்வாறு ஒரு நிலைப்பாடு ஏற்பட்டுள்ளதோ அதேபோன்று தென்னிலங்கையில் உள்ள இருபெரும் கட்சிகளிடமும் ஏற்படவேண்டும். இதன் மூலமே சமாதான முறையில் இனப்பிரச்சினைக்கு நல்லதொரு தீர்வை எட்டக்கூடியதாக இருக்கும்.

கடந்த பொதுத்தேர்தல் முடிந்தவுடன் தமிழீழம் தவிர்ந்த எதனையும் தமிழ் மக்களுக்கு வழங்கத் தயாராக இருப்பதாக இன்றைய பிரதமர் குறிப்பிட்டார். இன்று அவர் எதனையும் புதிதாக தரவேண்டியதில்லை. அன்று நீலன் திருச்செல்வம் வரைந்த வரைபின் அடிப்படையில் எதிர்க்கட்சித் தலைவராக இருக்கும்போது நீக்கிய விடயங்களையும் இணைத்துத் தந்தாலே போதுமானதாகும்.

ஒவ்வொரு அரசியல்வாதியிடமும் சமாதானம் என்பது உதட்டில் இருந்து வருகின்றதேயன்றி உள்ளத்தில் இருந்து வரவில்லை. விட்டுக்கொடுப்புகள் மனத்தில் இருந்து வருமாக இருந்தால் இங்கு சமஷ்டி ஆட்சியைக் கொண்டு வரமுடியும். இங்கு விட்டுக்கொடுப்புகள் இன்மை, எதிர்காலத்தைப் பற்றி சிந்திக்காமை என்பனவே பிரச்சினையாக உள்ளன.

இலங்கை இன்று சர்வதேச நாடுகளின் கூரிய கண்களினால் அவதானிக்கப்பட்டு கொண்டு இருக்கின்றது. சமாதானத்தின் மூலம் இணைப்பாட்சியைக் கொண்டுவரவேண்டும் - எனவும் நீதிவான் குறிப்பிட்டார்.

(ஈ-86)

## சின்னஞ்சிறு விளம்பரம்

### திருமண சேவை

1967, விசாகம் 1, செவ்வாய் 7, படித்த மணமகனுக்கு Sponser செய்யக்கூடிய மணமகள் வெளிநாட்டில் தேவை. உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் தேர்வுக்கு நாடுங்கள். துரைவிமலா, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். (20499)

### புறொயிலர் விற்பனைக்கு

3Kg மேற்பட்ட நிறையுடைய தரமான புறொயிலர் இறைச்சிக்கோழிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: சிவா, இராமலிங்கம் றோட், முடமாவடி, திருநெல்வேலி கிழக்கு. (20435)

## புதிய அதிபரின் பதவியேற்பு நிகழ்வு

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் புதிய அதிபராக பதவியேற்றிருக்கும் என்.ஏ.விமலேந்திரனை வரவேற்கும் வழிபாடு இன்று திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு வட்டு. தென்னிந்திய திருச்சபையில் இடம்பெறும். தென்னிந்தியத் திருச்சபை பேராயர் கலாநிதி எஸ்.ஜெபநேசன் அடிகளார் தலைமையில் இந்த வழிபாட்டு நிகழ்வுகள் இடம்பெறும்.

வரவேற்பு வழிபாடுகளைத் தொடர்ந்து கல்லூரியின் ஒட்லி மண்டபத்தில் புதிய அதிபர் பதவியைப் பொறுப்பேற்கும் நிகழ்வு இடம்பெறும். தென்னிந்தியத் திருச்சபை பேராயர் கலாநிதி எஸ்.ஜெபநேசன் அதிபர் நியமனத்துக்கான அனுமதியை உத்தியோகபூர்வமாகக் கையளிப்பார். (எ-185)

## முக்கிய அறிவித்தல்

*தீவுப் பகுதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் – அனலைதீவு – வரையுள்ளது*

### கிளைக்குழுத் தெரிவு

தீவுப் பகுதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் சகல கிளைகளுக்குமான கிளைக்குழுத் தெரிவு எதிர்வரும் 26.07.2003ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு சங்கத் தலைமைச் செயலகத்தில் நடைபெறவுள்ளது. வாக்களிக்கத் தகுதியுடைய அங்கத்தவர்கள் அனைவரும் உரிய நேரத்திற்கு சமுகமளித்து கிளைக் குழுவைத் தெரிவுசெய்வதற்கு உதவுமாறு வேண்டப்படுகின்றீர்கள். இந்த அறிவித்தலை தங்கள் தனிப்பட்ட அறிவித்தலாக ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(சி20522) (24-16-18) - செயலாளர்.

## 12ஆம் ஆண்டு வீரவணக்கம்

தாயின் மடியில் 31 - 12 - 1973



தாயக மண்ணில் 21 - 07 - 1991

### வீரவேங்கை வரன்
### சரவணமுத்து ரவிச்சந்திரன்

*ஆகாய கடல் வெளிச்சமரில் தன்இன்னுயிர் நீத்த வீரவேங்கை வரனுக்கு எமது வீரவணக்கங்கள்.*

*ஆண்டுகள் பன்னிரண்டாகியும் உன் ஆசைமுகம் எம்மனதை விட்டு அகலாது.*

இவருடன் ஆகாய கடல் வெளிச்சமரில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட ஏன்னய மாவீரர்களுக்கும் எமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

யாழ்ப்பாணம். (20520) (26-24-16-18) - குடும்பத்தினர்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



### திரு. நோயல் விமலேந்திரன்

அவர்கள் யாழ்ப்பாணக் கல்லூரியின்
அதிபராக பதவி ஏற்பதையிட்டு
அவரைப் பாராட்டி,
அவரது பணி மேலும் சிறக்க
வாழ்த்துகின்றோம்.

**CHRISTY CONSTRUCTION**
**93, Main Street, Jaffna.**

(20515) (26-24-16-18)

## நாத கானம் ஓய்ந்தது



அளவையூரில் பிறந்து வாழ்ந்து
நாதகானம் இசைத்து ஊருக்கே பெருமை தேடிய
நாதஸ்வர மேதை

### என்.கே. பத்மநாதனின்

மறைவு குறித்து எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரது ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

அளவையூர் நாதஸ்வர வித்துவான்
ஏ. சுதந்திரன்,
வ. நகுலேஸ்வரன் குடும்பத்தினர்.

(20516) (26-24-16-18)


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

| சீட்டிழுப்பு வாரம் | 492 |
|---|---|
| திகதி | 18.07.2003 |

டிக்கட்டின் நிறம் - சிவப்பு
செல்லுபடியாகும் தொடர் இல. 5054397-5068767

வெற்றி இலக்கங்கள் **07 40 49 53**

லக்கினம் மேடம்



ஜக்பொட் பரிசு ரூபா. 1,702,700/- வெல்லப்படவில்லை

இந்த செவ்வாய்க்கிழமைக்கான ஜக்பொட் ரூபா **2,405,650/-**

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1 இல | 314,849 | 10 | 3,148,490 |
| 2 இலக்கங்கள் | 29,007 | 20 | 580,140 |
| 1 இல + லக்கினம் | 28,512 | 30 | 855,360 |
| 2 இல + லக்கினம் | 2,588 | 100 | 258,800 |
| 3 இலக்கங்கள் | 766 | 500 | 383,000 |
| 3 இல + லக்கினம் | 79 | 5,000 | 395,000 |
| 4 இலக்கங்கள் | 04 | 100,000 | 400,000 |
| 4 இல + லக்கினம் | - | 1,702,700 | - |
| மொத்தம் | 375,805 | - | 6,020,790 |

மொத்தப் பரிசுத் தொகை ரூபா. 6,020,790/-

தொடர் இல. 4069046க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுகள் 2003 ஜூலை 22ம் திகதி செவ்வாய்க்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

5056816-6-97
5055624-8-04
5057652-0-23
5057945-9-87
5066154-4-30

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கல் வீதி,
கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விறியோகஸ்தர்,
34, கந்தப்பசேகரம் வீதி,
(பஸ் நிலையம் முன்பாக), யாழ்ப்பாணம்.

PHOENIX O&M

## சனிக்கிழமை அதிர்ஷ்டம்





உத்தியோகபூர்வ முடிவுகள்
செல்லுபடியாகும் டிக்கட்
தொடர் இல. 3772645 இருந்து 3790117 வரை
சீட்டிழுப்பு இல. 1419
திகதி 19.07.2003

வெற்றி எண்கள் **12 22 25 35 57**

போனஸ் எண் **27**

ஜக்பொட் பரிசு
ரூபா 4,915,200/- வெல்லப்படவில்லை

| பொருந்திய எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத்தொகை | தொகை |
|---|---|---|---|
| 5 | - | 4,815,200/- | - |
| 4 எண்களுடன் போனஸ் எண் | 01 | 100,000/- | 100,000/- |
| 4 | 101 | 10,000/- | 1,010,000/- |
| 3 | 5,478 | 500/- | 2,739,000/- |
| 2 | 92,478 | 20/- | 1,849,560/- |
| சீட்டிழுப்பில் ஆகக்குறைந்த 12ம் எண் (போனஸ் எண் தவிர்த்து) | 113,247 | 10/- | 1,132,470/- |

இந்த புதன்கிழமைக்கான ஜக்பொட் ரூபா 5,788,500/-

வெல்லப்பட்ட மொத்த தொகை ரூபா.6,831,030/-

தொடர் இல. 2804346க்கு மேற்பட்ட ஊதா நிற டிக்கட்டுகள் 2003 ஜூலை 19ம் திகதி புதன்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிக்கிழமை அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் தங்கப்பரிசு வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

3773757-9-83
3786515-4-81
3779158-4-22
3775048-2-14
3788672-9-60

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கல் வீதி,
கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விறியோகஸ்தர்,
34, கந்தப்பசேகரம் வீதி,
(பஸ் நிலையம் முன்பாக),
யாழ்ப்பாணம்.

PHOENIX O&M

# நிரந்தர சமாதானம் ஏற்படுவதற்கு இடைக்கால நிர்வாகம் அவசியம்!

## தென்னிலங்கை அமைப்பு வலியுறுத்து

கொழும்பு, ஜூலை21

நாட்டில் நிரந்தர சமாதானம் ஏற்படவேண்டுமெனில் வடக்கு-கிழக்குக்கென இடைக்கால நிர்வாகம் ஒன்றை ஏற்படுத்துவது அவசியமாகும்.

தென்னிலங்கையைத் தளமாகக் கொண்டு செயற்படும் 'சுதந்திரத்திற்கான நீண்ட பயணம்' என்ற அமைப்பு இவ்வாறு வலியுறுத்தியுள்ளது.

இதுதொடர்பாக அந்த அமைப்பு வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:-

இடைக்கால நிர்வாக அமைப்பை ஏற்படுத்த நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை அவசியமானதாக அரசுக்கு உள்ளது. இதனால், எதிர்க்கட்சியினரின் ஒத்துழைப்பைப் பெறவேண்டிய கடமை அரசுக்குரியதாகும். இலங்கைத் தேசியப் பிரச்சினை பேச்சு மூலம் தீர்க்கப்படவேண்டும். அதேவேளை சமாதானம் நிரந்தரமாக்கப்பட வேண்டுமானால் இடைக்கால நிர்வாக அமைப்பு ஏற்படுத்தப்படுவது அவசியம் என்பதனை நாம் ஏற்றுக்கொள்கிறோம். இதற்கு முன் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசின் காலத்தில் எம்மால் இவ்விடயம் பலமுறை சுட்டிக் காட்டப்பட்டது. அதேவேளை, அப்போதைய அரசினாலும் இவ்விடயம் கொள்கையளவில் ஏற்கப்பட்டது. 2000ஆம் ஆண்டில் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசினால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அரசமைப்பு சீர்திருத்த சட்டமூலத்தில் வடக்கு - கிழக்குக்கான இடைக்கால நிர்வாகம் குறித்து குறிப்பிட்டு இருந்தமை யதார்த்தமான உண்மையாகும்.

இதற்கமைய விடுதலைப் புலிகளும், அரசும் செய்துகொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில் நடத்தப்படும் பேச்சுகளின் பெறுபேறுகளின்படி இடைக்கால நிர்வாக அமைப்பு என்னும் விடயம் பிரதான கவனஈர்ப்பாக இருக்க வேண்டும்.

அதேபோன்று, வடக்கு - கிழக்கு சார்பான இடைக்கால நிர்வாகத்தின் ஆரம்ப நிபந்தனையாக விடுதலைப் புலிகள் ஜனநாயகம் பேணப்படுவதை செயலில் காட்டவேண்டும் என்பது எமது எதிர்பார்ப்பாகும் - ஜனநாயக நீரோட்டத்தில் வேறு அரசியல் கட்சிகளின் சுதந்திரமான செயற்பாடு, உரிமை ஆகியவற்றை அனுமதித்தல், வடக்கு - கிழக்கு போல மற்றும் பிரதேசங்களில் உள்ள மக்களின் மனித உரிமையை அங்கீகரித்தல், சிறுவர்களை யுத்தத்தில் ஈடுபடுத்தாமை போன்ற விடயங்கள் நிபந்தனையாக முன் வைக்கப்படவேண்டும். அதே வேளை, இப்படியான இடைக் கால நிர்வாகத்தில் வடக்கு-கிழக்குப் பிரதேசங்களில் வசிக்கும் முஸ்லிம், சிங்கள மக்களின் பாதுகாப்பு பற்றிய உறுதியானதும் பலமானதுமான நம்பக் கூடியதுமான உறுதிமொழியைப் பெறுதலும் அவசியமானதாகும்.

இடைக்கால நிர்வாகத்தை ஏற்படுத்தும் முகமாக நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை தேவையாக உள்ளது. இதற்கு தற்போதைய ஐக்கிய தேசிய முன்னணி அரசு எதிர்க் கட்சிகளிடம் இருந்து ஒத்துழைப்பைப் பெறவேண்டிய முயற்சியை உடனடியாக ஆரம்பிக்க வேண்டும் - என்றுள்ளது. (ஒ-170)

# மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞர்கள் இருவர் படுகாயம்

## கைதடிப் பகுதியில் நேற்று சம்பவம்

யாழ்ப்பாணம், ஜூலை21

கைதடிப் பகுதியில் நேற்று இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இருவர் படுகாயமடைந்தனர்.

மோட்டார் சைக்கிளில் பயணம் செய்தவர்களான யாழ்ப்பாணம் பிரதான வீதியைச் சேர்ந்த எஸ். ஸ்ரீரங்கன் (வயது-26), நல்லூரைச் சேர்ந்த எஸ்.சஞ்ஜீத் (வயது-23) ஆகிய இருவருமே காயமடைந்தவர்களாவர்.

முன்னால் வந்த சைக்கிளுடனான விபத்தைத் தவிர்க்க முயற்சித்த வேளையே மோட்டார் சைக்கிள் விழுந்து விபத்து ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

படுகாயமடைந்தவர்கள் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (எ-15)

## காணித் தகராறில் கத்தியல் அடி!

யாழ்ப்பாணம்,ஜூலை21

நீண்டகாலமாக இருந்து வந்த காணித்தகராறு கத்தியல் அடியில் முடிந்தது. அடிக்கிலக்கானவர் தலையில் படுகாயமடைந்தார்.

மூளாயில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற இச்சம்பவத்தில் கந்தையா விசாகரத்தினவேல் (வயது65) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

காயமடைந்தவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார். (ஒ-15)

## தாச்சிப் போட்டி

வலி.வடக்கு,ஜூலை21

இலங்கை வங்கி, வர்த்தக வங்கி ஆகியவற்றின் அனுசரணையுடன் யாழ்.மாவட்ட தாச்சிச் சங்கம் நடத்தும் தாச்சிச் சுற்றுப்போட்டியில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு மானிப்பாய் கட்டுடை விநாயகர் விளையாட்டு மைதானத்தில் உடுவில் ஐக்கிய விளையாட்டுக் கழகமும் கைதடி வளர்மதி விளையாட்டுக் கழகமும் மோதுகின்றன. (ஒ-86)


### கண்ணீர் அஞ்சலி

எமது சகதோழர் திரு.இ.ஜெயச்சந்திரன்

[நல்லூர் பல நோ.கூ.சங்கப் பணியாளர்]

அவர்களின் அன்புத் தந்தையார்

**சின்னத்தம்பி இராசலிங்கம்**

அவர்களின் மறைவினால் அவரது குடும்பத்தினருக்கு ஏற்பட்டுள்ள துயரில் நாமும் பங்குகொள்வதோடு அன்னாரின் ஆத்மசாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கம், கிளை - நல்லூர் ப.நோ.கூ.சங்கம்.

(20523) (26-12-14-31)



### 31ஆம் நாள் கண்ணீர் அஞ்சலி

மண்ணின் மடியில் 18 - 01 - 1946



விண்ணின் திருவடியில் 21 - 06 - 2003

இலகடி, உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட

**அமரர் குழந்தையன் தங்கவேல்**

ஓயா உழைப்பாளர்
ஒற்றுமைக்கு முன்னிற்போர்
சாயாது இருப்பவர்க்கு
சளையாது உதவிடுவோன்
ஈயாத மனிதர்க்கு
என்றும் எதிரிகள் அல்லன்
தாயாத தம்மீது
தளரா மதிப்புடையோன்!

- குடும்பத்தினர்.

இலகடி, உடுப்பிட்டி. (20525) (26-14-12-31)


# 20ஆயிரம் மாணவர்களுக்கு 'சிசு சவியா' புலமைப்பரிசில்

## கல்வி அமைச்சு நடவடிக்கை

'சிசு சவியா' புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் 20 ஆயிரம் மாணவர்களுக்கு புலமைப் பரிசில் வழங்குவதற்கு கல்வி அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

கஷ்டப் பிரதேசங்களில் உள்ள வறுமைக்கோட்டின் கீழுள்ள குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு புலமைப் பரிசில்கள் வழங்குவதற்கு, இத்திட்டத்தின் கீழ் சென்ற ஆண்டு ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது.

இதேவேளை "புலமைப்பரிசில் வாரம்" ஒன்றை எதிர்வரும் செப்ரெம்பர் மாத ஆரம்பத்தில் நடத்துவதற்கும் கல்வி அமைச்சு ஒழுங்கு செய்துள்ளது.


### தவறிவிட்டது

Nokia (3310) இன கையடக்கத் தொலைபேசி (கறுப்பு உறையுடன்) 19.07.2003 அன்று கொக்குவில் சந்திப் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து சித்தமருத்துவத்துறை, கைதடி அல்லது 19, கல்லூரி வீதி, கொக்குவில் கிழக்கு என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

குறிப்பு: சித்த மருத்துவத்துறை சம்பந்தமான முக்கிய அழைப்புகள் உள்வரும்.

அ.மனோராஜ்

(20517) கொக்குவில் கிழக்கு. (24-12-14-31)



### புற்று நோயாளர்கள் கவனத்திற்கு!

யாழ். நகரிலுள்ள சம்பந்தர் மொடேர்ன் கிளினிக்கிற்கு இம்மாதம் 22ஆம், 23ஆம் திகதிகளில் Dr.P.வாணி அவர்கள் வருகை தரவுள்ளார். பதிவுகளை முற்கூட்டியே செய்யவும்.

தொடர்புகளுக்கு:

சம்பந்தர் மொடேர்ன் கிளினிக்,
அமுல் கிறீம் ஹவுஸ் அருகில்,
08, இராமையா செட்டியார் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

(20527) (23-12-14-31)



### அறிவித்தல்

**கொக்குவில் மேற்கு மஞ்சவனப்பதி முருகன் ஆலயம் மகாசபை அங்கத்தவர்களை இனம் காணுதல்**

யாழ். மாவட்ட வழ.இல:ந.சொ. 02 - (புதிய தொடர்)

யாழ். மாவட்ட வழ.இல:ந.சொ. 20 - (பழைய தொடர்)

20.06.2003ஆம் திகதி மேற்குறித்த வழ. இல. ந. சொ. 02இல் எனக்கு இடப்பட்ட கட்டளையின் பிரகாரம், குறித்த ஆலயத்தின் தர்ம பரிபாலனசபையினரைத் தேர்ந்து எடுக்கும் அதிகாரமுள்ள மகாசபை அங்கத்தவர்களை இனம் காணுவதற்காக இவ்வறிவித்தல் பிரசுரிக்கப்படுகின்றது.

பின்வரும் நிபந்தனைகளுக்கு அமைவாக உள்ளவர்கள் இதன் கீழ்க் காணப்படும் மாதிரி விண்ணப்பத்தைப் போலத் தயாரித்துப் பூரணப்படுத்தி ரூபா 250ஐ ஆலய பொருளாளரிடம் செலுத்தி பற்றுச்சீட்டு இலக்கத்தைக் குறிப்பிட்டு, "பெறுநர், மஞ்சவனப்பதி முருகன் ஆலயம், கொக்குவில்" என்ற விலாசத்திற்கு பதிவுத் தபால் மூலம் 04.08.2003ஆம் திகதிக்கு முன்பாக அனுப்பிவைக்கவும்.

நிபந்தனைகள்:-

I. கொக்குவில் மேற்கில் வசிப்பவராகவும், சைவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

II. 21 (இருபத்தொன்று) வயதிற்கு மேற்பட்ட ஆடவர்கள் மட்டும்.

III. யாழ். மாவட்ட வழ.இல.ந.சொ.20 (பழைய தொடரில்) குறிப்பிட்ட பின்வரும் 24நபர்களின் பரம்பரையில் வந்த ஆண், பெண் இருபாலாரின் சந்ததியினராக இருத்தல் வேண்டும்.

விபரம் வருமாறு:

01. சின்னத்தம்பி காசிநாதர்
02. வைரவநாதர் சின்னத்தம்பி
03. விஸ்வநாதர் ஆறுமுகம்
04. நாகப்பர் வேலுப்பிள்ளை
05. கார்த்திகேசர் கந்தர்
06. கந்தர் ஆறுமுகம்
07. பூதர் கந்தர்
08. சண்முகம் வேலுப்பிள்ளை
09. வைரவநாதர் சுப்பர்
10. முருகர் விஸ்வநாதர்
11. காசிநாதர் சண்முகம்
12. முருகர் கார்த்திகேசு
13. நன்னியர் சின்னத்தம்பி
14. பூதர் பண்டாரம்
15. மாரிமுத்து வல்லிபுரம்
16. சரவணை தம்பிஐயா
17. கார்த்திகேசர் செல்லப்பா
18. அருணாசலம் தம்பிஐயா
19. கந்தர் நாகர்
20. இராமு சின்னக்குட்டி
21. வைரமுத்து கைம்பெண் தெய்வானை
22. ஆறுமுகம் கைம்பெண் பார்வதி
23. சின்னாச்சி கைம்பெண் அம்பலவி
24. ஆறுமுகம் கார்த்திகேசு

விண்ணப்பதாரிகள் அனைவரும்,
(1) வதிவிடத்தை உறுதிப்படுத்த
(2) சமயத்தை உறுதிப்படுத்த
(3) வயதினை உறுதிப்படுத்த

ஆவணங்கள் சமர்ப்பிக்க வேண்டும். அத்துடன், தமது பரம்பரை எவ்வாறு மேற்குறித்த 24நபர்களில் யாராவது ஒருவருடன் தொடர்புடையது என்பதை விளக்குவதற்கான வம்சாவளி வரைபினைச் சமர்ப்பிக்க வேண்டும்.

வே. நடராசா, (பெறுநர்)
மஞ்சவனப்பதி முருகன் ஆலயம், கொக்குவில்.

விண்ணப்பப்படிவம்

கொக்குவில் மேற்கு மஞ்சவனப்பதி முருகன் ஆலய மகாசபை

1. முழுப்பெயர் :- ......................
2. தற்போதைய வதிவிட விலாசம் : ..................................
3. சமயம்:- ..........................
4. வயது:- ..........................
5. ரூபா 250ஐச் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டு
 1. இலக்கம்:- ................
 2. திகதி:- ................
6. வம்சாவளி வரைபு இணைக்கப்பட்டதா:- ................

(20906) (27-12-14-31) (விண்ணப்பதாரி)



### மரண அறிவித்தல்

**வைத்திலிங்கம் செல்லையா**

(ஓய்வுபெற்ற மனேஜர், அளவெட்டி மல்லாகம் ப.நோ.கூ.ச.)

அளவெட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும் அளவெட்டி மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் செல்லையா அவர்கள் 19.07.2003 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் சோதிப்பிள்ளை அவர்களின் அன்புக் கணவரும் செ.கந்தசாமி (மக்கள் வங்கி, கிளிநொச்சி), செ.பாலசுப்பிரமணியம் (உப்புக் கூட்டுத்தாபனம்), செ.ஆறுமுகம் (சுவிஸ்), செ.பரமேஸ்வரன் (ஆசிரியர். யா/வசாவிளான் ம.ம.வி.), செ.விக்னேஸ்வரன் (ஜேர்மனி), செ.கணேஸ்வரன் (தமிழ்க்கோ - நிதித்துறை), செ.கனேந்திரன் (ஆசிரியர், கிளி/உருத்திரபுரம் ம.வி.), புவனேஸ்வரி, பாலகௌரி, ஞானாம்பிகை, இராஜேஸ்வரி, கணேசாயினி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் இரவீந்திரன், சந்திரகுமார், விமலநாதன் (நீர்ப்பாசனத்திணைக்கள ஊழியர்), இராஜேஸ்வரன் (அதிபர், மு.ஒலிமடு தமிழ் ம.வி.), சிவதாசன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் இ.சுதர்சன், இ.சுதர்சினி, இ.நிதர்சன், க.கஜன், க.கஜந்தன், கு.கஜேந்திரன், ச.கியானா, ச.பாலகுமார், ச.கிருஷ்ணகுமார், ச.ஜசிந்தனா, ச.வருணா, ச.கிஷோர்குமார், வி.கஜகுகன், வி.கஜகோபிதன், வி.கஜவதனன், பா.கபிலன், பா.மதுரா, பா.பவித்ரா, ஆ.மந்தாரா, ஆ.ஆரங்கன், ப.கதிர்தர்சினி, ப.கதிர்தர்சனன், ப.சயந்தினி, இ.இளங்குமரன், இ.காண்டீபியா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (20.07.2003) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் அளவெட்டி கேணிப்பிட்டி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செ.கனேந்திரன்.
(ஆசிரியர், கிளி. உருத்திரபுரம் ம.வி.)

அளவெட்டி மத்தி.

(20924) (25-12-14-31)

# தமிழ் மக்கள் நடத்தும் போராட்டம் கஞ்சிக் கோப்பைக்கானது அல்ல!

## கறுப்பு ஜூலைக் கூட்டத்தில் கலாநிதி விக்கிரமபாகு உரை

தமிழ் மக்களின் போராட்டம் கஞ்சிக் கோப்பைக்காக நடத்தப்படும் ஒரு போராட்டமல்ல. அது ஓர் இனத்தின் தேவையை - உரிமைகளை - வலியுறுத்துவதாகும். இதை உணர்ந்து செயற்பட மறுக்கும் எந்தவோர் அரசும் பதவியில் நீடித்திருக்க முடியாது. இனத்துவேஷம் பேசுபவர்களுக்கு இலங்கை அரசியலில் இனி இடமில்லை.

புதிய இடதுசாரி முன்னணியின் கொழும்புக் கிளையினர் நேற்று ஏற்பாடு செய்திருந்த கறுப்பு ஜூலையின் இருபதாம் ஆண்டு ஞாபகார்த்த கூட்டத்தில் புதிய இடதுசாரி முன்னணியின் தலைவரும், மேல் மாகாண சபை உறுப்பினருமாகிய கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன உரையாற்றிய போது இவ்வாறு தெரிவித்தார்.

கட்சியின் செயற்குழு உறுப்பினர் நடராசா ஜனகன் கூட்டத்துக்கு தலைமை வகித்தார். அங்கு விக்கிரமபாகு கருணாரட்ன மேலும் கூறியதாவது:-

இனப்பிரச்சினையை புலிகளோடு பேச்சு நடத்தித் தீர்க்கவேண்டும் இதை நாம் பல வருடங்களாகவே வலியுறுத்தி வருகிறோம். இதுதான் யதார்த்தம் என்பதை அரசு இப்பொழுதாவது உணர்ந்து செயற்படுவது மகிழ்ச்சிக்குரியது.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியும், ஜே.வி.பியினரும் பதவி ஆசையால்தான் இணைந்து செயற்பட முன்வந்திருக்கிறார்கள். சந்தர்ப்பவாத அரசியல் நடத்தும் இவர்கள் இனப்பிரச்சினைத் தீர்வில் உண்மையான ஆர்வம் கொண்டவர்களல்லர்.

ஜே.ஆர்.ஜெயவர்த்தன பதவியிலிருந்த போது புலிகளின் விடுதலைப் போராட்டத்தை அமெரிக்கா, இஸ்ரேல் போன்ற நாடுகளின் உதவியுடன் நசுக்க முனைந்தார். அது தோல்வியில் முடிந்தது.

வடக்கு- கிழக்கில் இளைஞர்கள் மத்தியில் எழுந்த கிளர்ச்சி ஆகாயத்திலிருந்து வந்து விழுந்ததொன்றல்ல. தொடர்ந்து அவர்களது உரிமைகள் மறுக்கப்பட்டதால் ஏற்பட்ட கிளர்ச்சி அது.

புலிகள் கோரும் இடைக்கால நிர்வாகத்தைக் கொடுத்து இனப்பிரச்சினைத் தீர்வில் ஆர்வம்கொண்டு அரசு செயற்பட வேண்டும். புதிய இடதுசாரி முன்னணி இதற்குப்பூரண ஒத்துழைப்பை வழங்கும் - என்றார் அவர்.

புதிய இடதுசாரி முன்னணியின் அரசியல் குழு உறுப்பினர் வி.திருநாவுக்கரசு அங்கு கூறியதாவது:-

இடைக்கால நிர்வாகம் பற்றிய யோசனைகளை புலிகளுக்கு அரசு அனுப்பியுள்ளது. அதனை அவர்கள் ஏற்பார்களா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும் சமாதான பேச்சுக்களின் முன்னேற்றத்தைப் பொறுத்துத்தான் உலக நாடுகளின் கடன் உதவிகள் இலங்கைக்குக் கிடைக்கும்.

உயிர்களையும், நாட்டின் பொருளாதாரத்தையும், அபிவிருத்தியையும் விழுங்கிய யுத்தத்திற்கு நிரந்தரத் தீர்வு கண்டு, சமாதானம் நிலை நாட்டப்பட வேண்டும் கறுப்பு ஜூலை போன்ற பயங்கர சம்பவங்கள் நாட்டில் இனி ஒரு போதும் இடம்பெறக்கூடாது. புலிகள் பொறுமை காத்து சமாதானத்தில் நாட்டம் கொண்டுள்ளனர் - என்றார் அவர்.

நடராசா ஜனகன், அருமைதாசன் முதலானோரும் உரையாற்றினர். என். ரகுமான் நன்றி உரை நிகழ்த்தினார்.

(ஐ)

### திறைசேரி மூலம் சம்பளம் வழங்கப்பட்டதால்

## முப்பதாயிரம் தோட்டத் தொழிலாளர் வேலை நிறுத்தத்தைக் கைவிட்டனர்

கொழும்பு,ஜூலை21

கண்டி மாவட்டத்தில் வேலை நிறுத்தம் செய்துவந்த தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பளம் திறைசேரி மூலம் வழங்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து கடந்த ஒரு வாரமாக வேலை நிறுத்தம் செய்து வந்த சுமார் முப்பதாயிரம் தோட்டத் தொழிலாளர்கள் இன்று முதல் மீண்டும் வேலைக்குத் திரும்புகின்றனர்.

அரசுக்குச் சொந்தமான மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை, அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் என்பவற்றின் கீழ் இயங்கும் 32 தோட்டங்களைச் சேர்ந்த 30 ஆயிரம் தோட்டத்தொழிலாளர்கள் கடந்த 14ஆம் திகதி முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இத்தொழிலாளர்களுக்கான ஜூன் மாத சம்பளம் வழங்கப்படாததனாலேயே இவர்கள் வேலை நிறுத்தத்தில் குதித்தனர்.

தொழிலாளர்களுக்கு சம்பளம் வழங்கத் தேவையான நிதி தோட்ட நிர்வாகத்திடம் இல்லாததனாலேயே சம்பளம் கொடுக்க முடியவில்லை என நிர்வாகத்தினர் கைவிட்டு விட்டனர்.

இவ்விடயம் தொடர்பாக தொழிற் சங்கங்கள் பிரதமரிடம் விடுத்த வேண்டுகோளுக்கு அமைய, பிரதமரின் பணிப்பின் பேரில் திறைசேரி, தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பளத்தை மானியமாக வழங்கியது.

இதனைத் தொடர்ந்து நேற்று முன்தினம் தொழிலாளர்களுக்கான சம்பளம் வழங்கப்பட்டது. (ஐ)

## மின்கம்பத்தில் மோதியது ஓட்டோ; படுகாயமடைந்தவர் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம்,ஜூலை21

வீதியில் சைக்கிளில் பக்கம் பக்கமாகப் பயணம் செய்தவர்களை விலத்திச் செல்ல முயன்ற ஓட்டோ ஒன்று அருகில் இருந்த மின்சாரக் கம்பத்துடன் மோதியது. அதனால், ஓட்டோவில் இருந்தவர் படுகாயம் அடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சையின்போது உயிரிழந்தார்.

கடந்த 16 ஆம் திகதி மாலை மானிப்பாய்ப் பகுதியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் காயமடைந்திருந்த இரத்தினம் செல்வராசா (வயது38) என்ற குடும்பஸ்தரே யாழ். ஆஸ்பத்திரியில் நேற்றுமுன்தினம் இரவு மரணமானவராவார்.

உயிரிழந்தவர் அண்மையில் தான் ஓட்டோ ஒன்றைப் புதிதாகக் கொள்வனவு செய்திருந்தார். சம்பவ தினம் வேறொரு நபர் ஓட்டோவை ஓட்டிச் செல்ல, உயிரிழந்தவர் ஓட்டோவுக்கு பின் சீற்றில் ஒரு காலை வெளியில் நீட்டியபடி அமர்ந்திருந்தார்.

சைக்கிளில் பக்கம் பக்கமாகச் சென்றவர்களை விலத்திய சமயம் ஓட்டோ மின்கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானது. (ஐ-3)

## வேலணை வங்களாவடி முருகன் ஆலய பரிபாலன சபைப் பொதுக்கூட்ட அறிவித்தல்

மேற்படி பொதுக்கூட்டம் எதிர்வரும் ஆடி அமாவாசைத் தினமான 28.07.2003 திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்தக் கூட்டத்திற்கு ஆலயத்தின் நித்திய, நைமித்திய உபயகாரர்கள், வழிபடுநர்கள் அனைவரையும் தவறாது சமுகம் தருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வேலணை வங்களாவடி
முருகன் ஆலய பரிபாலன சபை. - செயலாளர்.
(20533) (31-12-14)

## கண்ணீர் அஞ்சலி

ஈழத்துத் திரையுலகின் தயாரிப்பான "தெய்வந்தந்த வீடு" திரைப்படத்தில் எனது குழுவினருக்கு பின்னணி வழங்கிய நாதஸ்வர மாமேதை

**அமரர் கலாசூரி என்.கே. பத்மநாதனின்**

மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

ஈழத்து செந்தில் - மு. முருகானந்தம்
திரைப்பட நடிகரும்
யாழ். மாநகரசபை ஊழியரும்.
(20506) (26-12-14-31)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



இவ்வுலகு 27 . 05 . 1959 — அவ்வுலகு 01 . 08 . 2002.

### திருமதி நட்சத்திரம் விமலா

ஓராண்டும் ஆயிற்று எம் ஒளிவிளக்கு அணைந்து
தீராத வேதனையால் துவண்டே தவிக்கின்றோம்
மாறாத நினைவால் உம் முகம் மட்டும் எங்கள்
ஆறாத நெஞ்சங்களில் நிழலாடி நினைவூட்டுமே!

இன்று (21.07.2003) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறுகின்ற ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*நீர்வேலி தெற்கு,*
*நீர்வேலி.* (20531) (31-12-14) - அன்புக் கணவர், பிள்ளைகள்.


மட சாலை மாணவர்கள், பெரியோர்கள் பார்த்து மகிழக்கூடிய பக்திப் படம்
கரண், குஷ்பு நடித்த
ஸ்ரீ பண்ணாரி அம்மன் (ரீலீஸ்)
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பி.நே.)
THE ART OF THE WAR
தினசரி 8.45 இரவு
(C28977) (31-12-14)

லஷ்மி சினிமா இணுவில்
அஜித், ஜோதிகா, சிம்ரன் நடித்த
வாலி (ரீலீஸ்)
காட்சி நேரம்: 11.00, 3.00, 7.00 (பி.நே.)
(C/28976) (31-12-14)

லிபேட்டி அச்சுவேலி
விஜய் மற்றும் பிரியங்கா சோப்ரா நடிக்க
தமிழன் (ரீலீஸ்)
தினசரி காட்சிகள் 3.00, 7.00 (புதிய நேரம்)
காலை 11.00 மணிக்கு THE WORLD IS NOT ENOUGH (ரீலீஸ்)
(C/28688) (31-12-14) (007 ஜேம்ஸ் பாண்ட்).





நாகம்ஸ் சுன்னாகம்
அர்ஜுன், கிரண், கவுண்டமணி நடித்த
பரசுராம் (ரீலீஸ்)
தினசரி காட்சி : 11.00, 3.00 (பி.நே.)
(31-12-14)

ராஜா யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தினவெளியீடு
மாதவன், ஜோதிகா நடித்த
பிரியமான தோழி (ரீலீஸ்)
தினசரி: 10.30, 2.30, 6.30, 9.30.
(31-12-14)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி சிவபாக்கியம் கைலாசபிள்ளை

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சிவபாக்கியம் கைலாசபிள்ளை நேற்று (20.07.2003) ஞாயிற்றுக்கிழமை மாத்தளையில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற V.M.V. கைலாசபிள்ளை அவர்களின் அன்பு மனைவியும் புவனேஸ்வரன் (மாத்தளை), மங்களேஸ்வரன் (பிரான்ஸ்), குகதாசன் (மல்லாகம்) ஆகியோரின் அன்புத் தாயாருமாவார்,

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.07.2003) திங்கட்கிழமை மாத்தளையில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : K.குகதாசன் (குகன் – மகன்).
*மல்லாகம்.* (20534) (31-12-14)

## சின்னத்தம்பி சுப்பிரமணியம்

**(இளைப்பாறிய வேலை மேற்பார்வையாளர் - கண்டி)**

மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சுப்பிரமணியம் அவர்கள் நேற்று (20.07.2003) ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00மணியளவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - பாறுப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சிவசம்பு - தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும் நாகேஸ்வரியின் அன்புக் கணவரும் திருமதி சுசீலாதேவி கனகசபை (தட்டெழுத்தாளர், பிரதேச செயலகம், உடுவில்), திருமதி சத்தியதேவி சிவஞானம் (ஆசிரியை, யா/ஏழாலை சைவமகாஜன வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் தாமோதரப்பிள்ளை கனகசபை, வேலுப்பிள்ளை சிவஞானம் ஆகியோரின் அன்பு மாமனாரும் சேதுப்பிரியா, குகன், ரோகினி ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான திருமதி செல்லம்மா கந்தையா, திருமதி இராசம்மா கந்தையா, திருமதி தனலட்சுமி செல்லத்தம்பி ஆகியோரின் அன்புச் சகோதரரும் க.கந்தையா, ஈ.கந்தையா, செ.செல்லத்தம்பி, சி.கந்தசாமி ஆகியோரின் மைத்துனரும் க. சிவப்பிரகாசம், திருமதி இ.உருக்மணிதேவி (காலஞ்சென்றவர்கள்), திருமதி க.சிவபாக்கியம், திருமதி இ.லோகேஸ்வரி, க. வேலாயுதபிள்ளை (ஓய்வு பெற்ற கிராம சேவையாளர்) ஆகியோரின் மாமனாரும் தி.இராசலிங்கம், திருமதி வே.லலிதாதேவி காலஞ்சென்றவரான திருமதி சி.நாகேஸ்வரி ஆகியோரின் சிறிய தந்தையாரும் ஜனார்த்தனன், உருத்திரன், சிவகௌரி, ஞானகௌரி, சத்தியகௌரி, மனோகரன், நிசாகரன், ஸஸிகரன், பஞ்சசீலன், காலஞ்சென்றவர்களான பிரம்மசீலன், மன்மதசீலன் மற்றும் சிவரூபினி, சிவதர்ஷினி, கனகதுர்க்கா வினித்ரா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21-07-2003) திங்கட்கிழமை நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : திருமதி சு.நாகேஸ்வரி (மனைவி).
*நீதிமன்ற ஒழுங்கை,*
*மல்லாகம்.* (20535) (31-12-14)

## கந்தையா நாகசெல்வம்

**(முன்னாள் இயக்குநர் - கரன் எஞ்சினியேர்ஸ்)**

மூளாய் றோட், வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகக் கொண்ட கந்தையா நாகசெல்வம் நேற்று (20.07.2003) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி கந்தையா தம்பதிகளின் மகனும் சீதாலட்சுமியின் அன்புக் கணவரும் ராஜகாந்தன் (ராஜன்), செல்வகாந்தன் (அம்பி), கல்யாணி ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற திருமதி சொர்ணலிங்கம், நாகரத்தினம், கந்தையா, நாகராஜா (ஓய்வு பெற்ற ஆசிரியர்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் துரைசிங்கம் ரமணி (கனடா), லோகேந்திரன் அனுசியா (கனடா), யசோதரா (கொழும்பு) ஆகியோரின் மாமனாரும் மயில்வாகனம் சாந்தினி (கனடா), பரமகாந்தன் (கனடா), அருள்ராஜ் வசந்தினி (லண்டன்), பிறேமினி (கொழும்பு) ஆகியோரின் சிறிய தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.07.2003) திங்கட்கிழமை மாலை 4.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

தகவல்: க.நாகராஜா (சகோதரன்).
*மூளாய் றோட்,*
*வட்டுக்கோட்டை.* (C/29072) (29-12-14-31)

## செல்லையா முத்துப்பிள்ளை

நவக்கிரியைப் பிறப்பிடமாகவும் ஆனைக்கோட்டையை வதிவிடமாகவும் கொண்ட செல்லையா முத்துப்பிள்ளை அவர்கள் நேற்று (20.07.2003) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பையா செல்லையாவின் (ஆசிரியர்) அன்பு மனைவியும் கமலநாதன் (டென்மார்க்), செல்வராணி (மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர் - யாழ்ப்பாணம்), சற்குணதேவி (டென்மார்க்), கனகராசா (தபால் கந்தோர், ஆனைக்கோட்டை) ஆகியோரின் அன்புத் தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.07.2003) செவ்வாய்க்கிழமை காலை 10மணியளவில் ஆனைக்கோட்டையில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: செ.மகாலிங்கம் (மருமகன்)
*மூத்தநாதர் கோவில் ஒழுங்கை,*
*ஆனைக்கோட்டை.* (20536) (29-12-14-31)

# இரண்டாவது உலக மகா யுத்த ஏவுகணை புத்தளத்தில் மீட்பு!

இரண்டாம் உலக மகா யுத்த காலத்தில் உபயோகப்படுத்தப்பட்டவை என்று கருதப்படும் வெடிக்காத மூன்று ஏவுகணைகள் நேற்று புத்தளம் பாலாவி விமான நிலையத்தில் கண்டெடுக்கப்பட்டன.

சுமார் இரண்டரை அடி நீளம் கொண்ட இந்த ஏவுகணைகள் மிகவும் பழைமை வாய்ந்தவையாகவும் கறல் பிடித்தவையாகவும் காணப்பட்டன என்று புத்தளம் பொலீஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆர்.எம்.கே. ரத்னாயக்கா தெரிவித்தார்.

இரண்டாம் உலக மகா யுத்த காலத்தில் இந்த விமான நிலையத்தை நேசநாட்டுப்படைகள் உபயோகித்தன். எனினும், அதன்பிறகு விமான நிலையம் கைவிடப்பட்டது. கடந்த 1998 ஆம் ஆண்டுக்குப் பிறகு இலங்கை விமானப்படை தனது பாவனைக்காக இந்த விமான நிலையத்தைச் சுவீகரித்தது.

இதனையடுத்து, விமான நிலையம் சுத்தம் செய்து அபிவிருத்தி செய்யப்படுகின்றது. அப்போது இவைகள் கண்டெடுக்கப்பட்டன.

தற்சமயம் புத்தளம் பொலீஸ் நிலையத்தில் பாதுகாப்புடன் வைக்கப்பட்டுள்ள இந்த ஏவுகணைகள் பரிசோதனையின் பின் அழிக்கப்படும் எனவும் பொலீஸ் பொறுப்பதிகாரி மேலும் தெரிவித்தார்.

# சாகச மோட்டார் சைக்கிள் பார்வையாளர் மீது பாய்ந்தது

## 50 பேருக்கு மேல் காயம்; 8பேரின் நிலை மோசம்!

எஸ்பிட்டிகல, பிட்டிகல எனும் இடத்தில் மோட்டார் சைக்கிள் சாகச நிகழ்ச்சியில் ஏற்பட்ட விபத்தில் 50 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

நேற்று அதிகாலை ஒரு மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றது.

விளையாட்டு மைதானம் ஒன்றில் ஆழமான கிடங்கில் மோட்டார் சைக்கிள் சாகச நிகழ்ச்சியில் ஈடுபட்டிருந்த வேளை சாகசக்காரரின் மோட்டார் சைக்கிள் வேக எல்லையை மீறி பார்வையாளர்கள் மீது பாய்ந்ததால் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

பார்வையாளர்கள் 30 அடி ஆழமான கிடங்கில் விழுந்ததனால் காயமடைந்தனர். காயமடைந்தவர்களில் சாகசக்காரர் உட்பட 8 பேரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. இந்த விபத்து இடம்பெற்ற வேளை 150 பேர் வரை சாகச நிகழ்ச்சியைப் பார்வையிட்டுக் கொண்டிருந்தனர். (ஐ)

## புலிகளுக்கு சமர்ப்பித்துள்ள திட்ட வரைவு குறித்து

# முஸ்லிம் எம்.பிக்களுடன் இன்று பிரதமர் ரணில் விரிவான பேச்சு!

கொழும்பு,ஜூலை21

வடக்கு - கிழக்கு மாகாணத்துக்கென அரசு முன்வைத்துள்ள தற்காலிக நிர்வாகக் கவுன்ஸில் தொடர்பாகப் பிரதமர் இன்று முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் கலந்துரையாடல் ஒன்றை நடத்தவிருக்கின்றார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் இடைக்கால நிர்வாக சபை கோரிக்கை தொடர்பாக அரசின் திட்டவரைவு புலிகளின் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அது தொடர்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சிகளின் பிரதிநிதிகளுடனும் கலந்துரையாடல்களை நடத்தத் திட்டமிட்டுள்ளார்.

முதற்கட்டமாக நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் வடக்கு - கிழக்கு முஸ்லிம் பிரதிநிதிகளை இன்று அவர் சந்தித்துப்பேசுவார். இந்தச் சந்திப்பு நாடாளுமன்றக் கட்டடத்தில் பிரதமரின் அலுவலகத்தில் நடைபெறும்.

இடைக்கால நிர்வாகம் தொடர்பாக பிரதமர், முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவைக் கோருவதோடு, அவர்களின் மாற்று ஆலோசனைகளையும் பெற்றுக் கொள்வார் எனக்கூறப்பட்டது.

---

## தலைவர் பிரபா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேரடியாக வழிநடத்திப் பெரும் வெற்றியை ஈட்டித்தந்தமைக்காக தலைவர் வே.பிரபாகரனுக்கு வழங்கப்பட்ட வெற்றிக் கேடயத்தை அவரிடம கையளிப்பதற்காக தளபதி கேணல் சூசை எடுத்துச் சென்றார். (ஐ-4)

---

## இத்தாலி செல்ல....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளும் அடங்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இவர்கள் ஒரு மாதத்துக்கு முன்னரே இலங்கைக்கு வந்துள்ளனர் என்று விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

இலங்கையூடாக இத்தாலி செல்ல முற்பட்ட 489 பேர் இம்மாதத்துக்குள் மட்டும் கைது செய்யப்பட்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ-9)


எமது இன்றைய புதிய வீடியோ CD வெளியீடு
★ இனிது இனிது காதல் இனிது ★
(பிரதிகள் உடன் பெறலாம்)
நிதர்ஷன் வீடியோ
ஏழாலை தெற்கு,
மயிலங்காடு. (20539)
T.P.No-0777-178155
0777-964913
(32-12-14)

எமது இன்றைய புதிய வீடியோ CD வெளியீடு
★ சரவணன் நடித்த
தாயுமானவன்
★ மம்முட்டி நடித்த
சோலை மலர்கள்
பிரதிகளை உடன் பெறலாம்.
விஸ்ணு வீடியோ
கோண்டாவில்.

NEW SCIENCE COLLEGE
PHYSICS
2005
"கோண இயக்கம்"
செவ்., வியாழன்-5-6 (P.M.)
ஆரம்பம் 22-07-2003
by:R. குகன் B.Sc.
(20514) (32-12-14)


# தற்காலிக நிர்வாக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லிம் பிரதிநிதிகள் குழு கட்டாயமாகப் பங்குபற்றவேண்டும்.

★இந்த கவுன்ஸிலில் புலிகளுக்கு பெரும்பான்மை இருக்கும். அதேசமயம், பொ.ஐ.முன்னணி நியமிக்கும் உறுப்பினர்கள் உட்பட அரசுத் தரப்பின் உறுப்பினர்களும், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் நியமிக்கும் உறுப்பினர்களும் கவுன்ஸிலில் கனதியான பிரதிநிதித்துவத்தைக் கொண்டிருப்பர்.

★கவுன்ஸிலின் தலைமை தொடர்பாக இரு மாற்று வழிகள் உள்ளன.

முதலாவது - புலிகள் தரப்பிலிருந்தும் அரசுத் தரப்பிலிருந்தும் தலா ஒவ்வொருவரைத் தலைவராகத் தெரிவு செய்வது. அப்படிச் செய்தால் சபைக்கு முன்னால் கொண்டுவரப்படும் எந்த யோசனையையும் தம்பாட்டில் 'வீ'டோ' (நிராகரிக்கும்) அதிகாரம் அவர்கள் இருவருக்கும் வழங்கப்படவேண்டும்.

மற்றது - கவுன்ஸில் உறுப்பினர்களே தமக்குள் தலைவர் ஒருவரைத் தெரிவுசெய்வது. அவ்வாறு செய்தால் -

முஸ்லிம் அல்லது சிங்களவரைப் பாதிக்கும் ஒரு விடயத்தில் கவுன்ஸிலின் பெரும்பான்மை உறுப்பினர்கள் மற்றும் அப்பிரச்சினை அந்த இரு இனத்தில் எதைப் பாதிக்கின்றதோ அந்த இனத்தின் அதிக எண்ணிக்கையான உறுப்பினர்களின் சம்மதமும் இன்றி அந்த விடயம் முன்னெடுக்கப்பட முடியாது.

★பிராந்திய நிர்வாகம் தொடர்பாக பாதுகாப்பு, பொலீஸ், காணி, வருமானம் (வரி) ஆகியவை தவிர்ந்த - ஆனால், புனர்வாழ்வு, புனரமைப்பு மீள்குடியேற்றம் ஆகியவை உள்ளடங்கிய - தற்போது அரசு கையாண்டுவரும் அனைத்து விடயங்களையும் உத்தேச கவுன்ஸில் திறமையாகக் கையாண்டு, பங்குபற்றி, செயற்படுத்துவதற்கு உரிய ஏற்பாடுகள் செய்யப்படும்.

★பங்குபற்றுதல் என்று மேலே குறிப்பிடப்பட்டதில் கொள்கை வகுத்தல், நடைமுறைப்படுத்தல், கண்காணித்தல் ஆகியவையும் அடங்கும்.

★கவுன்ஸிலின தீர்மானங்களுக்கு அமைய அரச இயந்திரத்தைச் செயற்படுத்துவதற்காக விசேட ஆணையாளர் ஒருவர் நியமிக்கப்படுவார். கவுன்ஸிலின் பெரும்பான்மை உறுப்பினர்களின் விருப்புக்கு அமைய அரசு அவரை நியமனம் செய்யும்.

அவர் கவுன்ஸிலில் வாக்களிப்பதற்கு உரிமையற்ற - அதேசமயம், கவுன்ஸிலுக்குப் பொறுப்புச் சொல்பவராக - இருப்பார்.

★தனக்கு வழங்கப்படும் நிதியை சம அளவாகப் பங்கிட்டு செலவிடுவதற்கான தீர்மானத்தை கவுன்ஸிலே மேற்கொள்ளும். தவிரவும், வடக்கு - கிழக்கில் நிர்வாகம், புனர்வாழ்வு புனரமைப்பு, அபிவிருத்திப் பணிகளுக்கு அரச நிறுவனங்கள், தொண்டர் அமைப்புகள், சர்வதேச நிறுவனங்கள் மற்றும தனியார் நிறுவனங்கள் எவ்வாறு செலவிடுவது என்பதை இந்தக் கவுன்ஸிலே அடையாளம் காணும். அத்தோடு, அரசினால் வழங்கப்படும் நிதியும் வடக்கு - கிழக்கு புனரமைப்பு நிதியத்துக்கென உதவும்நாடுகள் வழங்கும் நிதியும் இந்த கவுன்ஸிலின் கீழ் கொண்டுவரப்படும்.

★கவுன்ஸில் தனது பணிகளை மாவட்ட மட்டத்தில் பரவலாக்கி செயற்படுத்துவதற்காக வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள எட்டு மாவட்டங்களிலும் மாவட்டக்குழுக்கள் அமைக்கப்படும். மாவட்டக் குழுக்களின் தலைவரையும் உறுப்பினர்களையும் கவுன்ஸிலே நியமிக்கும் எனினும் இந்த நியமனங்களின்போது அந்தந்த மாவட்டத்துக்கான இன ரீதியான அடிப்படை கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

★கவுன்ஸிலினதும், மாவட்டக் குழுவினதும் தீர்மானங்களுக்கும் முடிவுகளுக்கும் அமைய விடயங்களை சிறப்பாகச் செயற்படுத்தி, நடைமுறைப்படுத்துவதற்காக மாவட்டக் குழு தனது பிரதேசங்களில் தேவைக்கேற்ற மாவட்ட உபகுழுக்களை நியமிக்கலாம்.

★தற்காலிக நிர்வாகக் கவுன்ஸில் தனது வேலைகளைப் பலப்படுத்துவதற்காக பின்வரும் விசேட குழுக்களை நியமிக்கலாம்.

அ) பொருளாதார விவகாரக் குழு.

ஆ) உட்கட்டுமானக் குழு.

இ) அத்தியாவசிய சேவைக்குழு.

★தரப்புக்களின் இணக்கத்துக்கேற்ப இந்த ஏற்பாட்டின் செயற்பாட்டுக் காலத்தைத் தீர்மானிக்கலாம். எனினும், ஆறு மாதங்களுக்கு ஒரு தடவை தரப்புக்கள் நிலைமையை மறுபரிசீலனை செய்துகொள்ளலாம்.

இவையே திட்ட வரைவில் உள்ளடக்கப்பட்டிருக்கும் முக்கிய விடயங்களாகும். (ஐ)

---

## புலிகள் கோருவது....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துக்களையும் உள்வாங்கிக் கொள்ள வேண்டும். இடைக்கால நிர்வாகசபை வடக்கு - கிழக்கு முஸ்லிம்களினதும், சிங்களவர்களினதும் உரிமைகளைப் பாதுகாப்பதாக அமையவேண்டும். இடைக்கால நிர்வாக சபை தொடர்பாக முஸ்லிம் தரப்பில் இருந்து பல யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. அதேபோன்று, வடக்கு - கிழக்கு சிங்கள அமைப்புக்களது கருத்துக்களையும் நாம் பெற்றுக்கொள்ளவுள்ளோம்.

நாட்டில் யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளபோதிலும், சமாதானம் நிலைநாட்டப்படவில்லை. நாட்டில் நிலையான சமாதானம் ஒன்றை ஏற்படுத்துவது மிகக் கஷ்டமான விடயம் இருப்பினும், அதனை ஏற்படுத்துவதற்கு நாங்கள் உறுதியுடன் இருக்கின்றோம்.

- இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். (ஐ-9)


எமது புதிய வீடியோ CD வெளியீடுகள்
★மம்முட்டியின்
சோலை மலர்கள்
★சரவணன் நடித்த
தாயுமானவன்
(பிரதிகள் உடன்பெறலாம்).
வீடியோ விமல், யாழ்ப்பாணம்.

எமது இன்றைய புதிய வீடியோ CD வெளியீடு
★ மம்முட்டி நடிக்கும்
சோலை மலர்கள்
★ சரவணன் நடிக்கும்
தாயுமானவன்
பிரதிகள் உடன் பெற்றுக்கொள்ளலாம்
சோலை வீடியோ விஷன்
பிரதான வீதி நெல்லியடி.
(C29071) (32-12-14-31)


## மரண அறிவித்தல்

### வைத்திலிங்கம் செல்லையா

இன்றைய உதயனின் 14ஆம் பக்கத்தில் வெளியாகியுள்ள வைத்திலிங்கம் செல்லையா என்பவரின் மரண அறிவித்தல் விளம்பரத்தில் காலஞ்சென்ற வைத்திலிங்கம் செல்லையா என்பவர் க.லீலாதேவி, பா.சிவேஸ்வரி, ஆ.மணிவதனி, ப.சிவாசினி, க.சுமதி (ஆசிரியர் பயிற்சி கலாசாலை, கோப்பாய்) ஆகியோரின் அன்பு மாமனாரும் என்பதைச்சேர்த்து வாசிக்கவும்.

*அளவெட்டி.*

தகவல்:
செ.கணேந்திரன
(மகன்)

(20540) (29-12-14-31)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சிவசுப்பிரமணியம் கலைச்செல்வி

புங்குடுதீவு, 8ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், மானிப்பாய் வீதி, ஓட்டுமடம், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவசுப்பிரமணியம் கலைச்செல்வி நேற்று (20.07.2003) ஞாயிற்றுக்கிழமை இரவு காலமானார்.

அன்னார் சிவசுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் விதுரனின் அன்புத் தாயாரும் நடராசா (ஓய்வுபெற்ற பரிசாரகர், யாழ். போதனை வைத்தியசாலை) - பரமேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகளும் தமிழ்ச்செல்வன் (பிரான்ஸ்), செந்தமிழ்ச்செல்வி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் யோகரமணத்தின் (லண்டன்) பெறாமகளும் தையல்நாயகியின் (லண்டன்) மருமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.07.2003) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று. பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*189, மானிப்பாய் வீதி,*
*ஓட்டுமடம், யாழ்ப்பாணம்.*

தகவல் :
திரு.சிவசுப்பிரமணியம்
(சிவம்-கணவர்)
திரு. நடராசா (தகப்பன்).

(20537) (31-12-14)

## திருமதி ஆறுமுகம் தங்கம்மா

### (ஓய்வுபெற்ற ஊழியர். யாழ். அரசினர் வைத்தியசாலை)

கோப்பாய் தெற்கு, முனிகோவிலடியைச் சேர்ந்த ஆறுமுகம் தங்கம்மா அவர்கள் நேற்று (20.07.2003) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் முத்தையா காலஞ்சென்றவர்களான சுப்பையா, அப்புத்துரை, சின்னத்தங்கம், செல்லம்மா, கனகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் பூபதி (ஓய்வுபெற்ற ஊழியர், யாழ். போதனா வைத்தியசாலை), செல்வராஜா (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் நடராசா, வசந்தராதேவி (கனடா) ஆகியோரின் மாமியாரும் ஸ்ரீவதனி, தேவகுமார், கஜேந்தினி (கனடா), கமலகீதன் (கனடா) ஆகியோரின் பேர்த்தியும் அயந்தன், கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி மாணவர்களான வதனகுமார், தினேஸ்குமார், சியாம்குமார், சமீனா (வேம்படி மகளிர் கல்லூரி மாணவி) ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.07.2003) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ந.ப. 12.00 மணியளவில் இருபாலை கிழக்கு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*முனி கோவிலடி,*
*கோப்பாய் தெற்கு.*

தகவல் :
ஆ.செல்வராஜா
(மகன் - கனடா).

(20538) (31-12-14)

## திருமதி பரமேஸ்வரி சூரியகுமார் (கிளி ரீச்சர்)

### (ஆசிரியர், சாந்தநாயகி வித்தியாசாலை, மட்டுவில் -சாவகச்சேரி)

சாவகச்சேரி, கல்வயலைப் பிறப்பிடமாகவும் சாவகச்சேரி தாமோதரம் பிள்ளை வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட பரமேஸவரி அவர்கள் நேற்று (20.07.2003) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் சூரியகுமாரின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சுந்தரம் - இரத்தினம் தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற யோகேஸ்வரன் மற்றும் காமாட்சி (முன்னாள் ஆசிரியை, சாவகச்சேரி இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்பு மருமகளும் பத்மாதேவியின் அன்புச் சகோதரியும் சண்முகதாஸ், ஜெயக்குமார் (உதவிப்பதிவாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்), கலாயினிசித்திரா ஆகியோரின் மைத்துனியும் வாணி (மக்கள் வங்கி, சாவகச்சேரி), மேனகா (மாணவி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி), ரம்மியா (மாணவி, சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை) ஆகியோரின் சிறிய தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.07.2003) திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு சாவகச்சேரி தாமோதரம்பிள்ளை வீதியிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கண்ணாடிப்பிட்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தாமோதரம்பிள்ளை வீதி,*
*சாவகச்சேரி.*

தகவல்:
யோ. சூரியகுமார் (சுகு)
(கணவர்).

(50541) (29-12-14-31)


இலங்கைச் சட்டக் கல்லூரி நுழைவுப் பரீட்சைக்கான கருத்தரங்கு

இலங்கைச் சட்டக் கல்லூரி சட்ட மாணவர் இந்து மகாசபையும் "உதயன்" பத்திரிகை நிறுவனமும் இணைந்து இவ்வாண்டு செப்ரெம்பர் மாதம் நடைபெறவுள்ள இலங்கைச் சட்டக் கல்லூரி நுழைவுப் பரீட்சைக்கு யாழ்ப்பாணத்திலிருந்து தோற்றவுள்ள மாணவர்களுக்காக பரீட்சை தொடர்பான கருத்தரங்கு ஒன்றினை யாழ்.நகரில் நடத்துவதற்குத் தீர்மானித்துள்ளன. ஓகஸ்ட் மாத இறுதியில் கருத்தரங்கு நடத்தப்படும்.

மேற்படி கருத்தரங்கில் பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன் (25.07.2003) "உதயன்" பத்திரிகை நிறுவனத்தில் அல்லது 071 - 2386070 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பெயர்களைப் பதிவுசெய்யும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

(C29063) (32-12-14-31)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 21.07.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.